நன்றி - நூலகத்திட்டம்



## பிந்துனுவெவ சிங்களப் பத்திரிகைகளின் திரிப்புக்கள்




## வ.அ.வின் கொட்டியாரக்கதைகள்!



## முஸ்லிம் மக்களின் முன்னுள்ள தேவை என்ன?



## நெடுமாறனுக்குத் தெரிந்தவையும் தெரியாதவையும்



## சந்திரிகாவின் சுதந்திரதின விழாக் குண்டுகள்!



# பிரிட்டன் புலிகளைத் தடை செய்யுமா?

SARINIHAR

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

நன்றி - நூலகத்திட்டம்



# பணம் அல்ல பிணம் வருகின்றது!

மத்திய கிழக்கிலிருந்து இலங்கைக்கு வெளிநாட்டு வருவாய் வந்ததோ இல்லையோ இப்போது பிணங்கள் வருவது தான் அதிகரித்து வருகிறது. இது பற்றி அரசோ அல்லது வேலைவாய்ப்புஏற்பாடுகளை மேற்கொள்ளும் நிறுவனங்களோ கவலப்பட்டதாகத் தெரியவில்லை. பாருங்கள் புள்ளிவிபரத்தை. மத்தியகிழக்கு நாடுகளில் தொழில் வாய்ப்புப் பெற்றுச் சென்று அங்கு மரணமடைந்த 18 இலங்கையர்களின் சடலங்கள் கடந்த மாதம் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவற்றில் 12 வீட்டுப் பணிப்பெண்களின் சடலங்கள் என்று கட்டுநாயக்க விமான நிலைய சுகாதார அதிகாரி தெரிவித்துள்ளார்.

ஏனைய 6 சடலங்களும் ஆண்களுடையது. இவர்கள் வாகன விபத்து சுகயீனம் என்பவற்றால் மரணமானவர்களென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணிப்பெண்களின் சடலங்கள் துன்புறுத்தல், வெட்டுக்காயங்கள் மற்றும் எரிகாயங்களுடனும் காணப்பபட்டதாகவும் அவ்வதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைதேடிச் சென்ற 4000 யுவதிகள் கொடுமைகள் காரணமாகக் கடந்த ஆண்டு நாடு திரும்பினர் என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத் தலைவர் ஜயசேன பெரேரா தெரிவித்துள்ளார்.

எச்.ஐ.வி.வைரஸ் நோயினால் பாதிக்கப்பட்ட பெண்களும், சித்திரவதைக்குள்ளான பெண்களுமான 297 பேர் அண்மையில் நாடு திரும்பினார்கள்.

கடந்த ஆண்டு நாடு திரும்பிய 4000 பணிப்பெண்களில் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட 26 பெண்களும், தொழில் வழங்கியவரின் மூலம் கர்ப்பம் தரித்து குழந்தைகளுடன் 14 பெண்களும், அங்கவீனர்களான 54 பெண்களும் அடங்குவர். இதேவேளை 104 பேர் மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இவை அனைத்தும அரசிற்குக் கிடைத்த வெளித் தெரிய வந்த புள்ளிவிபரங்கள். கிடைக்காதவை, வெளித் தெரியாதவை எவ்வளவோ யாரறிவார்? ⊘

# பொ.ஐ.முவின் துப்பாக்கி ஜனநாயகம்!

ஐக்கிய தேசியக் கட்சியினர் நடத்தி வரும் மக்கள் சக்தி பாதயாத்திரைக்கு கேகாலையிலிருந்து லொறி ஒன்றில் சென்று கொண்டிருந்தவர்கள் மீது துப்பாக்கி நபர்கள் மொலகொட என்னுமிடத்தில் வைத்து பெப்.5ம் திகதியன்று காலை துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.இதனால் லொறிக்குப் பலத்த சேதம் ஏற்பட்டது. இதையடுத்து கும்பலொன்றினால் சாரதி தாக்கப்பட்டதனால் படுகாயமடைந்த நிலையில் அவர் குருணாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விலைவாசி அதிகரிப்பக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அரசைப் பதவி விலகுமாறு கோரியும் இந்த பாதயாத்திரை நடத்தப்பட்டு வருகின்றது.

ஊர்வலத்தில் விலைவாசி அதிகரிப்பைச் சித்திரிக்கும் படங்கள் மற்றும் பதாதைகளுடன் பல ஊர்திகள் முன்னே செல்வதுடன் ஒலிபெருக்கியிலும் மக்களைக் கவரக்கூடிய வாசகங்கள் ஒலிபரப்பப்படுகின்றன. அத்துடன் சவப்பெட்டிகளும் ஊர்வலத்தில் செல்பவர்களால் ஏந்திச் செல்லப்படுகின்றன.

இந்தப் பாதயாத்திரை தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் காமினி அத்துக்கோரள 'மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமெனக் கூறும் மக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு அதிகளவு பணத்தைப் பயன்படுத்துகின்றது.

அதிகரித்த வாழ்க்கைச் செலவு காரணமாக மக்கள் எதிர்நோக்கும் மோசமான சூழ்நிலை காரணமாக ஐக்கிய தேசியக் கட்சி வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்துவது கண்டு இந்த அரசு கலக்கம் அடைந்துள்ளது. இப்போராட்டம் மக்கள் சக்தியாக மாறக்கூடும் எனவும் அரசாங்கம் அஞ்சுகின்றது. எமது போராட்டத்திற்கு மக்களின் பூரண ஒத்துழைப்புக் கிடைத்து வருகின்றது. இதனால் எமது போராட்டம் இறுதிவரை வெற்றியை நோக்கிச் செல்லும்.

பொதுஜன ஐ கிய முன்னணி அரசாங்கத்திற்கு உரிய செயற்திட்டமோ, நிருவாகத் திட்டமோ இல்லை. எனவே மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க இந்த அரசாங்கத்தினால் முடியா' என்று தெரிவித்துள்ளார்.

நானடகாவது நாளாக பாதயாத்திரை தொடர்ந்து நடைபெற்றுவரும் அதேவேளையில் கொழும்பு கண்டி வீதியில் ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைக் கிண்டலடிக்கும் வகையிலான சவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. ஊர்வலத்தில் வந்தோர் அவற்றைக் கிழித்தெறிந்தனர். ⊘

# புலிச்சாயம் பூச வேண்டாம் -கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கம் கோரிக்கை!

தமிழீழ விடுதலைப்புலிகள் அறிவித்துள்ள ஒருதலைப்பட்சமான போர் நிறுத்தத்திற்கு அரசு சாதகமான பதிலை அளித்து நோர்வே அரசின் மத்தியஸ்தத்துடன் இனப்பிரச்சினைக்கு நீதியான தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வு காண்பதற்கு இனியும் தாமதிக்காது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கிழக்கிலங்கைச்செய்தியாளர் சங்கத்தின் 20வது வருடாந்த மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலை மண்டபத்தில் ஏ.எல்.-எம்.சலீம் தலைமையில் இம்மாநாடு பெப்.3ம் திகதி நடைபெற்றது.

அத்தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அரசு இனியும் தாமதிக்காது அரசியல் தீர்வு முயற்சியில் ஈடுபடுவதன் மூலம் யுத்தத்தினால் அனுதினமும் அல்லலுறும் மக்கள் நிம்மதியாக வாழ வழி செய்ய வேண்டும்.

தமிழ் மக்களின் அடிப்படைக்கோரிக்கையான சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி தமிழ் பேசும் மக்கள் நடத்தி வரும் வெகுஜனப் போராட்டங்களுக்கு "புலி"சாயம் பூசும் அபாயகரமான சூழல் ஒன்று அண்மைக் காலத்தில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இதனைத் தவிர்த்து வெகுஜன போராட்டங்களைக் கருத்தில் எடுத்து அதற்கு தலைசாய்த்து நாட்டில் அமைதியும் சமாதானமும் நீதியான தீர்வும் ஏற்படுத்த அரசு முயல வேண்டும். ஏற்கனவே சாத்வீகப் போராட்டங்களைக் கவனத்தில் கொள்ளாது கடந்த கால அரசுகள் செயற்பட்டு வந்தமையாலேயே ஆயுதப்போராட்டம் முனைப்புப் பெற்று இன்று விஸ்வரூபமெடுத்துள்ளது என்பதை நினைவூட்ட விரும்புகிறோம்.

பிரித்தானியா அரசு விடுதலைப்புலிகளை தடைசெய்யக்கூடாது என்று வன்மையாகக் கோருகிறோம். அதேவேளை விடுதலைப் போராட்ட இயக்கங்களையும், பயங்கரவாத இயக்கங்களையும் இனங்காணும் போது தெளிவான வரையறையை கடைப்பிடிக்கப்படவேண்டும். விடுதலைப் போராட்ட இயக்கங்களையும் பயங்கரவாத இயக்கங்களையும் ஒன்றாகக் கருதி சிக்கலாக்கும் வகையில் செயற்படாது இனவிடுதலைக்காக போராடும் இயக்கங்கள் பற்றி தெளிவான நிலைப்பாட்டை சர்வதேச சமூகம் எடுக்க வேண்டும். விடுதலைப்புலிகள் தமிழ் தேசிய இனத்தின் விடுதலைக்காக போராடும் விடுதலை இயக்கம் என்பதை சர்வதேச சமூகம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்று கோருகின்றோம்.

எழுந்தமானமாக விடுதலை இயக்கங்களையும் பயங்கரவாத இயக்கங்களையும் ஒன்றாக கருதுவதன் மூலம் விடுதலைக்காக போராடும் இனங்களின் குரல் வளையை நசிக்க கூடாது என்றும் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்க தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர் இரா.துரைரத்தினம். உபதலைவர்கள் ஜி.நடேசன் , எஸ். ஜெயானந்தமூர்த்தி, செயலாளர் சண். தவராசா, உபசெயலாளர் .ஏ.எல். பழுளுல்லா, பொருளாளர் பா.அரியநேந்திரன்.

நிர்வாக சபை உறுப்பினர்களாக எஸ்.பேரின்பராசா, ஏ. புவாத், தா.வேதநாயகம் , எஸ்.பௌசியா, பா.ராதிகா, பா.வேணுகோபால், வெ.ஜசிகரன், ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர் ஆலோசகர்களாக எஸ்.எம். கோபாலரத்தினம், டி.சிவராம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். ⊘

## கொழும்புக்கு வர வந்தவர்கள் 512வது படைப்பிரிவில்

யாழ்ப்பாணத்தில் வடமாகாண புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபை அலுவலகம் இயங்கி வரும் மணியம் கட்டிடத்திற்கு அருகில் வைத்து டிச.31ம் திகதி புதன்கிழமை அன்று அச்செழு பகுதியைச் சேர்ந்த பொன்னுத்துரை சசிக்குமார் (22), ஜீவராஜா ரஜீகரன் (21), நல்லித்தம்பி சிறிரங்கன் (21) ஆகிய மூன்று இளைஞர்களையும் படையினர் கைது செய்துள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் பெப்.2ம் திகதியன்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் கொழும்புக்குச் செல்வதற்காக கப்பல் பயணச் சீட்டுப் பெறுவதற்கு வடமாகாண புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபை அலுவலகத்திற்குச் சென்ற போதே அங்கு சென்ற படையினர் இவர்களைக் கைது செய்துள்ளனர்.

இவர்கள் தற்போது 512 ஆவது படைப்பிரிவின் தலைமை அலுவலகத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் உறவினர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

## கடற்படையினரின் தாக்குதல்!

நாயாறு முதல் நாகர் கோவில் வரையான கடற்கரைப்பகுதிகளில் பெப்.4ம் திகதியும், 5ம் திகதியும் சிறிலங்கா விமானப்படையினரும கடற்படையினரும் சரமாரியான தாக்குதல்களை நடத்தியுள்ளதாகத் தெரிய வருகிறது.

இத்தாக்குதல்களினால் மீனவர் ஒருவர் கொல்லப்பட்டார். படகுகளும் மீன்பிடி உபகரணங்களும் அழிக்கப்பட்டுள்ளன.

முல்லைக்கடற்பரப்பில் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் 2 படகுகளில் மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்த வேளை அப்பகுதிக்கு வந்திருந்த சிறிலங்கா கடற்படையின் பீரங்கிப் படகுகள் மீது மீனவர்கள் மீது சரமாரியான பீரங்கித் தாக்குதல்களை நடத்தின. இதன் போது முல்லைத்தீவு வட்டுவாகலைச் சேர்ந்த யோகேந்திரராசா பார்த்தீபன்(17) என்பவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டுள்ளார்.

மீனவர்களின் இரண்டு மீன்பிடிப் படகுகள் வெளிஇணைப்பு இயந்திரம் என்பன சேதமாகி கடலில் மூழ்கின. இப்படகுகளில் சென்ற மேலும் 3 பேர் நீந்திக் கரை சேர்ந்தனர். முத்துராசா தங்கன்(25) மற்றும் செல்வபுரத்தை சேரந்த ஆறுமுகம் சசி, கந்தையா அருந்தவராசா ஆகியோரே நீந்திக் கரை சேர்ந்தவர்களாவர்.

## குடியிருப்புப் பகுதிகள் மீது குண்டு வீச்சு!

சுண்டிக்குளம் நல்லதண்ணித்தொடுவாய் பகுதி மீனவர் குடியிருப்புப் பகுதிகள் மீது சிறிலங்கா வான்படை மிக்-27 ரக விமானங்கள் பெப்.5ம் திகதி குண்டுத் தாக்குதல்களை நடத்தியுள்ளன. மதியம் 12 மணிக்கும் ஒரு மணிக்கும் இடையில் குண்டுகளை வீசின. சுண்டிக்குளம் அத்தா கடையடி மற்றும் கட்டிடப்பகுதிகளில் குண்டுகள் வீழந்து வெடித்தன.

மீண்டும் பிற்பகல் 2 மணிக்கும் 2.30 மணிக்கும் இடையே வந்த மிக் விமானங்கள் நல்லத்தண்ணித்தொடுவாய் மக்கள் குடியிருப்புப் பகுதிகளை அண்டி இரண்டு குண்டுகளை வீசின என்றும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## வவுனியாவைப் போல் கண் விழித்தால் என்ன?

வவுனியா சுகாதார அதிகாரிகளும், வவுனியர் நகர சபை, வவுனியா தெற்கு பிரதேச சபை அதிகாரிகளும் அடங்கிய குழுவினர் வவுனியா பேக்கரிகள் மீது மேற்கொண்ட திடீர்சோதனையின் பின் ஏற்கனவே வழங்கப்பட்ட சுகாதார வரைமுறைகளுக்கு அமைந்த சிபாரிசுகளின்படி திருப்திகரமாக திருத்தி அமைக்காத 13 பேக்கரிகளின் பாண் உற்பத்தியை உடனடியாக நிறுத்த உத்தரவு தரும்படி வவுனியா அரச அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில் இந்த திடீர் பரிசோதனையின் போது ரக்ஸ் தூள் தயாரிப்பதற்காக பல பேக்கரிகளில் வைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான பழைய பாண், சுகாதாரத்திற்குக் கேடுவிளைவிக்கும் நிலையான உணவுப் பொருட்கள் என்பனவும் இந்த குழுவினரால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. ஒரு உழவு இயந்திர பெட்டி நிறைய பழைய பாண் கைப்பற்றப்பட்டது.

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஆறுமுகம் கேதீஸ்வரன் தலைமையில் பொது சுகாதார பரிசோதகர்களான கே.மே.ஜெயா, என்.கேதீஸ்வரன், என்.பாலமனோகரன், எஸ் கிரிதரன், கே.தியாகலிங்கம் மற்றும் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச செயலாளர் திருமேனி, வவுனியா நகரசபை அதிகாரி கெங்காதரன் ஆகியோர் இக்குழுவில் அடங்கியிருந்தனர்.

வவுனியாவில் அதிகாரிகள் கண்விழித்திருப்பது மகிழ்ச்சி தருகிறது. ஏனைய இடங்களிலும் இதனைப்'பின்பற்றி அதிகாரிகள் கண்விழித்தால் என்ன?

## உள்ளூராட்சிசபைத் தேர்தல் இப்போதைக்கு இல்லை!

சிறிலங்காவின் உள்ளூராட்சித் தேர்தல் முறையை மறுசீரமைப்பது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதால் அதுவரை தேர்தல் நடத்தப்படமாட்டாது எனவும் அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி தேர்தல் நடைபெறும் எனவும் மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சர்நந்தமித்திர ஏக்கநாயக்க தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தலை பிற்போடாமல் உரிய காலத்தில் நடத்தப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி என்பன அரசாங்கத்தைக் கோரி வருகின்றன. தேர்தல் நடத்தினால் பொதுஜன ஐக்கிய முன்னணி தோல்வியைச் சந்திக்குமென்பதாலேயே தேர்தலைப் பின்போட தீர்மானித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

நன்றி - நூலகத்திட்டம்



# முஸ்லிம் காங்கிரஸ்- தே.ஐ.மு பதவிப் பங்கீட்டின் முதல் அத்தியாயம்!

– பையூஸ் அகமட்

ஒரே தலைமையின் கீழ் இருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தேசிய ஐக்கிய முன்னணி ஹக்கீம் - பேரியலுக் கிடையே பங்கிடப்பட்ட முதலாவது அத்தியாயம்!

அஷ்ரஃப்பின் மரணத்தின் பின் ஏற்பட்ட முஸ்லிம் காங்கிரஸ் உட்கட்சி அதிகாரத் தலைமைத்துப் போட்டியின் முதலாவது அத்தியாயம் ஒரே தலைமையின் கீழ் இதுவரை இருந்து வந்த இரண்டு பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளை தனித்தனி தலைமைகளாக கைமாறிக் கொண்டதன் ஊடாக இந்தப்பிளவு உறுதி செய்யப்பட்டு, ஹக்கீமும், பேரியலும் முறையே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தேசிய ஐக்கிய முன்னணி ஆகியவற்றின் தலைவர்களாக ஆக்கப்பட்டுள்ளனர்.

இந்த முடிவு மக்களைப் பொறுத்தளவில் ஒரு சமரச முயற்சியாகவும் வெளி அரங்கில் இதுவரை இருந்து வந்த உட்கட்சி அதிகாரப் பனிப்போர் முடிவுக்கு வந்துவிட்டதுமான ஒரு தோற்றப்பட்டைக் காண்பிக்கும் ஒரு மாயையேயன்றி வேறொன்றுமில்லை என்பது அரசியல் தெரிந்தவர்களுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தேசிய ஐக்கிய முன்னணி ஆகியவற்றின் அரசியல் யாப்பு, கட்சி நிலவரம் என்பன தெரிந்தவர்களுக்கும் தெரிந்த கதைதான்.

மறைந்த அஷ்ஃரப் தலைமையில் கடந்த 13 வருடங்களுக்கு மேலாக கட்டி- வளர்க்கப்பட்டு அவரது மரணத்தின் பின் முஸ்லிம் காங்கிரசுக்குள் ஏற்பட்ட துன்பவியல் நாடகத்தின் முதல் அத்தியாயமே மிகத்தெளிவான இருதுருவ நிலையை ஏற்படுத்தி இருக்கிறது. கட்சிக்குள் ஹக்கீமை ஆதரித்தவர்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசாகவும், பேரியலை ஆதரித்தவர்கள் தேசிய ஐக்கிய முன்னணியாகவும் ஆகிவிட்டனர்.

இத்தலைமைக்கட்சிப் பங்கீடானது இம் முடிவு எடுக்கப்பட்ட கணத்திலிருந்து கட்சியின் எதிர்கால நடவடிக்கைகளை மிகவும் இக் கட்டான நிலைக்குத் தள்ளிவிட்டிருக்கிறது. இதற்கான பிரதான காரணம் கடந்த தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் எந்தப் பிரதேசத்திலும் போட்டியிடாது அம்பாறை, திருமலை மாவட்டங்களில் பொதுஜன ஐக்கிய முன்னணியிலும், மட்டக்களப்பு, வன்னி, கண்டி மாவட்டங்களில் தேசிய ஐக்கிய முன்னணியிலுமே போட்டியிட்டது. (பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்கள்) பொ.ஐ.முன்னணிக்கும், தேசிய ஐக்கிய முன்னணிக்கும் தேர்தல் ஒப்பந்தம் மேற்கொள்ளப் பட்டது. தற்போதைய முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் றவூப் ஹக்கீம் அவர்களும் கண்டியில் தேசிய ஐக்கிய முன்னணியிலேயே போட்டியிட்டார்.

அடுத்தாக கட்சியின் தேர்தல் சின்னமாக மு.காவின் சின்னமான மரம் - தேசிய ஐக்கிய முன்னணிக்கு கைமாற்றம் செய்யப்பட்டு அஷ்ரஃப் அவர்களால் மு.கா செயலிழக்கச் செய்யப்பட்டு தேசிய ஐக்கிய முன்னணியே சட்ட ரீதியான பலமான கட்சியாக மாற்றப்பட்டது. தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரே முஸ்லிம் காங்கிரசின் தலைவராகவும் இருக்க வேண்டுமென தேசிய ஐக்கிய முன்னணியின் அரசியல் யாப்பும் அஷ்ரஃப்பினால் எழுதப்பட்டது.


இங்குதான் நிலைமை மிகச் சிக்கலானதாக மாற்றப்பட்டுள்ளது. முஸ்லிம் மக்களிடையே முஸ்லிம் காங்கிரஸ் பிரசித்த கட்சியாக உள்ள அதேநேரம் - சட்டரீதியில் பாராளுமன்ற பலத்தின் அடிப்படையில் தேசிய ஐக்கிய முன்னணியே பலம் பொருந்தியதாக உள்ளது. இதனால் தான் - றவூப் ஹக்கீம் அவர்கள் தேசிய ஐக்கிய



முன்னணித் தலைவியாக பேரியலை ஏற்றுக் கொண்டாலும் தேசிய ஐக்கிய முன்னணி செயலாளர் பதவியிலிருந்து விட்டுக் கொடுக்க முடியாதவராக இருக்கிறார்.

அஷ்ரப்பின் மரணம் நிகழ்ந்தவுடன் கட்சிக்குள் தலைமைத்துவப் போட்டி உச்சநிலையை அடைந்ததும், அரசியல் அதி உயர்பீடத்தினால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைமைத்துவ்மாக இணைத் தலைமைத்துவம் ஏற்கப்பட்டது. றவூப் ஹக்கீமைப் பொறுத்தவரையில் தேசிய அரசியலில் அவருடைய பாத்திரத்தை அது மிகவும் பின் தள்ளியே விட்டது எனலாம்.

கட்சி அரசியல் அதிஉயர் பீடத்தினால், ஒரே தலைமையை உருவாக்கும் முடிவு எடுக்க முடியாத சூழல் ஏற்பட்ட போது பெப்ரவரி 11இல் பேராளர் மாநாட்டைக் கூட்டப் போவதாக பகிரங்கமாக அறிவித்த றவூப் ஹக்கீம் அவர்கள் பேராளர் மாநாட்டை கூட்டும் முடிவினைக் கைவிட்டு பாயிஸ் முஸ்தப்பாவின் சட்ட ஆலோசனையின்படி - சமரச முயற்சிக்கு உடன்பட்டார். கட்சியின் யாப்பிலும் தேசிய ஐக்கிய முன்னணி, முஸ்லிம் காங்கிரஸ் குழப்பத்தினாலுமே அவர் இம்முடிவுக்கு வர நேர்ந்தது.



தேசிய ஐக்கிய முன்னணி யாப்புப் பிரச்சினையும் கட்சிகளின் சின்னம் சம்பந்தமான பிரச்சினையும் (மரம், புறா) கட்சிக்குள் தீர்க்கப்பட்டு யாப்பு மாற்றங்கள் செய்யப்பட்டதன் பின்பே தான் - தெளிவான அதிகாரம் யார் கையில் என்ற முடிவுக்குவர முடியும்.

இருகட்சியின் யாப்புகளை தீர்மானிப்- பதற்கு அரசியல் அதி உயர் பீடத்தைக் கூட்டும் போது தான் அடுத்த கட்டச் சிக்கல் வெளி உலகத்திற்கு தெரிய வரும்.

தேசிய அரசியலைப் பொறுத்தவரை றவூப் ஹக்கீம் அவர்கள் மிகத்தெளிவாக சந்திரிகாவின் அரசில் மிகவும் வெறுப்படைந்தே இருக்கின்றார். பேரியலைப் பொறுத்தவரை சந்திரிகாவின் தயவில் காலத்தை ஓட்டிவிடலாம் எனக் கணக்குப் போட்டிருக்கிறார். இவ்விருவரும் ஒரு நாளும் சமரசத்திற்கு வாய்ப்பினை தந்து விடப்போவதில்லை. கடைசியில் குரங்கு அப்பம் பிய்த்த கதை தான் முஸ்லிம் காங்கிரஸ்க்குள் நிகழப்போகிறது.

# பொலிசாருடைய அடாவடித்தனம் பற்றி அவருக்குத் தெரியாதோ?

கடந்தவாரத் தினசரி ஒன்றில் ஒரு செய்தியைப் பார்க்க நேர்ந்தது. அதில் மன்னாரில் தமிழ்க் குழுக்களின் கட்டாய வரிவிதிப்பு பற்றியும் (இது பற்றி ஏற்கெனவே சரிநிகரில் வெளியாகியிருந்தது.) அவர்களின் அடாவடித்தனங்கள் பற்றியும் தமக்குப் புகார்கள் வருவதாகவும் சில வேளைகளில் அவற்றை தமிழ்க் குழுக்களின் மிரட்டல் காரணமாக பொதுமக்கள் வாபஸ் பெறுவதாகவும் பொலிஸ் அத்தியட்சகர் அச்செய்தியில் கூறியிருந்தார்.

அது ஒரு பக்க உண்மை. மறுபக்க உண்மையை அவர் பேசுவாரா?

அதாவது பொலிசாரின் அடாவடித்- தனங்கள் பற்றி அவர் மூச்சுவிடவில்லை. உண்மையில் அவற்றைச் சொல்லி மாளாது. மன்னாரைப் பொறுத்தவரை பாஸ்நடை முறைகள் மிகவும் கெடுபிடியானவை. 3 நாள் பாஸ், 15 நாள், ஒரு மாதம் மற்றும் 3மாத பாஸ் என வதிவிடப் பாஸ்கள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன. பாஸ் எடுக்கச் சென்றால் பாஸ் அலுவலகத்தில் உள்ள (கூட்டுறவு செயலகத்தில் இயங்கும்) பொலிசார் பாஸ் பிரிவுக்கு (3நாள், 3மாதம்) ஏற்ப தங்களுக்கு 500 ரூபா தொடக்கம், 1000 ரூபா வரையிலான பொருட்கள் வாங்கி வரும்படியும் அப்படி வாங்கித் தராவிட்டால் உங்களுக்கு பாஸ் இல்லை என விரட்டுவதும் வெளித் தெரியாத உண்மைகள்.

அத்துடன் கொழும்பில் இருந்து வியாபாரிகள் கொண்டு வரும் பொருட்களை சோதனையிடும் இடத்தில், வியாபாரிகளை மிரட்டி பெறுமதியான பொருட்களை பொலிசார் எடுத்து விடுவார்கள். இதனை வியாபாரிகள் ஆட்சேபித்தால் கொண்டு வரும் பொருட்- களுக்கு அனுமதி தேவை. அனுமதியின்றி பொருட்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று கூறிவியாபாரிகளைக் கைது செய்து ஆயிரக்கணக்கில் கறந்த பின் அவர்களை விடுதலை செய்து விடுவார்கள்.

உண்மையில் மன்னார் மக்களுக்கு இருபக்கநெருக்கடி. ஆனால் பொலிஸ் அத்தியட்சகரோ வேறுபக்கம் விரலை நீட்டி விட்டு பொலிஸாரைப் பாதுகாத்துக் கொள்ளப் பார்க்கிறார்.

இது சரியா?

# சொல்ல வல்லாயோ?

சிறிலங்கா அரசாங்கமும் அதன் கைக் கூலிகளும் தமிழ் மக்களின் தியாகங்களை கொச்சைப் படுத்துவதிலும், தமிழ் மக்களின் மூளையை மழுங்கடிக்கும் செயற்பாடுகளிலும் நாளுக்கு நாள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இவை சுவரொட்டிகள், துண்டுப்- பிரசுரங்கள், மற்றும் அரச ஊடகங்கள் என்பன மூலம் புத்திசாலித்தான முறையில் மேற்கொள்ளப்படுகின்றன.

அந்த வரிசையில் தற்பொழுது மன்னார் பகுதியில் கையடக்க பொக்கட் கலண்டர்கள் உலவ விடப்பட்டுள்ளன.

இக் கையடக்க கலண்டர்கள் படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பெரு நிலப்பரப்பில் இருந்து படை- யினரின் கட்டுப்பாடு பகுதிக்குள் வரும் பொது மக்களுக்கு முன்னரங்க காவலரண் பகுதியில் வைத்து வழங்கப்படுகின்றன.

அதன் ஒரு பகுதியில் நவீன சர்வாதிகாரியான சந்திரிகா அம்மையாரின் படமும், 'நாம் அனைவருமே சாதி, மத, குல பேதங்களை மறந்து எமது பன்மையில் ஒருமை கண்டு ஒரு புதிய நாட்டை கட்டியெழுப்ப இடையறாது உழைப்போம்.வாரீர் திரண்டு' என்ற அறை கூவலும், மறுபகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சின்னமும் "புலிகளின் தாகம் தமிழர்களின் உயிர்" என்ற வாக்கியமும் அச்சிடப்பட்டுள்ளது.

இதில் வேடிக்கையான முரண்பாடு என்னவென்றால், ஜனாதிபதி ஒரு புதிய நாட்டைக் கட்டியெழுப்ப அறை கூவல் விடுக்கிறார். அவர்களின் படையினரோ பல் குழல் பீரங்கிகளால் தமிழ் மண்ணை, பிரதேசங்களை தரைமட்டமாக்கி வருகின்றனர்.

மறுபுறத்தில் புலிகளின் தாகம் தமிழரின் உயிர் என்றால், செம்மணி, மிருசுவில் பண்டாரவளை அனர்த்தங்கள் யாருடைய தாகத்துக்காக மேற்கொள்ளப்பட்டன?

மட்டக்களப்பில் அண்மையில் படையினரே ஒத்துக் கொண்ட பல படுகொலைகள் யாருடைய தாகத்துக்காகச் செய்யப்பட்டன?

சொல்ல வல்லவர் எவரேனும் சொல்வாரோ?

# முக்காலமும் உணர்ந்த சுடரொளி வாசகர்!

சாயிபாபாவை நான் ஒரு போதும் நம்பியதில்லை. ஆனால் இப்போது நம்பித்தான் ஆக வேண்டியிருக்கிறது என்றார் தொலைபேசியில் நண்பர் ஒருவர்.
'ஏன் என்ன விடயம்'- இது நான்.
சுடரொளி வாசகர்களுக்கு முக்காலத்தையும்' அறியும்' ஞானத்தைக் கொடுத்து விட்டாரே சாயிபாபா என்றார் அவர் மறுமுனையிலிருந்து. எனக்குப் புரியவில்லை. சோதிடர்களின் தேசம் என்று புகழப்படுகிற இந்தியாவில் குஜராத்தில் பூகம்பம் வரப்போகிறது என்பதைச் எந்தவொரு சோதிடரும் சொல்லவில்லை. ஏன் குஜராத்தில் பூகம்பம் வரப் போகிறது என்பதை சாயிபாபாவே அறிந்திருக்கவில்லை. அந்த மக்களை யாராலும் அந்த அழிவிலிருந்தும் அவலங்களிலிருந்தம் காப்பாற்ற முடியவீல்லை. அப்படியிருக்க சுடரொளி - சாயிபாபா- வாசகர் என்று எதைத்தான் இவர் சொல்கிறார் என்று நினைத்தபடி அது என்ன ஞானம் சற்று விளக்கமாகத் தான் சொல்லடாப்பா என்றேன்.
அவன் விடயத்தை இப்படிப் போட்டுடைத்தான். கடந்த வார சுடரொளியில் 'காற்றோடு பேசு' என்றொரு சிறுகதை வெளியாகியிருக்கிறது. அதே வாரப்பத்திரிகையில் 'காற்றோடு பேசு'சிறுகதை எமது இனத்தின் இளைய தலைமுறையினர் திடீர் கைது அவதிகளினால் படும் துயரத்தை நன்கு விளக்கியது' என்று கண்டியிலிருந்து ஆ.சிவமணி என்ற வாசகர் எழுதிய கடிதம் வாசகர் இதயம் பேசுகிறது பகுதியில் பிரசுரமாகியிருக்கிறது.
பெப். 4ம் திகதிய அப்பத்திரிகை வெளியாக முன்னரே அதே திகதிய பத்திரிகையில் வெளிவரும் சிறுகதையைப் படித்து அதற்கு தனது பாராட்டுக் கடிதத்தையும் எழுதியது போல உங்கள் யாராலும் எழுத முடியுமா?
முக்காலத்தையும்' உணர்ந்த வாசகரைத் தவிர வேறு யாரால் அவ்வாறு எழுத முடியும். அது சுடரொளி பரப்புகிற சாயிபாபா அருள் இல்லாமல் வேறென்ன? என்று கேட்டார் அவர். நானும் தான் யோசித்துப்' பார்த்தேன்.வழமையாக அச்சில் வரும் வேறெந்தப் பிழைகளையும் அச்சுப் பிசாசின் தவறு என்று ஒதுக்கி விடலாம். ஆனால் இதனை என்னாலும் தான் புரிந்து கொள்ள முடியவில்லை. இதனை வாசிக்கிற உங்களில் யாருக்காவது புரிந்தால் எழுதுங்கள்!

–பாவா

## மட்டு. அனோஜாவின் பெயரைச் சொல்லி அடித்த பணம் எங்கே?

அண்மையில் மட்டக்களப்பில் பாதுகாப்புப் படையினரால் துண்டு பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டிருந்தது. மட்டக் களப்பில் அரச பயங்கரவாதிகளினால் அரங்கேற்றப்பட்டு, நீண்ட காலமாக அரச தரப்பினரால் மறுக்கப்பட்டு வந்த பல படுகொலைகளை இராணுவத்தினர் இத் துண்டுப் பிரசுரத்தின் மூலம் தாமே இக்கொலைகளுக்கு பொறுப்பாளிகளென்பன்பதை பகிரங்கமாக ஒத்துக் கொண்டுள்ளனர்.

மட்டக்களப்பு வாழ் மக்களே என விளித்துள்ள இத் துண்டுப் பிரசுரத்தில், "தற்போது நீங்கள் உண்மை நிலையினை விளங்கிக் கொண்டுள்ளீர்கள். படையினருக்கும் மக்களுக்கும் இடையேயான உறவு அதிகரித்து வருகின்றது. தமக்கான [illegible] அரசியல் தீர்வினை அரசினால் மாத்திரமே வழங்க முடியும் என்பது சகல தமிழரிற்கும் தெளிவாகியுள்ளது. யுத்தத்தில் மீள முடியாத தோல்வியினை பெற்று வரும் பயங்கரவாதிகள் விரக்தியின் விளிம்பிற்குச் சென்றுள்ளார்கள். இத்தனை காலமும் மக்களை ஏமாற்றி வந்த புலிகளின் முகமூடி கிழித் தெறியப்பட்டுள்ளது.

மக்களும் படையினரும் நெருங்குவதை புலிகள் விரும்பவில்லை. இதற்காக அவர்கள் படையினருக்கெதிராக பொய்ப் பிரச்சாரங்களை செய்கின்றனர். எனவே படையினராகிய நாம் உண்மையினைச் சொல்வது கடமையாகும் இந்தப் பிரதேசமானது இருபது வருடங்களாக சண்டைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இதன் போது பல்லாயிரக் கணக்கான மக்கள் வீடுவாசல்களை இழந்துள்ளனர். இவை யாவற்றுக்கும் இராணுவமே காரணமென எல்.ரீ.ரீ.ஈ பழி சுமத்துகின்றது. இது புலிகளுக்குப் புதிய சங்கதியல்ல.

பல்வேறுபட்ட படுகொலைச் சம்பவங்கள் இங்கு நடைபெற்றுள்ளன. கொக்கட்டிச் சோலை, வந்தாறுமூலை, சத்துருக் கொண்டான், மட்டக்களப்பு போன்ற இடங்களில் படுகொலைச் சம்பவங்கள் இடம் பெற்றமை உண்மை தான். இவற்றுடன் இலங்கை இராணுவம் சம்பந்தப் பட்டதும் உண்மை தான். ஆனால் புலிகள் சொல்வதைப் போல் இன அழிப்பு நோக்கில் இவை இடம் பெறவில்லை.

1990 ஜூனில் ஓர் நாள் இருபதுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் விசேட அதிரடிப் படையினரால் பெரியகல்லாற்றுக் கடற்கரையில் வைத்துக் கொல்லப்பட்டனர். படையினர் இவர்களைத் திட்டமிட்டுக் கொல்லவில்லை. இப் பகுதிகளில் புலிகள் மறைந்துள்ளார்களென தகவல் கிடைத்தது. பின்னர் அங்கு சென்ற படையினர் அவர்களைப் புலிகளென தவறாக நினைத்து விட்டனர். இதனால் அந்த கவலைக்குரிய கொலைகள் நடந்தேறின. இவற்றைப் பெரிது படுத்தும் புலிகள் ஏன் பிள்ளையாரடியில் பயணிகள் பஸ்ஸைத் தாக்கினார்கள். தமிழர் நலன் பற்றிப் பேசுவதற்கு புலிகளுக்கு எந்த யோக்கியதையும் கிடையாது. சில வேளைகளில் குறிப்பிட்ட உயரதிகாரிகளின் கட்டளை காரணமாக மக்களைக் கொல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

வெசாக் கொண்டாட்டத்தின் போது மட்டக்களப்பில் இராணுவத்தினர் மக்களைச் சுட்டுக் கொன்றனர். தருணம் பார்த்துக் கிடந்த எல்.ரீ.ரீ.ஈக்கு இது நல்ல கதையாக அமைந்தது. பாதுகாப்பு படையினர் திட்டமிட்ட தமிழர் அழிப்பைச் செய்வதாகக் கூறி வருகின்றனர். படையினரின் தாக்குதலில் பெரும்பாலான புலிகள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களுக்கு ஆட்பற்றாக் குறையுள்ளது. உங்களை அவர்களுடன் இணைத்துக் கொள்ள விரும்புகின்றனர். ஆனால் வெசாக் படுகொலையை படையினர் தாமாகத் திட்டமிட்டுச் செய்யவில்லை.

பௌத்தர்கள் தமது புனித தினத்தில் கொலை செய்ய மாட்டார்கள். அன்று குடிபோதையில் இருந்த பொறுப்பற்ற மக்களின் நன்மைக்காக கைதுகள் சுற்றி வளைப்புக்களைத் தவிர்த்துள்ளோம், செயற்படுகின்றோம். எம்மிடையேயான உறவை மேலும் வளர்ப்போம்.

மட்டக்களப்பு மக்களைத் திட்டமிட்டுக் கொல்லும் புலித் தலைவர்களை இனங்கண்டு கொள்ளுங்கள். அனைவரினதும் நலனுக்காக வும் பாசிச பயங்கரவாதிகளை ஒன்றுபட்டு அழிப்போம்" என அத் துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டு, பாதுகாப்புப் படையினர் என உரிமையும் கோரப்பட்டிருந்தது.

இன அழிப்பு வ்ரலாற்றின் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் சிறிலங்காவின் இன அழிப்பாளர்களினால் தமிழ் மக்களின் கொலைகளுக்கு உரிமை கோரப்பட்டுள்ளது. இது சர்வதேசத்தின் கண்களை மீண்டும் ஒருமுறை விழித்துப் பார்க்கச் செய்துள்ளது. மட்டக்களப்பில் இக்கொலைகள் தொடர்பாக நடத்தப்பட்ட ஆணைக்குழுவினால் கொலையாளிகள் இனம் காட்டப்பட்டும் அரசு அதனை கணக்கிலெடுக்காது அவர்கள் தொடர்பாக எந்தவித சட்ட நடவடிக்கையும் எடுக்காது அரசின் கொலைகார நாய்களாக பக்கத்தில் வைத்து தீனி போட்டு வளர்த்து வருகின்றது.

இந்நிலையில் இராணுவத்தினர் பகிரங்க மாகவே இக்கொலைகளை தாங்களே செய்ததாக துண்டுப் பிரசுரம் மூலம் ஒத்துக் கொண்டது அரசு. இது இராணுவமட்டத்தில் பலத்த சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. மட்டக்களப்பு பிரிகேட் கொமாண்டராக றொகான் அன்ரனீஸ் பொறுப்பெடுத்ததன் பிற்பாடு மக்களை இராணுவத்தின் பக்கம் திசை திருப்புவதற்காக இவ்வாறான பல துண்டுப் பிரசுரங்களையும் வெளியிட்டும், ஒலி பெருக்கி மூலம் பிரச்சாரங்களையும் மக்கள் மத்தியில் மேற்கொண்டு வருகின்றனர் இராணுவத்தினர்.

"நுணலும் தன்வாயால் கெடும்" என்பது போல் இராணுவத்தினர் துண்டுப் பிரசுரத்தால் நாவிழந்து மாட்டிக் கொண்டு முழிக்கின்றனர். சில அதிகாரிகள் கூட துண்டுப் பிரசுரம் தொடர்பாக தலையைப் பிய்த்துக் கொண்டு அன்ரனீஸ் வந்த பிறகு தான் இப்படியெல்லாம் நடக்கின்றது என்று கொழும்பு தலைமைகளை நச்சரிக்கின்றார்களாம்.

இவர்கள் அன்ரனீசுடன் எரிந்து விழுவதற்கு இது மட்டும் காரணமல்ல. தைப்பொங்கலை முன்னிட்டு இராணுவத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட களியாட்ட நிகழ்ச்சிக்கு வருகை தந்திருந்த முன்னணி திரைப்பட நட்சத்திரம் அனோஜா வீரசிங்கவை பிரிகேட் தலைமையகத்தில் தங்க வைத்திருந்ததுவும், அனோஜா வீரசிங்க சென்ற வாகனத் தொடரணியுடன் அன்ரனீசும் சென்றதும் ஒரு சில அதிகாரி களுக்கு பிடிக்கவில்லையாம்.

இராணுவத்துடன் எந்த வித தொடர்பு மில்லாத ஒருவரை இவர் எப்படி பிரிகேட்டில் தங்க வைப்பார் என்று அதிகாரிகள் மட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக கொழும்பிலுள்ள அதிகாரிகளுக்கு இங்குள்ள மற்றைய அதிகாரிகள் முறைப்பாடு செய்துள்ளனர். கடந்த 26ந் திகதி அனோஜாவுடன் சென்ற அன்ரனீஸ் இன்னமும் கடமைக்கு திரும்ப வில்லையென பாதுகாப்பு தரப்பி னுள் பேசப்படுகின்றது. தற்போது பதில் கடமையில் வாழைச்சேனை பிரிகேட் கொமாண்டரேயுள்ளார்.

மட்டக்களப்பில் இராணுவத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த களியாட்ட நிகழ்வுக்கு வருவதற்கு முன்னர் அனோஜா வீரசிங்க குருணாகலில் வீடு ஒன்றை வாடகைக்கு அமர்த்தியிருந்ததாகவும் இந்த வீடு மட்டக்களப்பில் உள்ள விசேட அதிரடிப்படை முகாமொன்றின் பொறுப்பதிகாரியினுடையது எனவும் இன்னொரு தகவல் தெரிவிக்கிறது. இது கூட சில அதிகாரிகளின் மட்டத்தில் விவாதத்துக்குரிய விடயமாக உள்ளது.

இக்களியாட்ட நிகழ்வுக்காக வர்த்தகர்கள், கொந்தராத்துக்காரர்கள், வாகனச் சங்கங்களென பலரிடமும் நான்கு லட்சம் ரூபாவுக்கு மேல் இராணுவத்தினரால் பணம் அறவிடப்பட்டிருக்கின்றது. ஆனால் இராணுவ இசைக்குழுவினரே இசை நிகழ்ச்சியை நடாத்தினர். அப்படியாயின் அறவிடப்பட்ட பணம் முழுவதும் பிரிகேடியர் றொகான் அன்ரனீஸால் அனோஜாவுக்குக் கொடுக்கப்பட்டதா, அல்லது அனோஜாவின் பெயரைச் சொல்லி மக்களிடம் பகற்கொள்ளையா என்ற கேள்வியும் அதிகாரிகள் மட்டத்தில் எழுந்துள்ளதாக படைத்தரப்பிலிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரிகேடியர் றொகான் அன்ரனீஸ் தொடர்பான சில தகவல்களையும் இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது. இவர் மட்டக் களப்புக்கு வருவதற்கு முன்னர் மன்னார் முருங்கன் பகுதியிலேயே கடமையாற்றினார். ரணகோச இராணுவ நடவடிக்கையில் முக்கிய பாத்திரமாகத் திகழ்ந்தவர். வன்னிக்கான பொருளாதாரத் தடையின் போது மன்னார் முருங்கன் பகுதிக்கூடாக பொருட்களை கொண்டு செல்வதற்குத் தடை விதித்தவரும் இவரே. இவர் இங்கிருந்த காலப் பகுதியில் முருங்கன் வழியாக பொருட்களை கொண்டு செல்ல முற்பட்ட நாற்பதுக்கும் மேற்பட்ட பொது மக்கள் இவரது பணிப்பின் பேரில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

முருங்கனில் இராணுவ அடக்கு முறை மூலம் மக்களை ஒடுக்கிய இவர், மட்டக்களப்பில் துண்டுப்பிரசுரங்கள் மூலமும் பிரச்சாரங்கள் மூலமும் மக்களை புலிகளிடம் இருந்து அந்நியப்படுத்தி தம்பக்கம் இழுத்தெடுக்கும் புதிய முறையினைக் கையாண்டுள்ளார். புலிகளை மக்களிடமிருந்து அந்நியப்படுத்துவதற்காக மக்களை நோக்கி அன்ரனீசால் எறியப்பட்ட பந்து திரும்பியும் அன்ரனீசின் முகத்திலே வந்து விழுந்துள்ளது.

முகத்தில் விழுந்த பந்தின் விளைவு என்ன என்பதனைப் பார்க்க, வீடு பார்க்க சென்ற அன்ரனீஸ் திரும்பும் வரை பொறுத்திருக்கத் தான் வேண்டும்.

⦸

## ஏழைகள் இருக்கமாட்டார்கள்!

வானத்தை முட்டும் உயரத்திற்கு விலைவாசிகள் ஏறியிருப்பது ஏன் தெரியுமா?

நாணய மதிப்பிறக்கம், டொலரை நீந்த விட்டது, யுத்தச்செலவு அது இதென்று நீங்கள் காரணங்க்ளை அடுக்கிக் கொண்டு போகலாம்.

ஆனால், உண்மையில் இவை அல்ல காரணம் என்கிறார் அமைச்சர் மங்கள சமரவீர.

யுத்தம் ஒழுங்காக நடாத்தப்பட வேண்டும். அதனால் தான் நாங்கள் விலைவாசிகளைக் கூட்டினோம் என்கிறார் அவர்.

அதாவது அரசாங்கம் திட்டமிட்டு விலைகளைக் கூட்டியிருக்கிறது.

அது மட்டுமல்ல, யாராவது இந்த விலைகளைக் குறைக்கக் கூடிய சூரத்தனம் உள்ளவர்களாக இருந்தால், செய்து காட்டுங்கள் பார்க்கலாம் என்று சவால் வேறு விட்டிருக்கிறார் அவர்.

இத்துடன் அவர் இன்னுமொரு விடயத்தையும் தெரிவித்திருக்கிறார்.

ஆம். தாங்கள் 25 வருடம் ஆட்சியில் இருப்போம். அதுக்குப்பிறகு இந்த நாட்டில் ஏழைகளே இருக்கமாட்டார்கள் என்கிறார் அவர்.

ஆமாம். அவரது இந்தக் கூற்றை நாம் ஏற்கத்தான் வேண்டும்.

இருபத்தைந்து வருடத்துக்கு இந்த அரசு ஆட்சியில் இருந்தால் ஏழைகள் இருக்க மாட்டார்கள் தான்.

அவர்கள் தான் இறந்து போய் விடுவார்களே!

## மனநோயாளிகளிடம் எப்படிக் கேட்க?

மின், அலங்காரங்கள், குளிரூட்டிகளைப் பாவிப்பதை அரசாங்கம் தடை செய்து கொள்ளப் போகிறதென்று அரச வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இனிமேல் குளிரூட்டிகள் பாவிக்கப்படக் கூடாது. கடைகளின் பெயர்ப் பலகைகளில் மின் விளக்கு எறியக்கூடாது. மின் விளக்குகளால் அலங்காரம் செய்யக் கூடாது. வீதி விளக்குகள் எரியூட்டப்படுவதில் கட்டுப்பாடு வேண்டும்.

இவையெல்லாம் கண்டிப்பாக அமுல்படுத்தப்படுமாம்.

மீறினால் அவர்களுக்கான மின் துண்டிக்கப்படுமாம்.

எல்லாம் சரிதான், மின்சக்தியை சிக்கனமாகப் பாவிக்க அரசாங்கம் எடுக்கும் இந்த நடவடிக்கைகளில் நியாமிருக்கலாம். இந்தப் பாவனைக்காக அவர்கள் 'ஜெனரேற்றர்களை'ப் பாவிக்குமாறு அது கோருவதில் ஒரு நியாம் இருப்பதை மறுக்க முடியாது தான்.

ஆனால், அவசரகால சட்டவிதிகளின் கீழ் பிறப்பிக்கப்படவுள்ள இந்த நடவடிக்கை, அரச அலுவலங்கள், அமைச்சர் அலுவலங்கள், ஜனாதிபதி மாளிகை என்பவற்றுக்கும் பொருந்துமா?

அங்கேயும் இது கடைப்பிடிக்கப்படுமா?

அல்லது அங்கேயும் ஜெனரேற்றர்கள் தான் பாவிக்கப்படுமா? அப்படிப் பாவிக்கப்படும் ஜெனரேற்றர்களுக்கான எரிபொருள் செலவை யார் கொடுப்பது?

மக்களின் வரியிலிருந்தா?

"இவ்வளவு கத்துகிற அரசாங்கம், யுத்தத்துக்காக இவ்வளவு கொட்டுகிற அரசாங்கம், தானே ஜெனரேற்றர்களை வாங்கி மின்னை வழங்கினால் என்ன" என்று கேட்கிறார் ஒரு அப்பாவி மனிதர்.

கேள்வி நியாயம் தான். ஆனால், மக்கள் கஷ்டப்படுவது பற்றி அக்கறைப்படுகிற ஒரு அரசாங்கத்திடமல்லவா இதைக்கேட்க வேண்டும்? மக்களை எல்லா வழியிலும் சாகடிப்பதில் திருப்தி காணும் ஒரு Sadistic மனோவியாதி பிடித்த அரசாங்கத்திடம் இதைக் கேட்கமுடியுமா என்ன?

விலைவாசி உயர்வுக்கும், அநியாய யுத்தத்துக்கும் முடிவுகட்ட மக்கள் நினைக்காத வரை இந்த நிலைக்கு மாற்று இல்லை என்று எழுதித் தான் தெரிய வேண்டுமா என்ன?

## சுதந்திரம் யாருக்கு?

ஐம்பத்தி மூன்றாவது சுதந்திர தினத்தைக் கொண்டாடி முடித்தார்கள்.

சுதந்திரம் என்றால் என்ன என்று புரிந்து கொள்ளும் விதத்தில்.

சாராயக் கடைகள், இறைச்சிக் கடைகள் எல்லாம் பூட்டிவைக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்தது.

வீடுகளுக்குள் எல்லோரையும் இருக்குமாறு சொல்லாமல் சொன்னார்கள்.

அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களும் அரச அதிகாரிகளும் இதனைக் கொண்டாடி முடித்தார்கள் மக்களை வெளியே வைத்துவிட்டு.

சுதந்திரம் யாருக்கு என்பதைத் தெளிவுபடுத்தும் படியாக எல்லாம் நடந்து முடிந்தன.

வாழ்க சுதந்திரம்! வாழ்க சுதந்திரம்!

வாழிய நம் நாடே!

⦸

நன்றி - நூலகத்திட்டம்



# பிரிட்டன் புலிகளைத் தடை செய்யத்தான் போகிறதா?

**- சஞ்ஜித்**

ஸ்ரீரிட்டன் புலிகளைத் தடை செய்து விடுமா? எதிர்வரும் 19ம் திகதியன்று பிரித்தானியாவில் வெளியிடப் படவிருக்கும் தடை செய்யப்பட்ட பயங்கர வாதிகள் பட்டியலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பெயரும் இடம் பெற்று விடுமா? அமெரிக்க அரசும், இந்தியாவும் தடை செய்தது போல பிரிட்டனும் புலிகளைத் தடை செய்வதாக அறிவித்துவிடும் வாய்ப்புக் கள் நிலவுகின்றனவா?

- இவை இன்று இலங்கை அரசியல் வாதிகள் மக்கள் மத்தியில் அடிபடுகின்ற முக்கியமான கேள்விகள்.

அண்மையில் பிரித்தானிய பாராளு மன்றத்தில் சட்டமாக்கப்பட்டு அமுலுக்கு வந்த பயங்கரவாதத் தடைச் சட்டம், நடைமுறைக்குப் போவதற்கு, அச்சட்டத்தின் பிரகாரம் 'பயங்கரவாதிகள்' என அடையாளப்படுத்தப்படும் இயக்கங்களின் பட்டியல் ஒன்று வெளியிடப்பட வேண்டியுள் ளது. இப் பட்டியல், நிறைவேற்றப்பட்ட மேற்குறிப்பிட்ட சட்டத்தின் அடிப்படையில், எவற்றை எல்லாம் பிரித்தானிய அரசாங்கம் பயங்கரவாத சக்திகள் என்று கருதுகிறதோ அவற்றைப் பட்டியலிட்டு வெளியிடவுள்ளது. இப்பட்டியல் வெளிவந்த பிற்பாடு இப்பட்டி யலிலுள்ள அமைப்புக்கள் அனைத்தும் பிரித்தானியாவில் இயங்க முடியாதவை ஆகிவிடும்.

இவ்வாறான பெயர்ப் பட்டியல் எதிர்வரும் (பெப்ரவரி) 19ம் திகதியன்று வெளியிடப்படும் என்று நம்பப்படுகிறது. அதில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பெயரும் இடம்பெறவேண்டும் என்ற இலங்கை அரசாங்கத்தினதும், வேறு புலி எதிர்ப்புச் சக்திகளதும் கோரிக்கை- களுக்குச் சாதகமாக இப்பட்டியல் அமையும் என்ற கருத்து இங்கே நிலவுகிறது. குறிப்பாக அரச சார்பு அரசியல்வாதிகள் மத்தியில் இத்தகைய கருத்து வலுவாக நிலவுகிறது. ஒரு வகையில் இது அவர்களது கருத்து என்பதை விடவும், அவர்களது ஆசையாக இருக்கிறது.

"புலிகள் ஒரு தலைபட்சமாக யுத்த நிறுத்தத்தை அறிவித்து, பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று தெரிவித்து, தாம் சமாதானத் துக்கு எதிரானவர்கள் அல்ல என்று நிரூபிக்க 'முனைவது' பிரிட்டன் தம்மை தடை செய்வது விடும் என்று அஞ்சுவதால் தான் என்று அரச தரப்பும் இராணுவ வட்டாரங் களும் திரும்பத் திரும்பக் கூறிவருகின்றன.


தமிழீழ விடுதலைப் புலிகளை பிரிட்டன் தடை செய்யாவிட்டால் பிரிட்டனுக்கும் இலங்கை அரசுக்குமிடையி லான உறவில் பாதிப்பு ஏற்படும் என்று கதிர்காமர் திரும்பத் திரும்ப பிரிட்டனை 'மிரட்டவும்' செய்தது யாவரும் அறிந்த ஒரு விடயம். ஏற்கனவே அமெரிக்க அரசாங்கம் புலிகளைத் தடை செய்ததை வரவேற்றுப் பாராட்டிய அவர் பிரிட்டனும் இதைக் கட்டாயம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டிருந்தார்.

அமைச்சர் கதிர்காமர் இப்படிக் கேட்பதற்கு அடிப்படையான காரணம், புலிகளின் சர்வதேசப் பிரச்சாரத்திற்கும், நிதிவளத்திற்கும் அடிப்படைக் காரணியாக அமைந்திருப்பது, அதனால் சுதந்திரமாக பிரிட்டனிலிருந்து செயற்பட முடிந்தமை தான். புலிகளால் பாரிய நிதியை சேகரிக்க முடிகிறது. சர்வதேச கடலில் கப்பற் சேவையையும், சரக்குப் போக்குவரத்தையும் செய்ய முடிகிறது. ஊடகங்களையும் இணையங்களையும் சிரமமின்றி நடாத்த முடிகிறது. இலங்கை அரசுக்கெதிராக சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு தம் அபிப்பிராயங்களைக் கொண்டு செல்ல முடிகிறது போன்ற பல விடயங்கள் தான் இலங்கை அரசின் யுத்த வெற்றியை ஸ்திரப்படுத்த முடியாமல் இருப்பதற்கான காரணங்கள் என்பது அவரது அபிப்பிராயம். இந்த வகையில் புலிகளைப் பிரிட்டன் தடை செய்துவிட்டால் அது குறிப்பிடத்தக்க அளவுக்குப் புலிகளைப் பலவீனப்படுத்திவிடும் என்று அவர் கூறுகின்றார். அதன்பின், ஏற்கெனவே இந்தியாவிலும், புலிகள் தடை செய்யப்- பட்டிருப்பதால், புலிகளை இலகுவில் முடக்கிவிட முடியும் என்பது அவரது அபிப்பிராயம்.

ஆனால், பிரித்தானியாவில் நடைமுறையிலிருந்த சட்டப்படி, ஒரு ஸ்தாபனத்தை 'பயங்கரவாத ஸ்தாபனம்' என்று தீர்மானிப்பதற்கு அதற்கு எதிரான குற்றச் சாட்டுக்களையும், ஆதாரங்களையும் அது கொண்டிருக்க வேண்டும். அதாவது பிரித்தானியாவிற்குள் அக்குறிப்பிட்ட ஸ்தாபனம் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டதற்கான ஆதாரங்கள் இருக்க வேண்டும். இந்த வகையில், பிரித்தானியாவின் எல்லைக்குள் இதுவரை புலிகள் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டதற்கான எந்தக் குற்றச்சாட்டுக்கும் உள்ளாகாமல் இருந்தது காரணமாக அவர்களது இயக்கம் தடை செய்யப்பட- வில்லை. ஏற்கெனவே பல தடவை இக்கோரிக்கை பலராலும் முன் வைக்கப்பட்டபோதும், அதைப் பிரிட்டன் செய்யவில்லை. பதிலாக அவர்கள் பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டதற்கான தடயங்கள் இல்லையே' என்று அது திரும்பத் திரும்பக் கூறி வந்தது.

ஆனால், இப்போது புதிதாகக் கொண்டு வரப்பட்ட சட்டத்தின்படி, அமெரிக்காவில் உள்ளது போல், பிரிட்டன் ஒரு இயக்கத்தை பயங்கரவாத இயக்கம் என்றும், அதன் இருப்பு நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்றும் கருதும் பட்சத்தில், அதைத் தடை செய்ய - அந்த இயக்கம் அதுவரை எந்த நடவடிக்கையிலும் ஈடுபடாவிட்டாலும் - முடியும்.

அதேவேளை, புலிகளைத் தடை செய்வது என்பது அமெரிக்காவினதும் இலங்கை அரசாங்கத்தினதும் வெற்று



விருப்பத்தை மட்டுமே காரணமாகக் கொண்டு பிரிட்டனால் செய்யப்படக்கூடிய காரியமா? புலிகளைத் தடை செய்வதால் பிரிட்டன் சாதிக்கப்போவது என்ன? புலிகள் நிச்சயமாக ஒரு பலவீனமான நிலைக்குத் தள்ளப்படுவார்கள் என்பது உண்மை தான் என்றாலும் அதனால் பிரிட்டன் அடையக் கூடிய நன்மை என்ன? அமெரிக்காவிடமும், இலங்கை அரசிடமும் நல்ல பிள்ளைப் பட்டத்தைப் பெற்றுக் கொள்வதைத் தவிர அதற்கு வேறு ஏதாவது லாபம் இருக்கிறதா?

இந்திய அரசாங்கம் எதிர்க் கட்சிகளின் வலியுறுத்தல் காரணமாக புலிகளைத் தடை செய்ய - அதன் பாதுகாப்பு அமைச்சரான ஜோர்ஜ் பெர்ணாண்டஸ் அவர்கள் புலிகளுக்கு மிகவும் நெருங்கியவராக இருந்த போதும் - முடிவெடுத்ததன் காரணமாக இன்று இலங்கைப் பிரச்சினைக்கான ஒரு சமாதானத் தீர்வினைக் காணும் முயற்சியில் பங்குகொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதை அரசியல் அவதானிகளும், பத்திரிகையாளர்களும்



சுட்டிக் காட்டுகின்றனர். புலிகள் மீது தடை விதித்ததால் இன்று நோர்வேயூடாகவும், ஒரு சில தமிழ் நாட்டு அரசியல்- வாதிகளூடாகவும், புலிகளின் எண்ணத்தை மதிப்பிட வேண்டிய நிலைக்கு இந்தியா தள்ளப்பட்டிருக்கிறது என்று எழுதுகிறார் ஒரு ஆங்கிலப் பத்திரிகையாளர். பிரிட்டன் இந்தத் தடையைச் செய்யும் போது அதுவும் அதே மாதிரியான ஒரு நிலைக்குத் தள்ளப்படும் என்று அவர் சுட்டிக் காட்டுகிறார்.

உண்மையில், பிரிட்டனுக்கு இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தப்பட்ட ஒரு தார்மீகப் பொறுப்பு இருக்கிறது. இலங்கையில் இன முறுகல்கள் தெளிவாகத் தெரிந்த ஒரு சூழ்நிலையில் சுதந்திரத்தை சிங்களவர்கள் கையில் மட்டும் கொடுத்துவிட்டுச் சென்றதன் மூலமாக, அது இந்த நாட்டின் தலைவிதி நாசமாக அனுமதித்து விட்டிருக்கிறது. இன்று புலிகளை ஏற்காத, அவர்களுடன் ஒத்துப் போகாதவர்கள் - தமிழ்க்கட்சிகள் உட்பட - பலரும் கூட புலிகளை பிரிட்டன் தடைசெய்யக் கூடாது என்று வலியுறுத்துகின்றனர். அதற்காக பிரச்சாரமும் மற்றும் அழுத்தம் கொடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களைத் தவிர பிரித்தானிய பாராளுமன்ற அங்கத்தவர்கள் சிலரும் கூட இந்தப் பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது பதவிக்கு அங்குள்ள தமிழர்களது வாக்குகளும் தேவை என்ற நிலைமை நிலவுவது இத்தகைய பிரச்சாரத்தில் அவர்கள் ஈடுபடுவதற்கு காரணமாக இருக்கலாம். ஆயினும், பிரித்தானிய பாராளுமன்றம் இந்த முடிவுக்கு போகக் கூடாது என்பதற்கான அழுத்தத்தையும் நியாயத்தையும் அவர்களால் நிச்சயமாகச் சொல்ல முடியும்.

தவிரவும், இலங்கை அரசாங்கம் அதன் பக்கத்தில் மட்டும் முழுக்க முழுக்கச் சரியாக நடந்து கொண்டதாகக் கூற முடியாது. புலிகளது 'பயங்கரவாத நடவடிக்கைகள்' என்று பட்டியலிடப் படக் கூடிய செயற்பாடுகள் சில, இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகளையும் ஒடுக்குமுறைகளையும் நியாயப்படுத்த வேண்டுமானால் உதவக் கூடுமே ஒழிய நிச்சயமாக அதன் நடவடிக்கைகள் நியாய- மானவை என்பதை யாரும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

புலிகள் செய்யும் யுத்தத்தையும், அவர்கள் இராணுவ இலக்குகளைத் தாக்குகிறார்கள் என்பதையும் ஒரு போதும் 'பயங்கரவாதமாக' பிரிட்டனின் பாராளுமன்றத்தில் ஏற்கவைக்க முடியாது என்பதை இலங்கை அரசு அறியும். இதனால் அது 'ராஜீவ் காந்தி கொலை முதல், சிவிலியன்கள் மீதான தாக்குதல்கள் வரை'யான ஒரு பெரிய பட்டியலைத் தயார் செய்து பிரசாரம் செய்து வருகிறது. புலிகளும் முழுக்க முழுக்க இந்தக் குற்றச்சாட்டுக்களிலிருந்து தப்பிக் கொள்ள முடியாது தான். ஆனால், அதேவேளை புலிகளுக்கும் இலங்கை அரசாங்கம் தொடர்பாக இவ்வாறு குற்றம் சாட்டுவதற்கான நிறைய தகவல்கள் இருக்கின்றன. பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற பேரில் மக்கள் மீது நடாத்தப்படும் படுகொலைத் தாக்குதல்கள், மற்றும் மனித உரிமை மீறல்கள், பொருளாதாரத் தடை என்பன அதன் பயங்கரவாத முகத்தை மறைக்க முடியாமல் செய்துவருகின்றன என்று புலிகளாலும் நிரூபிக்க முடியும். பிரித்தானிய பாராளுமன்றத்தில் இவற்றைக் கிளப்புவதற்கான முயற்சிகளில் புலிகளும் ஈடுபட்டுக் கொண்டு தான் வருகிறார்கள்.

அரசியல் காரணங்களுக்காக அப்பாவிப் பொதுமக்களையும், யுத்தத்தில் பங்கெடுக்கா- தவர்களையும் கொல்வது தான் 'பயங்கரவாதம்' என்பது தான் சர்வதேசச் சட்டங்களில் 'பயங்கரவாதம்' தொடர்பான ஒரு அடிப்படைப் புரிதல். அந்த வகையில் அளவிலும், தரத்திலும் (Proportion- ality) இலங்கை அரசுப் பயங்கரவாதம் ஒப்பிட முடியாத அளவுக்கு மோசமானதாகும். கொஸோவா விடுதலைப் படை (KOSOVO LIBERATION ARMY) பலஸ்தீன விடுதலை இயக்கம் போன்ற அமைப்புக்களின் வன்முறையை ஒருவருமே சேர்பிய அரசினதும், இஸ்ரேலிய அரசினதும் வன்முறையுடன் ஒப்பிடுவதில்லை. இங்கும் அதே நிலை தான்.

எவ்வாறாயினும், புலிகள் மீதான தடை என்பது இலங்கை அரசாங்கம் நினைப்பது அல்லது ஆசைப்படுவது போல ஒன்றும் இலகுவான காரியம் அல்ல. ஏனென்றால், தடை செய்வது என்பது பிரித்தானியாவுக்கும் அமெரிக்காவைப் போலன்றி பலத்த அரசியல் நெருக்கடிகள் நிறைந்த பின் விளைவுகளைத் தரக்கூடிய ஒன்றாகும்.

இந்த நிமிடம் வரையான நிலைமைகள் புலிகள் தடை செய்யப்படுவதற்கான வாய்ப்பை குறைத்தே உள்ளன. அதிலும் புலிகளின் சமார்த்தியமான ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்த அணுகுமுறை அதற்கான வாய்ப்பை மேலும் கூட்டியுள்ளது. தவிரவும், புலிகள் மீதான தடை, இலங்கை அரசாங்கம் யுத்தத்தை முழுதாக முடிக்க உதவும். சமாதானத்துக்கு வழிவிடவும் உதவும் என்ற எந்த நம்பிக்கையையும் ஏற்படுத்தக் கூடியதாக இல்லை. உண்மையில் இலங்கை மேலும் முடிவுறா யுத்தத்தையும் அழிவையும் நோக்கிச் செல்லவே இது அடி எடுத்துக்கொடுக்கும் என்பதும் புதிய விடயம் அல்ல.

ஆகவே தனது நலனுக்கு பெரிய வாய்ப்புக்கள் எதையும் தராத சமாதான முயற்சிகள் நடந்து கொண்டிருக்கிற ஒரு சூழலில் ஒரு பகுதியைப் பலவீனப்படுத்துகிற, அரசியல் ரீதியில் பாதகமான ஒரு முடிவை நிச்சயம் பிரிட்டன் எடுக்காது என்றே சொல்ல வேண்டும்.

இது அரசுக்கு கசப்பாக இருக்கலாம். கதிர்காமருக்கு அதிர்ச்சியாக இருக்கலாம். ஆனால், யாருக்கும் இனிக்க வேண்டும் என்பதற்காக பிரிட்டன் கசப்பை உண்ணத் தலைப்படுமா என்ன!

நன்றி - நூலகத்திட்டம்



# மலையகத்தில்: சிங்களவரின் பாதுகாப்பு யாருடைய கைகளில்?

– அர்ஜுன்

உலகின் எந்தவொரு கொடுங்கோலனுக்கும் சற்றும் குறைவில்லாத வகையில் இலங்கையின் அரச இயந்திரம் தேசிய இனங்களை ஒடுக்குவதில் தேர்ச்சி பெற்றிருக்கின்றது.

உலகெங்கிலுமுள்ள மனித சமுதாயத்திற்கெதிரான கொடுங்கோலாட்சியாளரின் அங்கீகாரத்தோடும் ஆதரவோடும் இராணுவம், பொலிஸ் மற்றும் சிவில் அமைப்புகள், இரகசிய அமைப்புகளைப் பாசிச மயப்படுத்தியுள்ள அரசு, சற்றும் எதிர்பாராத வகையில் நடந்த மலையகத் தமிழரின் பேரெழுச்சியை கண்டு அதிர்ச்சியடைந்துள்ளதோடு இனியொரு போதும் இவ்வாறான போர்க்குணமிக்க எதிர்ப்புக்கள் எழுந்துவிடக் கூடாதென்பதில் மிகத் தீவிரமாக திட்டமிட்டு செயற்படுகின்றது.

1998ம் ஆண்டு இரத்தினபுரி, வேவல்வத்தை முதல் பலாங்கொடை வரையான தமிழர் குடியிருப்புகள் அரச, அமைச்சர்களின் ஆதரவு பெற்ற குண்டர்களால் தீமூட்டி, உடமைகள் கொள்ளையடிக்கப்பட்டு, பாலியல் வல்லுறவுக்கு தமிழ்ப் பெண்கள் இரையான போதும், அம்மையாரின் நல்லாட்சியில் அதைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. அக்காடைத்தனங்கள் நிராயுதபாணியான தமிழ் மக்கள் மீது ஆயுதமேந்திய சிங்கள காடையர்களாலும், பொலிசாராலும் மேற்கொள்ளப்பட்டன என்பதற்கு சாட்சியங்கள் இருந்த போதும் கூட எவ்வித விசாரணையும் நடாத்தப்பட்டு எந்தவொரு குற்றவாளியும் சட்டத்தின் முன் தண்டிக்கப்படவில்லை.

கடந்த 11வது பாராளுமன்றத் தேர்தலின் போது, களுத்துறையில் சிங்களக் காடையரால் தாக்கப்பட்ட தமிழ் தொழிலாளருக்கு எவ்வித பாதுகாப்பையும் அரசினால் வழங்க முடியவில்லை.

பிந்துனுவெவ முகாமில் நிராயுதபாணிகளாக வைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியவில்லை.

களுத்துறை சிறையில் தமிழ் இளைஞரது உயிர்கள் எப்பொழுதும் ஊசலாடிக் கொண்டிருக்கின்றன.

கண்டி, பதுளை சிறைகளிலும், மலையக பொலிஸ் உளவு நிறுவனங்களிலும் நடக்கும் மனித உரிமை மீறல்கள், அரச பயங்கரவாதம் எவரது கண்ணையும் உறுத்தவில்லை, காதிலும் உறைக்கவில்லை.

ஆனால், மலையகத்தில் வாழும் பெரும்பான்மையான சிங்கள மக்களைப் பாதுகாப்பது என்ற பெயரில் மலையகமெங்கும், புவியியல் கேந்திர முக்கியத்துவமிக்க இடங்களில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

மலையகத்தின் எழுச்சியையும் எழுச்சிக்குரிய சகல அம்சங்களையும் நசுக்கி முடமாக்கி விடுவது தான் அரசினதும், அரசோடு இணைந்திருக்கின்றதும், அவற்றுக்கு வெளியில் இருந்து ஆதரித்து வருகின்றதுமான சக்திகளின் நோக்கம்



என்பது வெளிப்படையானது.

மலையகத்தில் அமைக்கப்படும் இராணுவ முகாம்களின் மூலம் அங்கு தோட்டங்களிலும் தோட்டங்களுக்கு அண்மையாகவுள்ள கிராமங்களிலும் ஐம்பதாண்டுகளுக்கு மேலாக வாழ்ந்துவரும் சிங்கள மக்களைப் பாதுகாக்க முனைவது நகைப்புக்குரியது. கிராமவாசிகளால் தோட்டங்களில் வாழும் தமிழர்கள் மீது எண்ணற்ற ஆத்திரமூட்டல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மலையகத் தமிழர்களின் நூற்றுக்கணக்கான விலைமதிப்பற்ற உயிர்கள் பறிக்கப்பட்டன. நூற்றுக்கணக்கான பாலியல் வல்லுறவுகள் புரியப்பட்டன. தீ மூட்டலும் கொள்ளையிடலும் அன்றாட நிகழ்வுகளாயிருக்கின்றன. ஆனால், இதற்கெதிராக மலையகத் தமிழர்களின் எதிர்ப்பு மிகவும் அமைதி வழியிலானதாகவே இருந்து வந்திருக்கின்றது. விரல்விட்டு எண்ணக்கூடிய வன்முறை எதிர்ப்புக்களைத்தவிர.

மலையகத்தில் நெருக்கடிகள் ஏற்படும் போதெல்லாம் தமிழர்களை வேட்டையாட அனுப்பப்படுகின்ற இராணுவமும், பொலிசாரும் தம் கடமையை பேரினவாத நிலைப்பாட்டில் நின்று மிகச்சிறப்பாக நடைமுறைப்படுத்துகின்றனர்.

2000ம் ஆண்டு ஒக்டோபர் பேரெழுச்சியோடு பிரவேசித்த இராணுவமும், பொலிசும் மற்றும் காடையருடன் சேர்ந்து நூற்றுக்கணக்கான கடைகள், வீடுகளை கொள்ளையடித்து தீமூட்டி எரித்தது. நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் கைதாகி கடும் வதைக்குள்ளாகியதோடு அவசரகாலச் சட்டத்தின் கீழ் வழக்கை எதிர்கொண்டுள்ளனர். இரண்டு மாதங்களின் பின்பும் அப்புத்தளையில் 10 தமிழர்கள் இவ் எழுச்சியோடு தொடர்புபடுத்தப்பட்டுக் கைதாகியுள்ளனர்.

மலையகத் தமிழரிடம் இராணுவமும், காடையரும் கொள்ளையிட்ட கோடிக் கணக்கான ரூபா பெறுமதியான பொருட்களை மந்திரவித்தை மூலம் மறைக்கப்பட்டு விட்டனவா என்ன, அத்தனையும் பங்கிடப்பட்டு காடையர்களிடமும் , இராணுவ சிப்பாய்களின் வீடுகளிலும் இருக்கக் கூடும். இவற்றைத்தேடி மீட்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

ஆனால், அங்கொன்றும், இங்கொன்றுமாய் அமைக்கப்பட்டுள்ள, ஆனால், முக்கியத்துவமிக்க சிங்களக் குடியேற்றங்களை பாதுகாக்கவென்ற பெயரில் இராணுவ முகாம்கள் அமைக்கப்படுகின்றன.

வடகிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றங்களைப் பாதுகாக்க அரச வெறும் படைமுகாம்களையும், தொண்டர் படைகளையும் கூலிக் கும்பல்களையும் கிரிமினல்களையும் அனுப்பியது. ஆனால், அரசினால் குடியேற்றவாசிகளைப் பெரும் பொருளாதார, இராணுவ முட்டுக் கொடுப்புக்கு மத்தியிலும் பாதுகாக்க முடியவில்லை. குடியேற்ற ஆக்கிரமிப்பு கொள்கையை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்திய இஸ்ரேலால் கூட அதன் யூத குடியேற்றங்களை பலஸ்தீன பகுதிகளில் அரை நூற்றாண்டுகளாகப் பாதுகாக்க முடியவில்லை.

எனவே இராணுவ முகாம்கள், கூலிக்குழுக்கள், தொண்டர் படைகள் மூலம் மலையகத் தமிழரை அடக்கியாண்டுக் கொண்டு, இராணுவம் சிங்களக் குடியேற்றங்களைப் பாதுகாப்பதென்பது துரநோக்கற்ற வங்குரோத்தடைந்த அரச நிலைப்பாடாகும்.

மலையகத்தில் வாழும் சிங்களவர்கள் விரட்டப்படப் போகிறார்கள் என பேரினவாதக் கட்சிகளான ஜே.வி.பியும், சிஹல உருமயவும் குரல்கொடுத்துவரும் நிலையில் அரசு மேற்கொள்ளும் ஆக்கிரமிப்புத் திட்டம் மூலம் சிங்களவரை பாதுகாப்பது என்பது என்றென்றைக்குமாக முடியாததாகும்.

மலையகத் தமிழரோடு ஒற்றுமையாக வாழவிரும்புகின்ற சிங்களவர்கள் மலையகத் தமிழரின் அரசியல் உரிமைகளை அங்கீகரிப்பதோடு மலையகத் தமிழரின் தேசிய இருப்பை அங்கீகரித்து ஏற்றுக் கொள்ள வேண்டும். 50 ஆண்டுகளாக பரஸ்பரம் நம்பிக்கையீனம், சந்தேகம், ஆண்டான் அடிமை மனப்பாங்குகளோடு எதிரெதிரே வைக்கப்பட்டுள்ள இரண்டு தேசிய இனங்களில் பெரும்பான்மை இனமான சிங்களவர்களுக்கு ஒரு அரசும், அரச இயந்திரமும், அதன் ஆயுதப்படைகளும் மலையகத் தமிழரை ஒடுக்குகின்ற சக்திகளாக இருந்து வருகின்றன. இவற்றின் கருவியாக மலையகத்தில் வாழும் சிங்களவர்கள் இருப்பார்களானால் அரசுடன் சார்ந்திருக்க வேண்டும். ஆனால், நீண்ட கால நோக்கில் மலையகத் தமிழரின் அரசியல் சுயநிர்ணயத்தை அங்கீகரிப்பதனூடாகவே சிங்களவர்கள் இராணுவ பாதுகாப்பைவிட அதிக பாதுகாப்பைப் பெற முடியும்.

○

# தூக்கு மேடையை நோக்கிய பயணத்தில் மலையக இளைஞர்கள்!

– நேசன்

அரசியல் காரணங்களுக்காக மலையகத் தமிழரை வேட்டையாடுவதில் இலங்கை அரசை எவரும் மிஞ்சிவிட முடியாது. கடந்த 1958ம் ஆண்டு முதல் தொடரும் இத்துயரம் உலகின் கண்களுக்கு மறைக்கப்பட்டுக் கிடக்கின்றன.

1985ம் ஆண்டு நுவரெலியாவில் தொலைக்காட்சி அஞ்சல் கோபுரம் தாக்கப்பட்டதன் விளைவாக,

402 ஆசிரிய நியமனங்களை பெற்றுக் கொடுத்தோம் என மார்தட்டும் மலையகத் தலைமைகள் தம் அகிம்சைவழி அரசியல் இலாபங்களுக்காக மலையக இளைஞர்களைத் தொடர்ந்தும் பலியிட்டு வருகின்றனர்.

உலகின் கொத்தடிமைத்தனம் நிலவும் சமூக அமைப்புகளில் ஒன்றாகக் காணப்படும் மலையகத் தமிழரிடையே ஏற்படும் ஒவ்வொரு கொந்தளிப்பின் பின்பும், இளைஞர்களை வேட்டையாடிவரும் சிங்கள ஆளும் வர்க்கங்கள், அண்மைக் காலங்களில் இவ்வேட்டையை தீவிரப்படுத்தியுள்ளனர். பதுளை, பசறை, கம்பளை, மாத்தளைப் பகுதிகளில் மலையக இளைஞர்களைத் தொடர்ந்து பொய்க் குற்றச்சாட்டுகளின் பெயரில் வேட்டையாடிவரும் அரச படைகள், சில மலையக அரசியல் தலைவர்களின் ஆதரவுடன் தூக்கு மேடைக்கு அனுப்பவும் தயாராகி வருகின்றன.

இவ்வகையில் பிந்துனுவெவ படுகொலைக்கு எதிரான பேபெருழுச்சியின் பின் தொடங்கிய வேட்டையில் மாட்டிக் கொண்ட 13 பேரும், அதனோடு தொடர்புடையோர் என்று தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். தவிரவும் அப்புத்தளை, வட்டவளை பகுதிகளில் இளைஞர்கள் தொடர்ந்து வேட்டையாடப்பட்டு வருகின்றனர்.

1998ம் ஆண்டு அட்டன் செண்பகவத்தை (செனன்) தேயிலைத் தொழிற்சாலையில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலோடு தொடர்புடையோர் எனக் குற்றம் சாட்டப்பட்ட சுப்பு உதயகுமார், பிச்சமுத்து சந்திரன், அருணாசலம் யோகேஸ்வரன், கோணாமலை, லோகநாதன், பொன்னையா, சரவணகுமார், சாமிமுத்து பெனடிக்ட் ஆகிய ஆறுபேரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கண்டி பொலிஸ் நிலையத்திலும், கொழும்பு சிறப்புப் புலனாய்வுப் பிரிவிலும், இரு வருடங்களுக்கும் மேலாக கடும் தாக்குதல்கள் உடல் உள சித்திரவதைகளுக்குப் பின்னரும் தடுத்து வைத்துள்ளனர்.

உதவிப் பொலிஸ் அதிபர் ஒருவர் உட்பட 12 பேர் கொண்ட சிறப்பு விசாரணைக்குழு இவர்களை பின்புற முதுகெலும்பில் தாக்கியும், கணுக் கால்களை உடைத்தும், பாதங்களில் குண்டாந் தடியால் அடித்தும், பெற்றோல் நிரப்பிய பொலித்தீனால் முகத்தை மூடி கட்டியும், நாற்காலிக்கு அடியில் குனிய வைத்து அடித்தும், பாலுறுப்புக்களை நசுக்கியும் பட்டினி போட்டும், தாகத்தால் தவிக்கவிட்டும், ஒரு வருடம் கொடுமைப்படுத்தி சிங்களத்தில் தயாரிக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலங்களில் கையெழுத்து பெற்றுள்ளனர்.



இவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் காரணமாக காது செவிடாகியும், தலைவலி நகக்கணுக்களில் வெடுவெடுப்புக்கும் உள்ளாகியுள்ளனர். கடும் வதைக்குள்ளான சுப்பு உதயகுமார் ஐந்து நாட்கள் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டதோடு சட்ட மருத்துவ அதிகாரியிடம் தொடர்ச்சியான சிகிச்சைக் குட்படுத்த பணிக்கப்பட்டுள்ள போதும், சிகிச்சை தொடர்ந்து வழங்கப்படவில்லை.

இவர்கள் நீதிமன்றத்தின் முன் கொண்டு வரப்படாமல் 13 மாத காலமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த பின்னர் 1999ம் ஆண்டு ஜூலை 8ம்திகதி நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டனர்.

இவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் 20 வருட கால சிறைத் தண்டனைக்கு ஆளாக்கப்படக் கூடியவை.

இவ் இளைஞர்களை விடுவிப்பதற்கான போராட்டத்திலும், பிரச்சாரத்திலும் மலையக அரசியல் கட்சிகள், தொழிற்சங்க இயக்கங்கள், தொண்டர் ஸ்தாபனங்கள், மனித உரிமை இயக்கங்கள் மூச்சு விடவில்லை.

பிந்துனுவெவ படுகொலை எதிர்ப்பெழுச்சியில் அரசியல் இலாபம் தேடும் மலையக தலைமைகள், இவ் அப்பாவி இளைஞர்களின் விடுதலைக்கு குரல் தராததன் மூலம் தமது நாற்றமெடுக்கும் முகத்திரையை மீண்டும் ஒரு முறை வெளிக்காட்டியுள்ளனர்.

இவர்களது விடுதலை தொடர்பாக சோசலிச சமத்துவ கட்சியின் அனைத்துலக புதிய பிரச்சார இயக்கத்தைத் தொடங்கியுள்ளது. விபரங்களுக்கு www.wsws.org என்ற இணையத் தளத்தில் தொடர்பு கொள்ளலாம்.

○

நன்றி - நூலகத்திட்டம்



# தலைமை யார் என்பதல்ல வழி சரியானதாக இருக்க வேண்டும்!

- பழ.நெடுமாறன்

***பிரபலமான பத்திரிகைகளுக்கு பேட்டி கொடுப்பதில்லை என்று மறுத்து விட்டீர்களாமே?***

ஒவ்வொரு பத்திரிகைக்கும் ஒரு கொள்கை இருக்க வேண்டும். நான் அதை மதிக்கிறேன். அந்தக் கொள்கையைத் தலையங்கத்தில் தான் காட்ட வேண்டும். ஆனால், செய்திகளை எல்லாம் கூட திரித்து, மறைத்து - உண்மைக்கு மாறாகத் தொடர்ந்து வெளியிடுகிறார்கள். News Papers ஆக அவர்கள் நடத்தவில்லை. Views Papers ஆகத்தான் நடத்துகிறார்கள். எனவே இப்படிப்பட்ட பத்திரிகைகளுக்குப் பேட்டி கொடுப்பதில்லை என்று முடிவெடுத்து விட்டேன்.

இதற்கு எடுத்துக்காட்டாக ஒரு செய்தியைச் சொல்கிறேன். ராஜிவ் காந்தி வழக்கில் 26 பேருக்குத் தூக்குத்தண்டனை வழங்கப்பட்ட பொழுது, 'குமுதம்' ஆசிரியராக இருந்த மாலன், "26 பேரையும் தூக்கு மேடையில் ஏற்றி 'லீவர்' இழுக்கும் சத்தம் கேட்கணும். அது தான் நிம்மதியான சத்தம்' என்று கொஞ்சம் கூட மனித நாகரீகமின்றி எழுதினார். அதற்குப் பிறகு, இவர்களில் 19 பேர் விடுதலையான பிறகு அதே பத்திரிகையில் இருந்து பேட்டிக்கு வந்தார்கள் மறுத்து விட்டேன்.

***ராஜிவ் வழக்கில் எஞ்சியுள்ள மூன்று பேரின் தண்டனையையும் நிறுத்த தற்பொழுது என்ன முயற்சியைச் செய்து கொண்டிருக்கிறீர்கள்?***

இது குறித்து மத்திய அமைச்சரவை தான் முடிவெடுக்க வேண்டும். இதில் எங்களுக்குக் கிடைத்த ஒரு பெரிய வெற்றி என்னவென்றால், இந்த நான்கு பேரின் தூக்குத் தண்டனையை உறுதி செய்து தமிழக ஆளுநர் ஓர் ஆணையைப் பிறப்பித்தார். ஆனால், இது போன்ற ஆணையைப் பிறப்பிக்க அவருக்கு உரிமை இல்லை. தமிழக அமைச்சரவை தான் இது பற்றி முடிவெடுக்க வேண்டும் என்பதை நாங்கள் சட்டபூர்வமாக உயர்நீதிமன்றத்தில் வழக்காடி நீதியை நிலை நிறுத்தினோம். இதன் மூலம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்குத் தான் அந்த அதிகாரம் உண்டு. ஆளுநருக்கு அரசியல் சட்டப்படி அந்த அதிகாரம் இல்லை என்பதை நீதிமன்றத்தின் மூலம் நிலைநாட்டி இருக்கிறோம்.

***ராஜிவ் வழக்கில் 26 பேருக்குத் தூக்கு என்றவுடன், மரண தண்டனையை எதிர்த்தீர்கள். இது மற்றவர்களுக்கும் தொடருமா?***

தொடர்ந்து செய்ய வேண்டும். செய்கிறோம். அண்மையில் கோவிந்தசாமிக்கு வழங்கப்பட்ட தூக்குத் தண்டனையைத் தடுக்க - குடியரசுத் தலைவருக்கு மனு கொடுத்தோம். இந்தியா முழுவதும் தூக்குத் தண்டனைக்கு எதிராக செயற்படுகின்றவர்களை ஒன்றிணைத்து நாங்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம். தூக்குத்தண்டனையை அறவே ஒழிக்க வேண்டும் என்ற கருத்தை முன் வைத்து டெல்லியில் பல கட்சித் தலைவர்களைச் சந்தித்து ஆதரவு திரட்டிக் கொண்டிருக்கிறோம்.

மரண தண்டனை தேவை என்று சொன்னவர்கள் கூட, இன்றைக்கு அதை வெளிப்படையாகச் சொல்ல முடியாத சூழலை உருவாக்கி இருக்கிறோம். மரண தண்டனை கூடாது என்ற கருத்தை இதற்கு முன்பு கூட மனித உரிமை இயக்கங்கள் முன்வைத்துள்ளன. ஆனால், ராஜிவ் வழக்கில் ஒட்டுமொத்தமாக 26 பேருக்குத் தண்டனை அளிக்கப்பட்ட பிறகு, இதை ஒரு மக்கள் இயக்கமாகக் கொண்டு செல்லும் முயற்சியை நாங்கள் மேற் கொண்டிருக்கிறோம்.

***நீங்கள் முன்வைக்கும் தமிழ்த் தேசியம் எந்த வகைத் தமிழ்த் தேசியம்?***

மரபின் அடிப்படையிலும் மத அடிப்படையிலும் ஒரு தேசியம் உருவாகவே முடியாது. மொழி அடிப்படையில் தான் தேசியம் உருவாக முடியும். தமிழர்கள், தெலுங்கர்கள், கன்னடியர்கள், மலையாளிகள் - இவர்கள் எல்லாம் மரபின் அடிப்படையில் திராவிட இனத்தைச் சார்ந்தவர்கள். ஆனால், இது ஒரு தேசிய இனத்தின் அடையாளமாக இருக்க முடியாது. சீனர்கள், ஜப்பானியர்கள், கொரியர்கள், இந்தோனேசியர் என தென் கிழக்கு ஆசியாவில் இருப்பவர்களை எடுத்துக் கொண்டால், மரபின் அடிப்படையில் இவர்கள் எல்லாம் மங்கோலிய இனத்தைச் சார்ந்தவர்கள். ஆனால், சீனர்கள் தனித் தேசிய இனம் தான். ஜப்பானியர்கள் தனித் தேசிய இனம் தான். கொரியர்கள் தனித் தேசிய இனம்



தான் - மொழியின் அடிப்படையில் உலகம் முழுவதும் இதே நிலை தான்.

***ஒரு நாட்டின் அடிப்படையில் ஒரு தேசிய இனம் உருவாகுமா?***

உருவாகாது. சுவிட்சர்லாந்தை எடுத்துக் கொண்டால், அங்கு ஜெர்மனியர்கள், பிரஞ்சுக்காரர்கள், இத்தாலியர்கள் ஆகிய மூன்று இனத்தவர்களும் வசிக்கின்றார்கள். பெரும்பான்மை மக்களாக 60 சதவீதம் ஜெர்மனியர்கள் வசிக்கிறார்கள். ஆனால், சுவிட்சர்லாந்தியன் என்றொரு தேசிய இனம் உருவாக முடியாது. எனவே மொழிவழித் தேசியத்தைத் தான் நாங்கள் வலியுறுத்துகிறோம்.

***தமிழர்களை சிங்களவர்கள் ஒடுக்கு கிறார்கள் என்பதனால் தான் நீங்கள் ஈழத்துக்கு குரல் கொடுக்கிறீர்கள். ஆனால், தமிழ் நாட்டில் தமிழன், சகதமிழனையே ஒடுக்கு வது குறித்து குரல் எழுப்ப மறுக்கிறீர்களே?***

1980களிலேயே புளியங்குடியில் ஒரு பெரிய சாதிக்கலவரம் நடந்தது. அப்பொழுது நான் சட்டமன்ற உறுப்பினர். உடனே அங்கு சென்றேன். அப்போது அங்கு தமிழ் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த எஸ்.பி. ஒருவரின் வீட்டையே தாக்கினார்கள். இது பற்றி சட்டமன்றத்தில் முதன் முதலில் நான் தான் கண்டித்துப் பேசினேன்.

தமிழ்த் தேசிய இயக்கங்கள் இதில் அக்கறை கொண்டு தான் இருக்கின்றன. ஆனால், தி.மு.க, அதி.மு.க., காங்கிரஸ் போன்ற கட்சிகள் சாதி மோதல்களைத் தடுக்க எதுவும் செய்யவில்லை. பத்திரிகைகளும் அவர்கள் செய்தால் தான் விளம்பரம் கொடுக்கிறார்கள். தமிழ்த்தேசிய இயக்கங்கள் இது போன்ற பிரச்சினையைக் கையிலெடுக்கும்போது பத்திரிகைகள் இதற்குப் போதுமான முக்கியத்துவம் கொடுப்பதில்லை என்பது தான் உண்மையே தவிர, அக்கறை இல்லை என்று சொல்ல முடியாது.

***ஈழத்தமிழர் பிரச்சினையில் காட்டு கின்ற அக்கறையை – தலித் பிரச்சினையில் காட்டுகின்றீர்களா? வெளிப்படையாகவே கேட்கிறோம். அண்மையில் வெளிவந்த மோகன் கமிஷன் அறிக்கையைக் கண்டித்து நீங்கள் ஒரு அறிக்கை கூட விடவில்லையே?***

தாமிரபரணி படுகொலை நிகழ்ந்த போது, எங்கள் இயக்கத்தின் சார்பில் அடுத்த நாளே சென்று உண்மையைக் கண்டறிந்து - பத்திரிகைகளில் அறிக்கை வெளியிட்டிருந்தோம். கமிஷன் நடைபெறும் போது, எங்கள் இயக்கத்தின் சார்பில் அதிகாரப்பூர்வமாக அறிக்கை தாக்கல் செய்திருக்கிறோம். மோகன் கமிஷன் அறிக்கையை சட்டமன்றத்தில் வைத்திருக்கிறார்களே தவிர - அது இன்னும் நடைமுறைக்கு வரவில்லையே. அப்படிச் செயல்படுத்தும் போது, என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்வோம். டாக்டர் கிருஷ்ணசாமியே இது குறித்து அனைத்துக் கட்சியைக் கூட்டியிருக்க வேண்டும். நாங்கள் முழு ஒத்துழைப்பு தந்திருப்போம்.

***இது மட்டுமல்ல, சாதி இழிவுகளை ஒழிக்க நீங்கள் முன்முயற்சி எடுத்திருக்க வேண்டாமா?***

நல்ல யோசனை தான். கண்டிப்பாக செய்வோம். இதில் எவ்வித தயக்கமும் எங்களுக்கு இல்லை.

***தங்கள் இயக்கத்தின் சாதி ஒழிப்புத் திட்டங்கள் என்ன?***

ஒடுக்கப்பட்ட தன்மைகளையும் பிற்படுத்தப்பட்ட தன்மையையும் அடியோடு நீக்க வேண்டும் என்பதே எங்களின் கருத்து. சாதி மறுப்புத் திருமணம் செய்பவர்களுக்கு சலுகைகள் அளிக்க வேண்டும். இது போல ஒரு 50 ஆண்டுகள் தொடர்ச்சியாக செய்து வந்தால் மாற்றத்தைக் காண முடியும்.

***இது மட்டும் போதுமா?***

சாதிப் பாகுபாடுகளால், சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள சீரழிவுகளைப் போக்குவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். எங்களால் இயன்ற அளவு பிரச்சாரம் செய்து வருகிறோம். கருத்தரங்குகள் நடத்துகிறோம்.

***டாக்டர் அம்பேத்கரும் பெரியாரும் சாதி ஒழிப்புக்கு – இந்து மத ஒழிப்பு போன்ற சில அடிப்படைத் திட்டங்கள் வகுத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையை நீங்கள் வலியுறுத்துவதில்லையே? ஒருவன் இந்துவாகவும் இருக்கலாம் ஆனால், சாதித் தன்மை மட்டும் இருக்கக் கூடாது என்றால் முடியுமா?***

பிற மதங்களிலும் சாதி இருக்கிறதே! அம்பேத்கர் பெரியார் சொன்ன காலகட்டங்கள் வேறு. மதத்தை இப்பொழுது தொட வேண்டாம் என்று பார்க்கிறோம். மத எதிர்ப்பு, மூட நம்பிக்கை பிரச்சாரம் என்பது வேறு. மதம் என்பது ஆழமாக மக்களிடத்தில் ஊடுருவிப் போயிருக்கிறது. இக்கருத்தை பெரியார், அம்பேத்கர் சொன்னால் தான் வலிமை இருக்குமே தவிர, மற்றவர்கள் சொன்னால் அது தவறாகத் தான் புரிந்து கொள்ளப்படும். அவர்கள் செய்தது மாதிரி நாம் செய்ய முடியாது. இன்றைய கால கட்டத்தில் அது சரியாக வராது. மேலும் இது நேர்மாறான விளைவுகளை ஏற்படுத்தி விடும்.

***ஈழத்தில் நீங்கள் நீண்ட சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கிறீர்கள். அங்குள்ள மக்களைச் சந்தித்து – அவர்களுடன் வாழ்ந்திருக்கிறீர்கள். அங்கும் சாதியே கோலோச்சுவ தாகத் தகவல்கள் வருகின்றனவே?***

இந்தியாவில் எப்படிப் பார்ப்பனர்கள், ஆதிக்க சாதியாக இருக்கிறார்களோ, அதே போல் ஈழத்தில் வெள்ளாளர்கள் ஆதிக்க சாதியாக இருக்கின்றனர். ஈழத்தில் 'இலங்கைத் தமிழர் காங்கிரஸ்' என்றொரு கட்சி துவங்கிய காலத்தில் இருந்து இறுதியாக 'தமிழர் விடுதலைக் கூட்டணி' வரை ஏற்பட்ட தலைமை அனைத்தும் வெள்ளாளர் தலைமை தான். இவர்களை மீறி யாரும் எதுவும் செய்ய முடியாது. போராளி இயக்கங்களான ஈ.பி.ஆர்.எல்.எப்., டெலோ, புளொட், என எல்லாத் தலைமையும் வெள்ளாளர் தலைமை தான்.

இதில் விடுதலைப் புலிகளின் தலைமை மட்டும் தான் மாறுபட்டது. விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், தாழ்த்தப்பட்ட மீனவ சமூகத்தைச் சார்ந்தவர். (மீனவர்கள் அங்கு தீண்டத்தகாத சமூகமாகும்.) அதனாலேயே இவர்கள் பிரபாகரனை ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள். 'பிரபாகரனை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்' என்று என்னிடமே வெளிப்படையாகப் பேசியும் இருக்கிறார்கள்.

அமிர்தலிங்கம் ஒரு பெரிய தலைவர். அவரிடம் நான் பேசிக் கொண்டிருக்கும் போது, 'பிரபாகரனை நீங்கள் இணைத்துக் கொள்ள வேண்டும், அது தான் சரியானது' என்றேன். அப்போது அவருடைய மகன் குறுக்கிட்டு பிரபாகரனின் சாதியைப் பற்றி மிகவும் மோசமாக ஒரு வார்த்தையைச் சொல்லித் திட்டினார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. அமிர்தலிங்கமும் மழுப்பி விட்டார்.

பிறகு இது குறித்து நான் விசாரித்த போது தான், எனக்கு இந்த உண்மைகள் தெரிய வந்தன. சாதி ஒரு முக்கியமான காரணம்.

ஒரு ஆதிக்க சாதியின் பிடி போவதில் அவர்களுக்கு ஒரே கோபம். ஆனால், இன்றைக்கு இதை எல்லாம் தாண்டி பல தரப்பட்ட மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தலைவராக பிரபாகரன் மலர்ந்திருக்கிறார். விடுதலைப் புலிகள் இயக்கத்தை - சாதிக்கு அப்பாற்பட்ட இயக்கமாக உருவாக்கியிருக்கிறார்கள்.

எல்லா சாதியைச் சார்ந்த இளைஞர் களும் இதில் உள்ளனர். அது மட்டுமல்ல, இயக்கத்தில் திருமணம் செய்து கொள்வ தற்குக் கூட இரண்டு நிபந்தனைகள் உண்டு. 1 சாதி மறுப்புத் திருமணம். 2. விதவைத் திருமணம். இயக்கத்தில் எல்லா திருமணங்களும் அப்படித் தான் நடைபெறுகின்றன. அது வேகமாகப் பரவி வருகிறது. இதன் மூலம் மக்கள் மத்தியில் இக்கருத்து செயல் வடிவம் பெற்று வருகிறது.

விடுதலைப் புலிகளின் ஆதிக்கத்தில் இருக்கிற பகுதிகளில் எல்லாம் தீண்டாமையை அடியோடு ஒழித்துவிட்டார்கள். சாதி வெறியுடன், யாராவது பேசினால், செய்தால், கடுமையான தண்டனையைப் புலிகள் விதித்து வருகின்றனர். அங்கு நடைபெறும் போராட்டம் வெறும் அரசியல் விடுதலைப் போராட்டமாக நடைபெறவில்லை. அது சமூக விடுதலைப் போராட்டமாகவும் ஒரே நேரத்தில் நடைபெறுவதால் இதெல்லாம் அங்கு சாத்தியமாகிறது. எனவே அங்கு வேகமான மாற்றத்தைக் காண முடிகிறது.

***அங்கு தலித் தலைமை வந்தால் எப்படி மக்களின் விடுதலை விரைவு படுத்தப்படுகிறதோ, அதே தத்து வத்தை இங்கும் பொருத்திப் பார்க்கலாம் அல்லவா?***

அதே மாதிரி இங்கு வந்தால் ரொம்ப நல்லது. அதை நான் வரவேற்கிறேன். ஆனால், அங்கு அது ஆயுதம் தாங்கிய போராட்டத்தின் மூலம் வந்தது. இங்கு அது போன்ற ஒரு சூழல் வந்தால் நல்லது. யார் தலைமை தாங்குகிறார்கள் என்பது முக்கியமல்ல, அது சரியான திசை வழியில் செல்ல வேண்டும். அது ஒரு தலித் மூலம் வருகிறது என்று சொன்னால், அது இரட்டிப்பு மகிழ்ச்சிக்குரியது.

நன்றி : தலித் முரசு
(ஜனவரி 2001)

நன்றி - நூலகத்திட்டம்



# பிந்துனுவெவவும் சிங்களப் பத்திரிகைகளின் திரிப்பும்!

**ரத்னா**

2000 ஒக்டோபர் 25ம் திகதி இடம் பெற்ற பண்டாரவளை பிந்துனுவெவ இளைஞர் புனர்வாழ்வு முகாம் படுகொலைகள் நாட்டை உலுக்கிய ஒரு சம்பவம் என்று கூறுவதில் தப்பில்லை. தமிழர் மனங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கிய இச் சம்பவம் குறித்தான உண்மைகள் இது நாள் வரை வெளிவராமை குறிப்பிடத்தக்கதாகும்.

எவ்வாறாயினும் இச்சம்பவம் குறித்து தொடர்பூடகங்கள் பரஸ்பரம் முரண்பாடான தகவல்களை அறிக்கையிட்டமை அனைவரினதும் விமரிசனத்திற்கும், விசனத்திற்கும் உள்ளான விடயம் எனலாம். குறிப்பாக சிங்களப் பத்திரிகைகள் இச் சம்பவத்தை அறிக்கையிட்டமையை அவதானிப்பவர்கள் இவை அனைத்தும் பக்கச்சார்பான அறிக்கையிடல்கள் என்பதைக் கண்டுகொள்வர்.

2000 ஒக்டோபர் 25ம் திகதி நடைபெற்ற இச்சம்பவத்தை 26ம் திகதி சிங்கள நாளிதழ்கள் இவ்வாறு பிரதான தலைப்புச் செய்தியில் அறிக்கையிட்டிருந்தன.

***தினமின:*** பிந்துனுவெவ புலிகள் புனர்வாழ்வு முகாம் மோதலில் 25 பேர் மரணம்.

***திவயின:*** பிந்துனுவெவ கிராமத்துடன் புலிகள் மோதலில் 24 புலிகள் மரணம்.

***லங்காதீப:*** பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் மோதலில் 25 பேர் மரணம். புலிச் சந்தேக நபர்கள் முகாம் பொறுப்பாளரை பணயம் வைத்துள்ளனர்.

***லக்பிம:*** கிராமவாசிகளுடனான மோதலில் புலிச் சந்தேக நபர்கள் பலி.

இந்த அறிக்கையிடல்கள் யாவும் உண்மைச் சம்பவத்தை உணர்த்தாதவையாகவும், மனம் போன போக்கில் விரித்துரைக்கப்பட்டவையாயும், வீரர்களையும் துஷ்டர்களையும் தம் விருப்பின் பேரில் உருவாக்கும் காரியத்தைச் செய்துள்ளவையாயும் உள்ளன எனலாம்.

பொதுவாக சிங்களப் பத்திரி கைகள் இனவாதத்தை தூண்டும் வகையிலான செய்திகளை வெளியிடுவதில் ஆற்றும் பங்கு சிறப்பானது. உண்மைகளை சீர்தூக்கிப் பார்க்கும் பத்திரிகையியலுக்கான ஒழுக்கக்கோவைகளைக் கூட சரியான முறையில் கடைப்பிடிக்காத தன்மை இவற்றுக்கு உண்டு. இவ்வகையில் இந்நாட்டில் எரியும் இனப்பிரச்சினைக்கு இவை வார்க்கும் தீ பாரதூரமான விளைவுகளை இன்றளவிலும் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. இந்த அடிப்படையில் பிந்துனுவெவ சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு சிங்கள நாளிதழ்கள் கட்டியெழுப்பியுள்ள மாயையை உணர்தல், அவை சமூகத்தை எவ்வளவு தூரம் தவறான பாதையில் வழி நடாத்துகின்றன அறிவதற்குரிய சிறந்த அவதானங்களைத் தரும் எனலாம்.

சமூகத்திற்கு சரியான தகவல்களை வழங்கும் முக்கிய நோக்கத்தை சீர்குலைத்து வரும் இந்நாளிதழ்களின் செயற்பாடுகள், வகிக்கும் பங்கு என்பனவற்றை விளங்கிக் கொள்வது இலகுவானது அல்ல.

ஆயினும் இந்த பிந்துனுவெவ சம்பவம் இவ் ஊடகங்களின் உண்மைத் தன்மையை புலப்படுத்தும் ஒரு சிறந்த உதாரணமாகும்.

குறிப்பாக தொடர்ச்சியாக இச்சம்பவத்தை அறிக்கையிட்டுள்ளமையை அவதானிக்கும் போது, சிங்களத் தொடர்பூடகங்களில் குறிப்பாகப் பத்திரிகைகள் ஒரு மாயையான வரலாறு அல்லது கதையை உருவாக்க முனைந்துள்ளமையைக் காணலாம். அது தமிழ் மக்களுக்கு எதிராக சிங்களவர்களைத் தூண்டும் தன்மையைக் கொண்டதாகும்: தமிழர்கள் அனைவரும் பயங்கரவாதிகள் என்ற தோற்றத்தைத் தருவதாகும்: பயங்கரவாதிகள் அவர்கள் எப்படிப்பட்டவர்களாயினும், சிங்களவர்களால் அழிக்கப்பட வேண்டியவர்கள் என்ற நியாயத் தன்மையை உறுதிப்படுத்துபவையாகும்.

### சிங்களப் பத்திரிகைகளின் தவறான அறிக்கையிடல்கள்

தினமின பத்திரிகையின் அறிக்கையிடலில், சந்தேக நபர்களான புலிகள் தமக்குள் சண்டைபோட்டுக் கொண்டு பரலோகம் போய்விட்டார்கள் என்ற வெளிப்பாட்டுடன் கூடிய தகவல்களைச் சேர்த்து, கூறப்படுகின்றது, வெளிப்படுகின்றது, தெரியவருகின்றது என்ற அடிப்படையில் செய்தி தரப்பட்டுள்ளது. இது சகல சிங்களப் பத்திரிகைகளுக்கும் பொருந்தும். தமக்குச் சாதகமான முரண்பாடான, தவறான தகவல்களை அவை அறிக்கை யிட்டுள்ளன.

தடுப்பு முகாமில் இருந்த இளைஞர்களை 26-10-2000 திகதி லங்காதீப நான்கு முறையும், லக்பிம மூன்று முறையும், திவயின ஒரு முறையும் புலிகள் எனக் குறிப்பிட்டிருந்தன. மேலும், சம்பவத்தின் போது தப்பியோடிய இளைஞர்கள் பற்றிய எண்ணிக்கையை தினமின -5 என்றும், லக்பிம-15 என்றும், திவயின- 12 என்றும் முரண்பாடான தகவல்களைத் தந்துள்ளன.

2000ம் ஆண்டு ஒக். 26ம் திகதிய சிங்களப் பத்திரிகைகளின் அறிக்கையிடல்களின் முக்கிய நோக்கம், சிங்களத் தேசிய இனத்திற்கு சவாலாக இருக்கும் எதிரிகளை வீழ்த்தும் வகையிலான வரலாற்றைப் படைப்பது எனலாம். பிந்துனுவெவ மனிதப் படுகொலைகளை நீதியானது என்றும், சரியானது என்றும் நிறுவ அவை வரலாறு ஒன்றை, மாயையான கதையொன்றைக் கட்டியெழுப்பும் நடைமுறையைக் கையாண்டுள்ளதென்பதே சரியான விளக்கமாகும்.

பிரபலமான தொடர்பூடகங்களினூடாக கட்டியெழுப்பப்படும் இவ்வாறான கதைகளின் பிரதிபலன் தான் என்ன என்பதைப் புதிதாகக் கூற வேண்டியதில்லை.

பொலிஸ் அதிகாரிகள் மற்றும் இராணுவத்தினர் பலரும் ஆயுதங்களுடன் பலத்த காவல் புரியும் போது ஒரு குழு கத்திகள், பொல்லுகள் சகிதம் சென்று 41 பேரைத் தாக்கி அதில் 27 பேரை கொன்றமையை புலிகளின் திட்டம் என்று கூறி விட்டு அமைதியாக இருப்பதன் நோக்கம் என்ன? ஒன்று மக்கள் நீதியை தம் கையில் எடுத்து தீர்ப்பளிக்க வேண்டும் அல்லது இவ்வாறு செய்தது நியாயம் தான் என உறுதிப்படுத்த வேண்டும் என்பதே அந்த அமைதியின் நோக்கம். அதாவது வன்முறைகளைத் தூண்டும் வகையில் ஒரு கதையை உருவாக்கி சித்திரிப்பதே அதன் பிரதான நோக்கம். அது தொடர்ச்சியாக ஒவ்வொரு விடயங்களிலும், அறிக்கையிடல்களிலும் கடைப்பிடிக்கப்படுகின்றது.

### ஆசிரியர் தலையங்கங்கள்

பிந்துனுவெவ பற்றி முதலாவது ஆசிரியர் தலையங்கத்தை லக்பிம எழுதியுள்ளது. இவ் ஆசிரியர் தலையங்கங்கள் ஒரு கருத்தியலை கட்டியெழுப்ப முயற்சித்துள்ளமையை அவதானிக்கலாம். குறிப்பாக ஆசிரியர் தலையங்கங்களில் கூறப்பட்டுள்ள முக்கியமான விடயங்களை அவதானித்தோமானால்,


***27-10-2000 லக்பிம***

✔ தம்மை விடுவிக்குமாறு கோரிய புலிச் சந்தேக நபர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டமே இத்தகைய சம்பவத்திற்கு காரணம்.

✔ முகாமில் புனர்வாழ்வுக்குட்படுத்தப்பட்ட இளைஞர்கள் இவ்வாறு அடைத்து வைக்கப்படுவதன் காரணம் அவர்கள் சமூக விரோதத் தன்மை கொண்டவர்களாக இருப்பதே.

✔ இவ்வாறானவர்களை சுதந்திரமாக விடுதல் ஆபத்தானது.

✔ இங்கு தமது வரையறை எது என்று அறியாத வகையில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.



✔ முகாம் பொறுப்பாளரை பணயம் வைக்கும் அளவுக்கு சந்தேக நபர்கள் மோசமானவர்கள்.

✔ தம்மை விடுவிக்குமாறு முகாம் அதிகாரி களை கற்கள், தடிகள், பொல்லுகள் கொண்டு தாக்கி எதிர்ப்புத் தெரிவித்தமையே பாரிய மோதலாக வெடித்துள்ளது.

✔ எவராலும் கட்டுப்படுத்த முடியாத நிலைமையினால் ஏற்பட்ட மோதலின் இறுதி விளைவு 24 பேரின் சாவு.



***28-10-2000 லங்காதீப***

✔ இச்சம்பவத்தின் பின்னணியில் புலிகள் அமைப்பும், தென்னிலங்கையைச் சேர்ந்த ஒரு சக்தியும் செயற்பட்டுள்ளமைக்கான வாய்ப்பு பற்றி தொடர்பூடக அமைச்சர் விளக்கம்.

✔ வெளியாட்களை குழப்பியதனாலேயே சம்பவம் இடம்பெற்றுள்ளதென ஜனாதிபதி செயலகம் அறிவிப்பு.

✔ அவர்கள் புனர்வாழ்வுக்குட்படும் புலிச் சந்தேக நபர்களாவர்.

✔ தம்மை விடுவிக்குமாறு கற்கள், பொல்லுகள் கொண்டு அவர்கள் பாதுகாப்பு அதிகாரிகளைத் தாக்கத் தொடங்கினர்.

✔ சந்தேக நபர்கள் முகாம் பொறுப்பாளரைப் பணயம் வைத்துள்ளனர்.

✔ நாட்டின் கௌவரத்திற்கும் பெரும்பான்மை சிங்கள இனத்திற்கும் அகௌரவத்தை ஏற்படுத்த பயங்கரவாதிகள் இந்தச் சம்பவத்தைப் பயன்படுத்தியிருக்கலாம்.

✔ நாட்டிற்கு அவமானத்தை ஏற்படுத்தவும், இனத்திற்கு அகௌரவத்தை ஏற்படுத்தவும் இந்தச் சம்பவத்தின் மூலம் இடமளிக்கக் கூடாது.

✔ அரச பிரச்சார ஊடகங்கள் அசமந்தப் போக்கைக் கடைப்பிடித்தால் புலிகள் இந்தச் சம்பவத்தை நன்று பயன்படுத்தி தவறான விளக்கத்தைக் கொடுத்து திரிபான செய்திகளை வெளிநாடுகளுக்கு வழங்க முயற்சிக்கும். இதைப் பற்றி கவனமாக இருப்பது நன்று.

***28-10-2000 தினமின***

✔ எமது நாட்டில் பெரும்பான்மையானோர் சிங்களவர்கள். அதேபோன்று அவர்கள் பௌத்தர்கள். இவ்விரண்டு விடயங்களும் இணைந்திருப்பது மிகவும் பலமானதாகும். வாகன விபத்தில் சிக்கி இறந்து கிடக்கும் நாயையோ அல்லது பூனைகளையோ பார்த்தவுடன் ஐயோ கடவுளே எனக் கூறுவது இந்த சிங்கள பௌத்தத் தன்மையின் காரணமாகவே.

✔ இனப்பிரச்சினையை நோக்காகக் கொண்ட புலிப் பயங்கரவாதிகள் ஈழ நாட்டைப் பற்றிய பகற்கனவை கண்டு கொண்டு பாவமான மோசமான காரியங்களில் ஈடுபடுகின்றார்கள். அவர்களுக்கு எதிராக யுத்தம் செய்ய வேண்டியிருப்பதும் அதனாலேயே ஆகும்.

✔ புலிகள் ஈழக் கனவை கைவிட்டு விட்டு அரசியல் தீர்வை ஏற்றுக் கொள்ளாவிட்டால் அவர்களை போரின் மூலம் அழிப்பது தவறானதல்ல.

மேற்கூறிய பத்திரிகைகளின் ஆசிரியர் தலையங்கங்கள் வெவ்வேறு கோணத்தில் தமது கருத்துக்களைத் தெரிவித்திருந்தாலும் பொதுவாக இங்கு ஒரே விடயம் தான் -அதாவது யுத்தத்திற்கு சாதகமான போக்கும், இச்சம்பவத்தின் நியாயத்தன்மையை வலியுறுத்தும் போக்கும்- புலப்படுத்தப்படுகின்றது.

### படுகொலைக்கான காரணம்

பிந்துனுவெவ சம்பவத்திற்கு பிரதான காரணமாக பத்திரிகை ஆசிரியர்கள் தடுப்பு முகாமில் இருந்த இளைஞர்களின் ஆர்ப்பாட்டத்தையே சுட்டிக் காட்டியுள்ளனர். இவ் ஆர்ப்பாட்டத்தின் பின்னணியில் புலிகள் உள்ளனர். இதன் கருத்து யாதெனில் தேவையற்ற திடீர் ஆர்ப்பாட்டத்தின் காரணமாக அவர்கள் படுகொலைக்குள்ளாகினர் என்பதாகும். அதாவது இது தாமே தேடிப் பெற்றுக் கொண்டதொரு வினையாகும்.

குறிப்பாக ஒவ்வொரு சிங்களப் பத்திரிகையும், படுகொலைக்கான காரணங்களை பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது.

**1. லக்பிம — புலிச் சந்தேக நபர்கள் ஆர்ப்பாட்டம் செய்ய காரணமாக இருந்தனர்.**

**2. லக்பிம — புலிச் சந்தேக நபர்கள் தவறான வழியில் சென்றவர்கள்.**

**3. லக்பிம — தவறான வழியில் சென்றவர்களுக்கு சுதந்திரமாக இருப்பதற்கான வாய்ப்புகளை அளிக்கக் கூடாது.**

⇨19

நன்றி - நூலகத்திட்டம்



# சுயநிர்ணய உரிமை கோரிப் பொங்கு தமிழ்–2

# மேலும் சில குறிப்புக்கள்....

– சிசைரோ

ஆக, நாம் என்ற அடையாளம் நிலையா னது அல்ல என்பதும் சந்தர்ப்பத்துக்கு ஏற்ப மாறுபடும் தன்மையது என்பதும் சமூக வியலாளர் கருத்தாகும். இந்த அடையாளத்தை ஏன் கொள்கின்றோம் என்றால் அது முற்றிலும் சுயநலத்தின்பாற் பட்டதே என்பதிலும் தப்பில்லை. ஏனெனில் மனிதர்கள் ஒரு வகை யில் அரசியல் விலங்கு என்பதால் அவர்களது சுயநலம் அசியல் சம்பந்தப்படாததாக இருக்க முடியாது என்பதும் பெறப்படும். ஆனால் அடையாளம் கற்பனையானது என்னும் போது கற்பனையின் அடிப்படையில் சுயலாபத்தை எடைபோடுகின்ற னரா என்ற வினா எழக்கூடும். எது கற்பனை? ஏது நிஜம் என்பது கூட விவாதத்துக்குரியது தானே! ஆனால் மேற்கு நாட்டு அரசியலாளர்களும் முதலாளித்துவ அரசியலில் ஊறியவர்களும் இனத்துவ,மொழி, மத, கலாசார அடிப்படை யிலான அடையாளங்கள் நிஜமானவை என்ற நம்பிக்கையிலிருக்க, மார்க்ஸிஸ்டுகள அப்படியல்ல, பொருளாதார அடிப்படையில் வர்க்கஞ் சார்ந்த அடையாளந் தவிர ஏனையவை யாவும் பொய்யானவை அல்லது கற்பனையானவை என்று வாதிடுகின்றனர்.

இன, மத, மொழி, கலாசார, பிரதேச ரீதியில் கூட இந்த அடையாளங்கள் வரித்துக் கொள்ளப்படுகின்றன. அவ்வப்போது ஏற்படும் அச்சுறுத்தல்களுக்கமையவே இவை வரித்துக் கொள்ளப்படுவதாகவும் கொள்ள லாம். அச்சுறுத்தல் நிஜமானதா என்பதை வைத்தே அடையாளமும் நிஜமானதா அல்லது கற்பனையானதா என்பதை எடை போடலாம். இதற்கு வரலாற்றுப் பின்புலம் மிக அவசியமா கின்றது. அடக்குமுறைச் சம்பவங்களின் பின்னணி கவனமாக ஆராயப்பட வேண்டியதா கின்றது. போராட்டத்தை முன்னெடுப்போர் யார்? அதனை ஆதரிப்போர் யார்? ஆதரித்தி ருக்க வேண்டியவர்கள் ஆதரிக்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்பதெல்லாம் வரலாற்றுக் கண்ணோக்கில் ஆராயப்பட வேண்டும். ஆக, அடையாளம் என்பது முதலில் வலுப்பெறாமல் சுயநிர்ணய உரிமைப் பிரயோகத்துக்கான விருப்பு வெளிப் படுத் தப்பட முடியாததாகின்றது. ஆரம்பத்தில் நான் குறிப்பிட்ட பிரெஞ்சு அறிஞரின் கருத்தும் இதே விருப்பையே சுட்டி நிற்கின்றதெனலாம்.

### லெனினும் வூட்ரோ வில்சனும்

உண்மையில் லெனின் கொண்டிருந் தளவுக்கு வரலாற்றின் முக்கியத்துவத்தை வேறெந்த சிந்தனையாளர்களும் ஆய்வா ளர்களும் கொண்டிருக்கவில்லை எனலாம். ஆனாலும் அதற்கு முன்பாகவே ஸ்டாலின் சுயநிர்ணய உரிமை பற்றி எழுதியுள்ளார் என்பதையும் குறிப்பிட்டேயாக வேண்டும். அச்சம் என்பதும் விருப்பு என்பதும் உளவியல் சார்ந்தது. அது பற்றிய விவரிப்பைச் செய்யவோ தகவு பற்றிக் குறிப்பிடவோ அந்தச் சூழ்நிலையிலுள்ள மக்களைத் தவிர புறத்தேயுள்ளவர்களால் முடியாது என்பது விளங்கிக் கொள்ளப்படக்கூடியதே. ஆகவே யாரால் இந்த உரிமைக் கோரிக்கை முன்வைக்கப்படலாம் என்பதில் கருத்தியல் வேறுபாடு நிலவியது என்பது உண்மையே யாகும்.

> **இறைமை மிக்க ஒரு நாட்டிலிருந்து இந்த உரிமைப் பிரயோகத்தின் மூலம் பிரிந்து போக முடியாது என்று இந்தியா போன்ற நாடுகள் உலக அரங்கினில் பலமாக வலியுறுத்தி வருகின்றன. ஆனால் லெனின் ஐரோப்பாவுக்குள்ளோ அல்லது துாரத்திலுள்ள நாடுகளிலோ என்று கூறியிருப்பதன் மூலம் குடியேற்றத்துக்கு உட்பட்ட நாடுகளுக்கு மட்டுமன்றி இறைமையுள்ள நாடுகளுக்கும் இது பொருந்தும் என்றே கூறுகின்றார்.**

இந்தக் கருத்துவேறுபாடு 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சர்வதேச அரசியலில் பலமான தாக்கத்தைக் கொண்டி ருந்தது. 1917 இல் சோவியத்தில் புரட்சி வெற்றி பெற்று சோசலிஸ அரசாங்கம் அமைந்த கையுடன் லெனின் உலகின் மற்றைய பாகங்களிலும் அதேவிதமான ஆட்சியை எப்படிக் கொண்டு வரலாம் என்பதில் அக்கறை காட்டினார். மேற்குலகு இதனை எப்படித் தடுத்து நிறுத்தலாம் என்பதிலும் சோவியத்தைச் சீர்குலைப்பதற்கான வழிவகைகளிலும் கவனத்தைச் செலுத்தியது. இந்தப் போட்டியின் போது சுயநிர்ணய உரிமை பற்றிய கருத்து மோதல்களும் நிறையவே பங்களிப்புச் செய்திருந்தன.

சுயநிர்ணய உரிமை பற்றி 1913 இல் ஸ்டாலின் மிக விரிவான பிரசுரம் ஒன்றைத் தயாரித்திருந்தார். ஆனால் இந்தப் பிரசுரத்தைச் சோசலிஸ எழுத்தாளர்கள் பலரும் நீண்ட காலம் இருட்டடிப்புச் செய்திருந்தமை அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. தேசம் என்பதுக்கு ஒரேயொரு தனித்த இயல்பு என்று எதனையும் வரைவிலக்கணமாகக் கூறி விட முடியாது. ஆனால் வேறு சில தனித்தன்மைகளின் ஒட்டுமொத்தமான கூட்டாக இயல்பொன்றைக் கூறி அதனுடன் ஏனைய தேசங்களின் சிறப்பம்சங்கள் எங்ஙனம் வேறுபடுகின்றன என்பதைக் காட்டுவதன் மூலம் தேசத்தின் தனித்தன்மை வெளிப்படுத் தப்படும். இந்தக் கூட்டில் உள்ளடங்கும் சிறப்பம்சங்கள் பற்றியே ஸ்டாலின் குறிப் பிட்டிருந்தார். தேசியம், மொழி, ஆள்புலம் அல்லது பொருளாதார நிலைமைகள் என்பவற்றை அவர் குறிப்பிடுகையில் பொருளாதாரம் என்பதைத் தனியான ஒன்றாகக் குறிப்பிடாமல் ஆள்புலம் அல்லது பொருளாதாரம் என்று குறிப்பிடுவதன் மூலம் ஒரே ஆள்புலத்துக்குள் இருக்கும் தேசம் என்றால் பொருளாதாரம் முக்கியத்துவம் என்பதை மறைமுகமாகக் குறிப்பிடுகின்றார் எனலாம்.

ஸ்டாலின் கூறியிருப்பதைப் பார்ப்போம்:

"A nation has the right to arrange its life on autonomous line. It even has the right to secede. But this doesn't mean that it should do so under all circumstances, that autonomy, or separation, will everywhere and always be advantageous for a nation, i.e., for the majority of its population, i.e., foe the toiling strata - - -.

But what solution would be most compatible with the interest s of the toiling masses?

Autonomy, federation or separation?

All these are problems the solution to which will depend on the concrete historical conditions in which the given nation finds itself.

Nay, more. Conditions, like everything else, change, and a decision which is correct at one particular time may prove to be entirely unsuitable at another.

"தேசமொன்று தனது வாழ்வினை சுயாட்சி வழிகளில் அமைத்துக் கொள்வதற்கான உரிமையைக் கொண்டுள்ளது. பிரிந்து போவதற்கான உரிமைகூட அதற்கு உள்ளது. ஆனாலும் சுயாட்சி அல்லது பிரிவினை என்பது எல்லாவிடங்களிலும் எப்போதுமே தேசமொன் றின் மக்கள் கூட்டத்தில் பெரும்பான்மையான வர்களுக்கு அதாவது உழைக்கும் மக்களுக்கு நன்மை பயப்பது என்பதால் எல்லாச் சந்தர்ப்பங்களிலுமே அது அங்ஙனம் செய்ய வேண்டுமென்பதுமில்லை.

ஆனால் உழைக்கும் மக்களுடைய நலன்களுடன் முற்றிலும் ஒத்துப் போகக் கூடியதான தீர்வாக எது இருக்கும்?

*சுயாட்சி, கூட்டாட்சி, அல்லது பிரிவினை?*

இவை யாவுமே, குறிப்பிட்ட அத்தேசமானது தான் இருக்கின்றதான அந்த திட்டவட்டமான வரலாற்றுச் சூழ்நிலைகளில் தங்கியிருப்பதான தீர்வினைத் தேவைப்படுத்தி நிற்கும் பிரச்சினைகளாகும்.

அத்துடன் நிறுத்தி விடவும் முடியாது. சூழ்நிலைகள் என்பன, ஏனைய ஒவ்வொன் றையும் போலவே, மாறுகின்றன என்பதுடன் குறிப்பிட்ட ஒரு சந்தர்ப்பத்தில் சரியாக இருக்கும் ஒரு முடிவானது இன்னொரு சந்தர்ப்பத்தில் முற்றிலுமே பொருத்தமற்றதா கியும் விடலாம்."

பின்னதாக லெனின் 1915-16க்கு இடைப்பட்ட காலத்தில் ஏகாதிபத்தியம் பற்றி எழுதுகையிலேயே சுயநிர்ணய உரிமை பற்றியும் கவனஞ் செலுத்தத் தொடங்கினார். இது தொடர்பில் அவர் 1916 மார்ச்சில் வெளி யிட்ட பிரசுரங்கள் பின்னர் தொகுக்கப்பட்டன. இதில் முக்கியமானது 1917 ஒக்டோபரில் வெளியிடப்பட்ட Decree on Peace என்பதாகும். இதில் அவர் கூறியவற்றைப் பின்னால் பார்ப்போம்.

எப்படிப் பார்ப்பினும் ஆட்சி மாற்றத்தை வேண்டி நின்றவர்கள் யாவருமே ஏதோவொரு விதத்தில் சுயநிர்ணய உரிமை என்ற விடயத்தைத் துணைக்கழைக்க வேண்டியிருந்தது. இந்த வகையில் தான் லெனினும் அமெரிக்க ஜனாதிபதி வூட்ரோ வில்சனும் சுயநிர்ணய உரிமை பற்றிக் கருத்துத் தெரிவித்திருந்தனர். இருவருமே இது பற்றி மிக விரிவாகக் கூறியிருப்பினும் தேவைப்படு வனவற்றைச் சுருக்கமாகத் தருவதற்கு முயற்சிக்கின்றேன். முதலில் லெனின் பலாத்கார இணைப்புப் பற்றி எழுதியுள்ள வற்றைப் பார்ப்போம்:

" - - - any incorporation of a small or weak **nation** into a large or powerful **State** without the precisely, clearly and voluntarily expressed consent and wish of that nation, irrespective of the time when such forcible incorporation took place, irre-



spective also of the degree of development or backwardness of the nation forcibly annexed to the given State, or forcibly retained within its **borders**, and irrespective, finally, of whether this nation is in **Europe** or in **distant overseas countries**."

[V.I. Lenin, Selected Works, (1977), Vol. II, p.475

அதாவது, ---- "சிறிய அல்லது பலவீனமான <u>தேசமொன்று</u> அதனது திட்டவட்டமானதும் தெளிவானதும் தன்விருப்பிலானதுமாக வெளிப்படுத்தப்பட்ட சம்மதத்துடனும் அத்தேசத்தின் விருப்புடனும், அல்லாமல் பெரியதும் சக்திமிக்கதுமான <u>அரசொன்றுடன்</u> ஒன்றிணைத்தல். இது அத்தகைய பலாத்கார ஒன்றிணைப்பு எக்காலப் பகுதியில் நடைபெற்றது, அங்ஙனம் பலாத்காரமாக மேற்கூறப்பட்ட அரசுடன் ஒன்றிணைக்கப்பட்ட அல்லது பலாத்காரமாக அதன் <u>எல்லைகளுக்குள்</u> வலிந்து வைக்கப்பட்டிருக்கும் அத்தேசத்தின் வளர்ச்சியடைந்த தன்மை அல்லது பின்தங்கிய தன்மையின் அளவு எந்தளவு, அத்தடன் இறுதியாக அத்தேசமானது <u>ஐரோப்பாவுக்குள் உள்ளதா</u> அல்லது <u>துாரத்தேயுள்ள வேறுநாடுகளில்</u> உள்ளதா என்பது முக்கிய மானதல்ல" --- என்று இதனைத் தமிழ்ப் படுத்தலாம்.

மேலே ஆங்கிலத்திலும் தமிழிலும் அடிக்கோடிடப்பட்ட சொற்களைக் கவனிக்க வும். லெனின் கையாண்டிருக்கும் பதங்கள் மிகக் கவனமாகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. தேசம், அரசு, எல்லைகள், ஐரோப்பா, வேறு நாடுகள் என்ற பதங்கள் எமக்கு இங்கு மிகவும் உபயோகமாகின்றன. இச்சொற்கள் மிகவும் பொருள் பொதிந்த அரசியற் பிரயோகங்களாக உள்ளன என்பதையும் அவதானிக்க வேண்டும்.

தேசம் என்பதும் அரசும் என்பதும் வேறு வேறு என்பதை நாமறிவோம். அரசுக்குள் தேசங்கள் பலாத்காரமாக ஒன்றிணைக்கப்படும் சந்தர்ப்பங்களைக் குறிப்பிடும் அவர் இந்த உள்ளடக்கல் குறிப்பிட்ட தேசத்தின் சொந்த விருப்பிலமையாத போதிலெல்லாம் அங்கே சுயநிர்ணய உரிமைப் பிரயோகத்துக்கு இடமிருப்பதைச் சுட்டிக் காட்டுகின்றார். சொந்த விருப்பு என்பதுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட தகவுகளைத் தந்து இதில் ஏற்படக்கூடிய எத்தகைய தெளிவின்மைகள் எதனையும் அவர் நீக்கி விடுகின்றார். அங்ஙனமே எல்லைகள், ஐரோப்பா, துாரத்து நாடுகள் என்று பேசுவதன் மூலமும் உலகளாவிய தனது அரசியல் நிலைப்பாட்டை லெனின் பகிரங்கப்படுத்தி நிற்பதையும் காணலாம்.

இங்கே மூன்று விடயங்கள் எமது உடனடிக் கவனத்துக்குரியவை. அவையாவன: பலாத்காரத்தின் மூலம் ஒன்றிணைக்கப்பட்ட தேசத்தின் விடுதலை பெறுவதற்கான சுயநிர்ணய உரிமைப் பிரயோகம் அது விடுதலை பெறும் வரை தொடர்ந்து பாவிக்கப் படக் கூடியதாக இருக்கும் எனபதும் அத் தேசத்தின் பொருளாதார வளர்ச்சி நிலைமை கவனிக்கப்படத் தேவையில்லை என்பதும் அத்தகைய தேசமென்பது இறைமையுள்ள ஐரோப்பிய நாடொன்றுக்குள் கூட இருக்கலாம் என்பதுமாகும். இவை ஒவ்வொன்றுக்கும் விசேட தாற்பரியங்கள் உள்ளன.

தேசம் என்பதை வரையறுக்கும் போது மார்க்ஸிஸ்டுகள் அது பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்த அல்லது சுதந்திரமானதாக முதிர்ச்சியடைந்ததாக இருக்க வேண்டும் என்று வாதிடுவதுண்டு. ஆனால் மேலுள்ள மேற்கோளில் லெனின் அது பற்றி மறுதலையாகக் கூறியிருப்பதனை அவதானிக்கலாம். அங்ஙனமே, ஒருமுறை விடுதலை பெற்ற நாட்டுக்குள் மறுமுறை சுயநிர்ணய உரிமையைப் பிரயோகஞ் செய்ய முடியாது என்று வளர்முக நாடுகளில் வாதிடப்படுவதுண்டு. லெனின் அதற்கும் மாறாக, அத்தகைய இணைப்புத் தொடரும் வரை உரிமையும் தொடரும் என்கின்றார். மேலும், இறைமைமிக்க ஒரு நாட்டிலிருந்து இந்த உரிமைப் பிரயோகத்தின் மூலம் பிரிந்து போக முடியாது என்று இந்தியா போன்ற நாடுகள் உலக அரங்கினில் பலமாக வலியுறுத்தி வருகின்றன. ஆனால் லெனின் ஐரோப்பாவுக் குள்ளோ அல்லது துாரத்திலுள்ள நாடுகளிலோ என்று கூறியிருப்பதன் மூலம் குடியேற்றத்துக்கு உட்பட்ட நாடுகளுக்கு மட்டுமன்றி இறைமையுள்ள நாடுகளுக்கும் இதுபொருந்தும் என்றே கூறுகின்றார். ஏனெனில் அவர் அங்ஙனம் கூறும்போது ஐரோப்பாவுக்குள் எத்தகைய குடியேற்ற நாடும் இருந்திருக்க வில்லை என்பதைக் குறிப்பிட்டேயாக வேண்டும்.

எனவே அடக்கப்பட்ட, ஆக்கிரமிக்கப்பட்ட தேசங்களின் சுயநிர்ணய உரிமை பற்றியே லெனின் பேசியிருப்பதைக் காணமுடிகின்றது. வேண்டுமானால் இங்கே இன்னொரு மட்டுப்பாட்டை நாங்கள் சேர்த்துக் கொள்ளலாம். "சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் ஒன்று நடைபெற்றால் அதில் அந்தத் தேசத்தின் பாட்டாளி வர்க்கத்தின் நிலைப்பாடு என்ன என்பதைத் தெரிந்து கொண்டு அவர்களும் அப் போராட்டத்தைத் தீவிரமாக ஆதரிப்பார்களாயின் அதற்கு ஆதரவளிக்கும் கடப்பாடு சர்வதேச ரீதியில் உழைக்கும் வர்க்கத்தினருக்கு உண்டு" என்கிறார் லெனின்.

(தொடரும்)

நன்றி - நூலகத்திட்டம்



# முஸ்லிம் மக்களின் வரலாற்றுத் துயரங்கள் முஸ்லிம் காங்கிரசால் துடைக்கப்படுமோ?

– தாமிர வருணி

இலங்கையின் அரசியற் சுதந்திரம் அந்நாட்டு மக்கள் எல்லோரும் கை கோர்த்துப் போராடிப் பெற்றுக் கொண்டதொன்றல்ல. இந்திய சுதந்திரப் போராட்டத்தின் வெற்றியின் விளைவாக இலங்கையும், பிரித்தானிய ஏகாதிபத்திய அடிமைத் தலையிலிருந்து விடுதலைபெற முடிந்தது. ஆனால், அவ் விடுதலையை இந்நாட்டு மக்கள் சமமாகப் பகிர்ந்துகொள்ள முடியாமற் போனதன் விபரீத விளைவை, இன்று இந்நாட்டுக்காக இந்நாட்டின் மக்களுக்காக தேசிய ரீதியாக குரல்கொடுக்க ஆளின்றி, வெளிநாட்டு சக்தி ஒன்றின் மூலமே உள்நாட்டில் ஒற்றுமையை ஏற்படுத்தலாம் என்னுமளவிற்கு மக்களிடையே பாரிய இடைவெளி ஏற்பட்டிருக்கிறது.

இலங்கை அரசு சிங்கள மக்களையும், தமிழ் கட்சிகளும் போராட்டக் குழுக்களும் தமிழ் மக்களையும் பிரதிநிதிப்படுத்த, முஸ்லிம்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சக்தியாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் காணப்படுகிறது. ஆனால், மு.காவின் அரசியல் பிரவேசம் பாரம்பரிய தென் இலங்கைத் தலைமைத்துவத்தின் பாரிய சவால்களை எதிர்நோக்குவதை இறுதி வரைக்கும் நிகழ்ந்த அஷ்ரஃப் - பௌசி மோதலிலிருந்து தெளிவாக அவதானிக்க முடிகிறது.

இம்மோதல் இன்று முஸ்லிம் காங்கிரசினுள்ளேயே உக்கிரமமாய் நிகழ்ந்து கொண்டிருப்பதால், அப் போராட்டத்தின் உண்மைத் தன்மையை விளங்கிக் கொள்வதற்காக அதன் வரலாற்றுப் பின்னணியை ஆராய்வது அவசியப்படுகிறது.

இலங்கை அரசியலில் முதலாளித்துவம் சார் மேட்டுக் குடியினரே ஆதிக்கம் செலுத்தும் பண்பு காணப்பட்டது. தமது சொந்த மத, மொழி, கலாசார பாரம் பரியங்களைக் கருத்திற் கொள்ளாத செல்வந்த வர்க்கத்தினர், ஆங்கில மொழி மூலம் மிஷனரிப் பாடசாலைகளிலும், மேலை நாடுகளிலும் கல்விகற்கலாயினர்.

ஆங்கில மொழியாலும், அதன் கலாசாரத்தாலும் கவரப்பட்ட இவர்கள் ஆங்கிலேயரின் நெருக்கமான நண்பர்களாயினர். இவர்கள் காலப்போக்கில் உயர் அந்தஸ்த்துகளும் பதவிகளும் பெற்று இலங்கை அரசியலில் செல்வாக்குச் செலுத்துபவர்களாய் மாறினர்.

டி.எஸ்.சேனாநாயக்க, டட்லி சேனநாயக்கா, வில்லியம் கோபல்லாவ, எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கா, ஜே.ஆர். ஜயவர்த்தனா, பொன்னம்பலம் இராமநாதன், ஜி.ஜி.பொன்னம்பலம், எஸ்.ஜே.வி.செல்வநாயகம், மாக்கான், மாக்கார், ராசீக் பரீத், எம்.எஸ்.காரியப்பர் போன்றோர் இதற்கு நல்ல உதாரணங்கள்.

இந்த வகையில் சிறந்து விளங்கிய செல்வந்த குடும்பங்களைச் சேர்ந்த தென்பகுதி முஸ்லிம்கள் ஆங்கில மொழி கல்வி கற்று ஆங்கிலேயருடன் அந்நியோன்ய உறவை ஏற்படுத்திக் கொள்ள முடிந்தது. ஆங்கிலேயரிடமிருந்து மாக்கான் மாக்கார், ராசீக் பரீத் போன்றோர் கௌரவ 'சேர்' பட்டம் பெற்றுக்கொள்ளும் அளவிற்கு நெருக்கமான உறவு காணப்பட்டது.

இக்காலப் பகுதியில் கிழக்கைச் சேர்ந்த முஸ்லிம்கள் புவியியல் ரீதியாக தலைநகரை விட்டும், தூரமாகவும், விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கிராமப்புற வாழ்க்கை அமைப்புடையவர்களாகக் காணப்பட்டனர்.

புவியியல், மொழி, கலாசாரக் காரணிகளால் தமிழர்களுடன் மிக நெருக்கமாக வாழ்ந்த கிழக்கு முஸ்லிம்கள், சிங்கள மொழி ஆற்றல் இல்லாததனால் சிங்கள மக்களுடனும் அதன் கலாசார நாகரீகங்களிலும், மிகக்குறைந்த தொடர்பையே கொண்டிருந்தனர். மேலும் கல்வி ரீதியாக மிகப் பின்தங்கிய நிலையிலேயே காணப்பட்டனர். இதனால் அவர்களுடைய தேசிய ரீதியான தொடர்பு மட்டுபடுத்தப்பட்டதாகவே இருந்தது.

எனவே கல்வி, கலாசார பொருளாதார, சமூகவியல் ரீதியாக கிழக்கு மக்களைவிட, தென் பகுதியினர் உயர்ந்து காணப்பட்டனர். மேலும் சிங்கள மக்களுடனும், அரச தலைவர்களுடனும், நெருக்கமான உறவைக் கொண்டிருந்த தென்பகுதி அரசியல்வாதிகள் அரசியல் உயர் பதவிகளை இலகுவாகப் பெற முடிந்தது. எனவே அரசில் முக்கிய அமைச்சுப் பொறுப்பைப் பெற்ற தென்பகுதி அரசியல்வாதிகள் முஸ்லிம்களின் தலைவர்களாகக் கருதப்பட்டனர். டி.பி.ஜயா, ராசீக் பரீத், எம்.சி.எம்.கலீல், பதியுதீன், மஹ்முத், ஏ.சி.எஸ்.ஹமீத், எம்.எச்.மொஹமட் போன்றவர்கள் இவ்வகையிலேயே முஸ்லிம்களின் தலைவர்களாய் கருதப்படுகின்றனர்.

இவர்களுடன் கிழக்கைச் சேர்ந்தவர்கள் அமைச்சுப் பொறுப்புக்களைப் பெற்றபோதிலும் கூட, தென்பகுதி அங்கத்தவர்கள் அரசின் தலைமைக்கு மிக நெருக்கமாகவும், கிழக்குப் பிரதிநிதிகள் கட்சிக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டிருந்தாலும் தென்பகுதி தலைமைகளை அனுசரித்தே செல்ல வேண்டியிருந்தது. இதனால் தென்பகுதித் தலைமைத்துவம் முஸ்லிம்களின் தேசிய அங்கீகாரம் பெற்ற தலைமைத்துவமாகக் காணப்பட்டது.



அத்தோடு முஸ்லிம் சமூக, கலாசார, மத, தேசிய அமைப்புக்களின் தலைமைத்துவங்கள் கூட தென்பகுதி சார்ந்தாகவே காணப்பட்டது. அகில இலங்கை முஸ்லிம் லீக், சோனக இஸ்லாமிய கலாசார நிலையம் (MICH), முஸ்லிம் இளைஞர் சங்கம் (YMMA), அகில இலங்கை முஸ்லிம் மாநாடு (All Ceylon Muslim Assembly), அகில இலங்கை மார்க்க அறிஞர்கள் சபை (Jammiethul Ulama) போன்றவைகள் பெரும்பாலும் தென் தலைமைத்துவத்தைக் கொண்டதாகவே காணப்பட்டது.

சிங்கள மக்களிடையேயும், தமிழ் மக்களிடையேயும், சாதி வேறுபாடு காணப்படுவதைப் போல் முஸ்லிம்களிடையே சாதியமைப்பு வேறுபாடு காணப்படவில்லை. ஆனால், பிரதேச ரீதியாக கிழக்கு மக்களுக்கும் ஏனைய பிரதேசத்தவர்களிடையேயும், அகரீதியான மானசீக இடைவெளி காணப்படுவதை தெளிவாகக் காணலாம்.

தென்பகுதி மக்கள் தமது சொந்த ஊரை அல்லது மாவட்டத்தைக் கொண்டு அடையாளப்படுத்தப்பட அம்பாறை, திருமலை, மட்டக்களப்பு ஆகிய மூன்று மாவட்டங்களைச் சார்ந்த சுமார் மூன்றரை இலட்சம் மக்கள் ஈஸ்ரன் என்றே அடையாளப்படுத்தப்படுகின்றனர். சில போது மட்டக்களப்பு என்று கூட அடையாளப்படுத்தப்படுகின்றனர்.

இவ்வகையானதொரு இடைவெளியுடன் இலங்கை முஸ்லிம்கள் பரவலாக தமிழ் மொழியை தாய்மொழியாகக் கொண்ட போதிலுங்கூட, தென்னிலங்கை மக்களில் ஒரு சாரார் இடையே சிங்கள மொழிசார்புப் போக்கைக் காணலாம்.

இது வடகிழக்கு முஸ்லிம்களை தென் இலங்கை முஸ்லிம்களை விட்டும் இன்னும் தூரப்படுத்தும். அத்தோடு மொழி ரீதியாக ஒன்றிணைந்து காணப்படும் தமிழ், முஸ்லிம் சிறுபான்மை உறவை பாதிக்கும். இதனை தென் தலைமைத்துவம் உணரத்தவறியதன் காரணமாக தமிழ், முஸ்லிம் உறவு விரிசலுற்று பெருபான்மையினத்தின் சிறுபான்மையினங்களின் மீதான ஒடுக்கு முறைக்கெதிரான போராட்டத்தை பலவீனப் படுத்தியதைக் காணலாம்.

சிறுபான்மையினங்களின் அதிகாரத்தையும், ஆதிக்கத்தையும் குறைப்பதற்காக சிங்கள அரசின் திட்டமிட்ட குடியேற்றங்களையும் மொழி உரிமையையும் நியாயமான தொழில் உரிமையையும் மேலும் பல்வேறு வகையான சிறுபான்மையினரின் உரிமை மறுப்புக்களையும் தென் பகுதித் தலைமைத்துவம் கண்டுகொள்ளவில்லை.

தமது சொந்த இனத்தின் மீது 1974இல் மஹியங்கனையில் பெரும்பான்மை இனத்தின் மூர்க்கத்தனமாக தாக்குதலை 1976 இல் புத்தளப் பள்ளிவாசலினுள் முஸ்லிம்கள், காவல் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட, அதற்கெதிராக குரல் எழுப்ப முடியாதவர்களாகக் காணப்பட்டனர்.

அதேவேளை முஸ்லிம் தலைமைத்துவமும் பிரதிநிதித்துவங்களும், தமிழர்களால் தொப்பி புரட்டிகளாகவும் கட்சி மாறுபவர்களாகவும் துரோகிகளாகவும் விமர்சிக்கப்பட்டனர்.

சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்று அரசின் மந்திரிப் பதவிகளைப் பெற்றுக் காணப்பட்ட முஸ்லிம் தலைமைத்துவம் மேலும் கட்சிக் கட்டுப்பாட்டினால் தொடர்ந்து சிங்கள நலன்சார் நடவடிக்கைகளை ஆதரிப்பதாகவே காணப்பட்டது.

இதனால், சிங்கள அரசின் தமிழினத்துக்கெதிரான அடக்கு முறைகளையோ வடகிழ முஸ்லிம்களுக்கெதிரான நடவடிக்கைகளையோ கண்டிக்கும் சக்தியற்றதாகவும் காணப்பட்டது.

83ஜூலை இனக்கலவரத்தில் நாடளாவிய ரீதியில் சிறுபான்மையினருக்கு இழைக்கப்பட்ட அநியாயங்களுக்கெதிராக அவர்களால் வாய்திறக்க முடியவில்லை. அதனைத் தொடர்ந்து முஸ்லிம்களின் வரலாற்றுப் பரம்பரை எதிரிகளான சியோனிச இஸ்ரேலின் வருகையையும் தட்டிக் கேட்கும் திராணியற்றவர்களாக பெட்டிப்பாம்பாகவே தென்தலைமைத்துவம் காணப்பட்டது.

1987 இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் முஸ்லிம்கள் பற்றிய எவ்வித குறிப்பும் இருக்கவில்லை. அத்தோடு கிழக்கில் 33 வீதமாகவிருந்த முஸ்லிம்கள் வடகிழக்கு இணைப்பால் 18 வீத சிறுபான்மையினராக மாற்றப்பட்டனர்.

இவ்வாறு, தொடர்ந்து சிங்கள மக்கள் சார்பாகவும், அரசு சார்பாகவும் நடந்து கொண்ட தென்தலைமைத்துவம் வடகிழக்கு முஸ்லிம்களின் உணர்வுகளையும் பிரச்சினைகளையும் அபிலாசைகளையும் உணரத் தவறினர். அவர்கள் அரசினதும், தமிழர்களினதும் போராட்டத்துக்கிடையில் அநாதைகளாக மாறினர்.

வடகிழக்கு முஸ்லிம்கள் அரசையோ சிங்கள மக்களையோ பாதிக்காத வகையில், செயற்பட வேண்டும். அவ்வாறு செயற்படும் போது அவை தென் முஸ்லிம்களை பாதிக்கும் என எச்சரித்த அவர்கள் வடகிழக்கு தமிழர்களின் உணர்வுகளையும், அபிலாசைகளையும் தமிழர் போராட்டத்தின் நியாயத் தன்மையைக் கருத்தில் கொள்ளாது இராணுவ நடவடிக்கைகளை ஆதரிப்பதும், வடகிழ தமிழர்களோடு சேர்ந்து வாழும் முஸ்லிம்களைப் பாதிக்கும் என்பதில் அக்கறை செலுத்தவில்லை.

இறுதியில் தமிழர் விடுதலைப் போராட்டம் முஸ்லிம்களுக்கு எதிராகவும், தமது துவக்குகளைத் தூக்கியபோது வடகிழக்கு முஸ்லிம்களின் இருப்பும் உயிர்வாழ்தலும் கேள்விக்குள்ளானது.

தமிழ்ப் போராளிகளால் கடத்தப்பட்டு கப்பம் கேட்டு, கொல்லப்பட்டு துன்புறுத்தப்பட்ட முஸ்லிம்கள் தமது இருப்பைப் பற்றி சுயமாக யோசிக்கத் தொடங்கினர். இக்காலப் பகுதியில் வடகிழக்கு முஸ்லிம்களிடையே கணிசமான கல்வி வளர்ச்சி ஏற்பட்டிருந்தது.

இவ்விழிப்புணர்வுக்கு சேர் ராசிக் பரீத், டி.பி.ஜாயா, பதியுதீன் மஹ்முத் எம்.எஸ்.காரியப்பர் போன்றோர் பெரும் பங்களிப்பைச் செய்திருந்தனர். இதன் விளைவாகக் கற்ற இளைஞர்கள் தேசிய ரீதியாக தாம் ஏமாற்றப்படுவதையும் அரசாலும் தமிழ் இயக்கங்களாலும் பகடைக் காய்களாகப் பயன்படுத்தப்படுவதை உணர்ந்தனர்.

தேசிய சிங்களக் கட்சிகளில் நம்பிக்கை இழந்து தமிழ் இயக்கங்களால் ஏமாற்றப்பட்டு தமது இருப்பு கேள்வியாக்கப்பட்டு விரக்தியடைந்த இளைஞர்கள் தாம் அதிகாரத்தைப் பெறும் வழிவகைகளைப் பற்றி யோசித்தனர். அவ்வதிகாரத்தைப் பெறும் வாக்குப்பலம் கிழக்கில் காணப்பட்டது.

இவ்வாறு முஸ்லிம் இளைஞர்கள் தேசிய ரீதியாகவும், குறிப்பாக வடகிழக்கிலும் ஒரு மாற்று வழியைத் தேடிக்கொண்டி-

நன்றி - நூலகத்திட்டம்



ருந்த சந்தர்ப்பத்தில் தான் முஸ்லிம் காங்கிரஸ் தோற்றம் பெறுகிறது.

தமிழ்க்கட்சியின் பாசறையில் வளர்ந்து தமிழ்த் தலைமைகளிடத்தில் கள அனுபவத்தையும் பெற்ற அஷ்ரஃப் என்ற தனி நபருக்கு முஸ்லிம் மக்களிடையே அக்கட்சியை இலகுவாக கட்டமைக்க முடிந்தது. முஸ்லிம் சமூகத்துக்கு அவ்வாறானதொரு தேவை இருந்ததையே தெளிவாக உணர்த்துகிறது.

சிங்களவர்களுக்கு மத்தியில் வாழும் பழுத்த முஸ்லிம் அரசியல்வாதிகளையும், பலத்த எதிர்ப்புக்களையும் மீறி கிழக்கை தலைமைத்துவமாகக் கொண்ட நிறுவனமயப்படாத வடகிழக்குக்கப்பால் தென் இலங்கையில் தான் சந்தித்த முதற் தேர்தலிலேயே 12 மாகாண சபை உறுப்பினர்களைப் பெற்றுக்கொண்டது.

உண்மையில், இந்நிகழ்வு இனவாதமயப்பட்டுப் போன இலங்கையில் முஸ்லிம்கள் தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்தும், தனியானதொரு சக்தியை வேண்டிநின்றதன் வெளிப்பாடே.

எனவே மு.காவின் தோற்றத்தின் பின்னர் தென் இலங்கையைச் சேர்ந்த அரசில் பிரதான அமைச்சைப் பெறும் நபர் முஸ்லிம் தலைமைத்துவமாக வரும் நிலை மாறுகிறது. பாராளுமன்றம் செல்லாத நிலையிலேயே மு.காவின் தலைமைத்துவம் மக்கள் தலைமைத்துவமாக மாறுகிறது. இந்நிகழ்வு இலங்கை முஸ்லிம்களது வரலாற்றில் நிகழும் மாபெரும் திருப்பு முனையாகும், விழிப்புணர்வுமாகும்.

அமைச்சுப் பொறுப்பில்லாத எதிர்க்கட்சிப் பாராளுமன்ற அரசிற்கூட, மு.காவின் தலைமைத்துவம் முஸ்லிம்களின் தலைமைத்துவமாக முஸ்லிம் சமூகத்தின் குரலாக அதனைப் பிரதிநிதிப்படுத்தும் சக்தியாக முஸ்லிம் அல்லாதவர்களாலும் அங்கீகரிக்கப்பட்டது.

எனவே மு.காவின் தோற்றம் அது முஸ்லிம்களிடையே காணப்பட்ட பிரதேச இடைவெளியையும் மீறி அங்கீகரிக்கப்பட்ட நிகழ்வு அவர்களுக்கிருந்த வரலாற்றுத் தேவைகளையும் சூழ்நிலைகளின் அழுத்தங்களையும் பிரதிபலிக்கிறது.

1994 பொதுத் தேர்தலில் மு.க. 7 பாராளுமன்ற உறுப்பினர்களைப் பெற்று ஆட்சியமைக்கும் சக்தியாக மாறியபோது, அது இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் பாரிய திருப்பங்களை ஏற்படுத்தி அதன் சமூகத்துக்கு புதிய அரசியற் பக்கங்களைத் திறந்து காட்டியது.

அவற்றில் சிலதை பின்வருமாறு அடையாளப்படுத்தலாம்.

1. வரையறைகளுடன் கூடிய பாரம்பரிய சம்பிரதாய அமைச்சுக்குப் பதிலாக பலமான புனர்வாழ்வு புனரமைப்பு கப்பல்துறை துறைமுகங்கள் அமைச்சைப் பெற்றமை.
2. இரு பிரதியமைச்சுப் பதவிகள்.
3. குழுக்களின் பிரதித்தலைவர் பதவி.
4. மூன்று தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்கள்.
5. அரச, நிறுவன, திணைக்கள உயர்மட்ட தேசிய பதவிகள்.
6. இராஜதந்திர பதவிகள்
7. அமைச்சு, ஆலோசகர், இணைப்பாளர் பதவிகள்
8. வடகிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகள்
9. ஒலுவில் துறைமுக வேலைத் திட்டம்.
10. தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

இப்பணிகள் சாதாரணமாக அரசியல் ரீதியாக மேற்கொள்ளப்படும் பணிகளாக விருப்பினும், முஸ்லிம் காங்கிரஸ் தனது சமூகத்துக்காக பேரம் பேசி அதிகமான அளவில் துணிச்சலுடன் போராடிப் பெற்றுக் கொண்டதை காணலாம். இதன் மூலம் சிறுபான்மையினர் மத்திய அரசிடமிருந்து பல கோடி மில்லியன்களை பல்வேறு வழிவகைகளில் பெற்றுக்கொள்ள முடிந்தது.

இவ்வகையான உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கு காரணமாய் அமைந்தது வடகிழ முஸ்லிம்களின் வாக்குப்பலம். அதனைத் திரட்டி எடுத்த முஸ்லிம் காங்கிரசும், அதன்



தலைமைத்துவமுமே. ஆனால், துரதிருஷ்டவசமாக மு.காவின் சாதனைகளுக்குப் பின்னாலிருந்த அதன் தலைமை அச்சமூகத்தை விட்டும் மறைந்துவிட்டது.

முஸ்லிம்களும், மு.காவும், முஸ்லிம் சமூகமும் பல சவால்களை எதிர்நோக்கிய இக்கட்டானதொரு தேர்தல் கால கட்டத்தில் அதன் தலைமை மறைந்தது அச்சமூகத்துக்கு பெரும் அபாய அறிவிப்பாகவே இருந்தது.

எந்த மக்கள் சக்தி முஸ்லிம் காங்கிரசை உருவாக்கியதோ அதே மக்கள் சக்தி அக்கட்சியை அழிந்து போக விடாது கடந்த பொதுத்தேர்தலில் அதனைக் காப்பாற்றி இன்னும் முஸ்லிம்களின் குரலாக தக்கவைத்துள்ளது.

ஆனால், இப்பொழுதிருக்கும் கேள்வி அக்கட்சியை வழி நடத்திச் செல்லும் சக்தி எது?

**“ தமிழ் இளைஞர்கள் ஏமாற்றப்பட்டு விரக்தியுற்று தம்மைத்தாமே அழித்து பாரிய இழப்புக்களைச் சந்தித்த சோக வரலாறு, முஸ்லிம் சமூத்திற்கும் ஏற்படுமா? அவ்வாறானதொரு நிலை ஏற்படும் இடத்து அதற்கு காரணமானவர்கள் தண்டிக்கப்படுவதோடு அச்சமூகம் அழிவுறுவதும் தவிர்க்க முடியாததாகிவிடும். ”**

தேசியக் கட்சிகளில் அங்கம் வகித்த தென்னிலங்கை முஸ்லிம் பிரதிநிதித்துவத்துக்கும் மு.காவின் கிழக்குத் தலைமைத்துவத்துக்குமிடையே நீறுபூத்த நெருப்பாய் புகைந்து கொண்டிருந்த தலைமைத்துவப் போட்டி இப்போது மு.காவினுள்ளேயே பயங்கரமாக கனன்று கொண்டிருக்கிறது.

அதே நேரம், மு.காவில் பற்றியெரிதலில் முஸ்லிம் சமூகத்தையே கருக வைத்து சின்னாபின்னமாக்கிவிட வெளிச் சக்திகள் தமது உள்ளூர் முகவர்களையும், மாற்று வழிகளையும் மிகக் கவனமாக கையாண்டு கொண்டிருக்கிறது. பிரதேச வாதக்குமட்டல் தாருஸ்ஸலாம் ஐ நெருங்கவிடாதபடி மணம் வீசிக்கொண்டிருக்கிறது.

சிங்களப் பேரினவாதத்துக்கும் தமிழ்க் குறுந்தேசியவாதத்துக்கும் எதிராக ஏந்தப்படாது புதைக்கப்பட்ட ஆயுதங்கள் தென்தலைமைத்துவத்துக்கெதிராக ஏந்தப்படப்டுே பாவதாக கிழக்கில் சூளுரைக்கப்படுகின்றது.

தலைமைத்துவத்தை தக்கவைத்துக் கொள்வதற்காய் சமுதாய, கட்சி நலன்களுக்கப்பால் கவனமாகக் காய் நகர்த்தப்படுகிறது. இதற்காக வேண்டி கூட்டல், கழித்தல், மட்டந்தட்டல், யுக்திகள் மிகக் கவனமாகக் கையாளப்படுகிறது. பெண் தலைமைத்துவம் பற்றிய விவாதம் வேறு சூடேறியிருக்கிறது.

ஒட்டுமொத்தமாகச் சொன்னால் மக்களால் மக்களுக்காக கட்டி வளர்க்கப்பட்ட கட்சி, தலைமைத்துவப் போட்டியின் காரணமாக சுயநலவாத தனிநபர் நலன்களுக்காய் கூறுபோடப்பட்டு சின்னாபின்னமாகிவிடுமா? தமிழர் விடுதலைப் போராட்டம் தமிழ், இயக்கங்களின் விடுதலைப் போராட்டமாக மாறி மலினப் படுத்தப்பட்டது போல் முஸ்லிம் விடுதலைப் போராட்டமும் மழுங்கடிக்கப்பட்டுவிடுமா எனப்பொது மக்கள் அஞ்சுகின்றனர்.

இத்தகையதொரு சூழ்நிலையில் மு.காவின் தலைமைத்துவம் அவதானிக்கக்கூடியதாவுள்ளது.

*முதலாவது வகையினர்*

ரவூப் ஹக்கீம் தலைவராக வேண்டும் என்ற கருத்தை பழையவர்கள் நீண்டகாலம் தலைமைக்கு அடுத்த படியான செயலாளர் பதவியை வகித்தவர், பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் பதவி வகித்தமை, இயலுமை தகுதி, ஆற்றல்கள் ஊடையவர், முஸ்லிம்களின் பிரச்சினைகள் சம்பந்தமாகத் தெளிவாகத் தெரிந்தவர். அது சம்பந்தப்பட்ட பேச்சுவார்த்தைகளில் அதிகமாகக் கலந்துகொண்டுள்ளார் போன்ற பல்வேறு காரணங்களுக்காக இப்பிரிவினரால் ரவூப் ஹக்கீம் ஆதரிக்கப்படுகிறார்.

மேலும் தென் இலங்கையைச் சேர்ந்தவர் என்பதால் அப்பகுதி மக்களால் இயல்பாக விரும்பப்படுகிறார்.

மு.கா. தேசிய கட்சியாகவிருப்பதால் கிழக்கைச் சார்ந்தவர் தான் தலைவராக வரவேண்டும் என்பது நியாயம் அல்ல என்பது இவர்களது வாதமாகும்.

இவ்வடிப்படையில் எல்லா வகையிலும் மிகப் பொருத்தமானவராக இப்பிரிவினர் ரவூப் ஹக்கீமை அடையாளப் படுத்துகின்றனர்.

***இரண்டாவது வகையினர்; பேரியல் அஷ்ரப் ஐ ஆதரிப்பவர்கள்***

மறைந்த தலைவர் கட்சியை உருவாக்கியதோடு அதன் வளர்ச்சிக்கு மகோன்னத பங்களிப்புச் செய்தவர். அதனை கௌரப் படுத்துவற்காக வேண்டி அவரது மனைவிக்கு அவ் அந்தஸ்து வழங்கப்பட வேண்டும். அத்துடன் பின்னர் இப்பதவி அவரது மகன் அமானுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற கருத்துடைய சில அனுதாபிகளும் இப்பிரிவில் உள்ளனர்.

மேலும் இவ்வணியில் அஷ்ரப்பினது பதவிக் காலத்தில் மிக நெருக்கமாகவிருந்தவர்களும், உயர் பதவிகளைப் பெற்றவர்களும் குறிப்பாக கிழக்கைச் சேர்ந்தவர்களும் அவர்களது உறவினர்களும் ரவூப் ஹக்கீமின் வருகையால் தமது அதிகாரத்துக்கு அச்சுறுத்தல் ஏற்படும் எனக்கருதும் தென் பகுதியைச் சேர்ந்தவர்களும் இவ்வணியில் மிகத் தீவிரமாக இயங்குவதைக் காணலாம்.

இப்பிரிவினர் தங்களைப் பலப்படுத்திக்கொள்வதற்காக அஷ்ரப்பின் மரணத்தைத் தொடர்ந்து கட்சியின் அரசியல் அதி உயர் பீடத்தில் ஒரு தலைப்பட்சமாக ஆறு அங்கத்தவர்களை நியமித்தது குறிப்பிடத்தக்கது.

இவர்களது வாதம் மறைந்த தலைவருக்கு இணையாக யாரும் இல்லாததால் அவரது மனைவி நியமிக்கப்பட்டு தலைமைத்துவத்தின் அதிகாரங்கள் வரையறுக்கப்பட வேண்டும் என்பதுமாகும்.

***மூன்றாவது வகையினர்***

கிழக்கைச் சேர்ந்தவரே தலைவராதல் வேண்டும். முஸ்லிம்கள் மு.காவை தோற்றுவிப்பதில் பிரதான செல்வாக்குச் செலுத்துவதன் காரணம் தமிழ் ஆயுதக் குழுக்களால் வடகிழக்கு முஸ்லிம்கள் அச்சுறுத்தப்பட்டமையே. உயிருக்குப் போராடிய வடகிழக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொள்வதற்காகவே மு.கா உருவாக்கப்பட்டது. எனவே அவர்களது பிரச்சினையை இப்பகுதியைச் சார்ந்த நபராலேயே தெளிவாக உணரமுடியும்.

மேலும் இப்பிரச்சினைக்கான தீர்வின்போது வடகிழ முஸ்லிம்களின் பிரச்சினைகளே முதன்மைப்படுத்தப்பட வேண்டும். மறைந்த தலைவர் இவ்விடயத்தில் மிகத் தெளிவாகவிருந்தார். அத்துடன் தமிழர் விடுதலைப் போராட்டத்தைப் பற்றியும் மிகத்தெளிவாக விளங்கியிருத்தல் வேண்டும். இவ்வகையில் தெற்குத் தலைமைத்துவம் மறைந்த தலைவரால் கடுமையாக விமர்சிக்கப்பட்டது.

எனவே உயிரோடு விளையாடிக் கொண்டிருக்கும் வடகிழக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகளை அனுபவித்து அப்பகுதியில் வாழும் ஒருவராலேயே அதனை தெளிவாக உணர முடியும். எனவே மு.காவின் தலைமைத்துவம் கிழக்குக்கு வெளியே செல்லக்கூடாது என்பது இவ்வகையினரது வாதமாகும்.

இச்சிக்கல்களிலிருந்து முஸ்லிம் சமூகம் அவசரமான பொருத்தமான முடிவுக்கு வந்தேயாக வேண்டும். இலங்கை அதன் இனங்களுக்கிடையிலான பிரச்சினையில் தீப்பற்றி எரிந்து சாம்பலாகிவிடும் நிலையில் அதிலிருந்தும் காப்பாற்றி இனங்களுக்கிடையே அதன் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நிலையில் உள்ளது. அவ்வேளை முஸ்லிம்களும், தமக்கான தீர்வைப் பெறுவதற்கான பாத்திரத்தை ஏந்தியே ஆக வேண்டும்.

எனவே ஆண் - பெண் பால் வேறுபாட்டுக்கும், கிழக்கு தெற்கு பிரதேச வேறுபாட்டுக்கும், தனி நபர் கௌரவப்படுத்தப்பட வேண்டும், மறைந்த தலைவருக்கு யாரும் ஈடாக மாட்டார் என்ற பிற்போக்குத்தனமாக சுயநலவாத சிந்தனைகளுக்கப்பால் இருப்பதில் மிகப் பொருத்தமான காத்திரமானதோர் தலைமையே அவசியம்.

அத்தலைமை இலங்கை முஸ்லிம்களின் பிரச்சினைகள் அதற்கான தீர்வுகள் பற்றி தெளிவாக உணர்ந்திருத்தல் வேண்டும். குறிப்பாக வீதிகளில் அகதிகளாக அடித்து துரத்தப்பட்டிருக்கும் வட பகுதி முஸ்லிம்களினதும், உயிருக்கு கப்பங்கட்டிப் போராடிக் கொண்டிருக்கும் கிழக்கு முஸ்லிம்களினதும் பிரச்சினைகள் பற்றி நன்குணர்த்திருத்தல் வேண்டும்.

அவ்வகையான நேர்மையானதொரு தெரிவையே முஸ்லிம் சமூகமும் குறிப்பாக இளைஞர்களும் மு.காவின் அதியுயர் பீடத்திடம் எதிர்பார்க்கின்றார்கள். அவ்வுறுப்பினர்கள் விலைபோகாத கொள்கைப் பற்றுள்ள பிரக்ஞை பூர்வமான சமுதாய உணர்வுள்ளவர்கள் என்று மக்கள் நம்பிக் கொண்டிருக்கின்றார்கள். அதனை அவர்கள் நிறைவேற்றுவார்களா?

அவ்வாறு தமிழ் இளைஞர்கள் ஏமாற்றப்பட்டு விரக்தியுற்று தம்மைத்தாமே அழித்து பாரிய இழப்புக்களைச் சந்தித்த சோக வரலாறு, முஸ்லிம் சமூத்திற்கும் ஏற்படுமா? அவ்வாறானதொரு நிலை ஏற்படும் இடத்து அதற்கு காரணமானவர்கள் தண்டிக்கப்படுவதோடு அச்சமூகம் அழிவுறுவதும் தவிர்க்க முடியாததாகிவிடும்.

நன்றி - நூலகத்திட்டம்



# பிரிட்டிஸ் இராணுவத்திடம் துண்டுப்பிரசுரம் கொடுத்தோம்

## நினைவுக் குறிப்புகள் – 18

1941 இன் இறுதிப்பகுதியில் ஜப்பான் யுத்தத்தில் கலந்து கொண்டது. ஜப்பானின் இந்த வருகையுடன் எங்கேயோ ஐரோப்பாவில் நடந்து கொண்டி-ருந்த யுத்தம் இலங்கையிலிருந்த மக்களுக்கு அவர்களது வீட்டுக்-கருகே வந்துவிட்ட உணர்வை ஏற்படுத்தியது. யுத்தத்தில் அது இறங்கி இரண்டொரு மாதங்களில் பர்மா, மலாயா, சிங்கப்பூர் ஆகிய வற்றைப் பிடித்ததுடன் இலங்கை மீதான அதன் ஆக்கிமிப்பு எந்த நேரமும் நடக்கலாம் என்ற நிலை உருவாயிற்று. ல.ச.ச.கட்சி ஒன்றில், இங்கிருந்த காலனிய அதிகாரத்துவம் தனது பாதுகாப்-புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள-தால் அதனுடைய அல்லது ஜப்பானிய ஆக்கிரமிப்புப் படை யால் மோசமான ஒடுக்குமுறை சூழல் ஒன்று உருவாகக் கூடும் என்று கருதியது. அது தனது சொந்த இருப்பையும் மிகவும் நெருக்கடிக்குள்ளாகும் என்று கருதியது.

கண்டியில் தடுத்து வைக்கப்-பட்டிருந்த நான்கு கட்சித் தலைவர் களதும் சொந்தப் பாதுகாப்புப் பற்றிய சஞ்சலம் பெரும் பரபரப்பை ஊட்டியது. ஆனால், இது வெறுமனே அவர்களது சொந்தப் பாதுகாப்புப் பற்றிய ஒரு விடயம் மட்டுமல்லாமல் ஏனைய கட்சித் தலைவர்களது பாதுகாப்புக் குறித்த அச்சமாகவும் இருந்தது. யுத்தம் வெடித்ததன் பின் ல.ச.ச.-கட்சித் தலைவர்களிடையே இந்த யுத்தம் ஒரு புரட்சிகர நெருக்கத்-தைத் தோற்றுவிக்கும் என்ற உள்ளார்ந்த எண்ணம் இருந்தது. புரிந்தோ, புரியாமாலோ முதலாம் உலக யுத்தத்தின் சில சம்பவங்கள் ருசியப் புரட்சியின் வெற்றிக்குத் தூண்டுதலாக இருந் தன என்று அவர்கள் கருதியது, இத்தகைய கற்பனைகளைத் தூண்டி விடுவ-தாக இருந்தது. இறப்பதற்கு சில மாதங்களுக்கு முன் தான் ட்ரொஸ்கி இந்த யுத்தம் பாட்டாளி வர்க்கப் புரட்சியைத் தூண்டி-விடும் என்ற தனது உறுதியான நம்பிக்-கையைத் தெரிவித்-திருந்தார். இலங்கை-யைப் பொறுத்தவரை இங்கே புரட்சிக்கு முந்திய அமைதி-யின்மை எதையும் காணக்கூடியதாக இருக்கவில்லை. ஆனால், இந்தியாவில் இருந்த தேசபக்த இயக்கம் ஏகாதிபத்தியவாதிகளுடன் மோதும் ஒரு நிலைக்கு வளர்ந்திருந்தது. ஜப்பானியத் துருப்புக்கள் இந்தியா வின் எல்லையருகே வந்துவிட்டிருந்தது. இது நிலைமையை மேலும் ஆர்முடுகச் செய்தது எனலாம்.

இதேவேளை வெளிப்படை-யாகத் தன்னை அறிவிக்கத் தயா ராக இருந்த இந்திய போல்ஸ்விக் - லெனினிஸ்ட் கட்சியானது ல.ச.ச.கட்சியின் தலைவர்கள் பலரையும் - ஏற்கெனவே அங்கிருந்த அந்தோனிப்பிள்ளை, லெஸ்லி, வி.வி. ஹெக்டர், காராள சிங்கம் ஆகியோருடன் சேர்ந்து மேலதிகமாக அங்கு வந்து செயற்படுமாறு கூறியது. இவ்வா-றான பல்வேறுவிதமான அபிப்பி-ராயங்கள் ஒன்று சேர்ந்து கட்-சியை, 1942இன் ஆரம்ப மாதங்-களில் சிறையை உடைத்துத் தடுப்புக் காவலிலிருந்த நான்கு தலைவர்களையும் வெளியில் எடுக்கும் நிலைப்பாட்டை நோக்கித் தள்ளிக் கொண்டிருந்தன.


0 0 0

1942இல், அந்தக் காலத்தி-லிருந்த பலரையும் போல, எனது குடும்பமும், கொழும்பிலிருந்து காலியை நோக்கிப் பாதுகாப்புக் காரணங்களுக்காக இடம்பெயர்ந்-தது. நான் மட்டும் கொழும்பில் இருந்தேன். பல்கலைக்கழக வகுப்புக்களுக்குப் போவதற்காக-வும், படிப்பதற்காகவும், இந்த முடிவு எடுக்கப்பட்டது. இது உண்மையாயினும், எனது குடும்பம் காலிக்குப் போனது. நான் சுதந்திரமாகக் கட்சியின் நெருக்கடி காலத் தயாரிப்புக்களில் ஈடுபடுவதற்கு வசதியாய் அமைந் தது. டார்லி றோட்டில் உள்ள சென்ற் ஜோசப் கல்லூரியின் முன்னாலிருந்த ஒரு தொடர் மாடியின் மேற்தட்டில் அலன் மென்டிஸ் என்ற இன்னொரு கட்சிச் செயற்பாட்டாளர், லோறன்ஸ் ஆகியோருடன் நான் தற்காலிகமாகத் தங்கிருந்தேன். இங்கிருந்து ஏப்ரல் 4ம் திகதி ஜப்பான் கொழும்பினை முற்றுகையிட்ட போது நடந்த விமானத் தாக்குல்களை நாம் பார்வையிட்டோம்.

கொழும்பு இப்போது பிரிட்டிஷ் துருப்புக்களால் நிறைந் திருந்தது. புரட்சி நெருங்கிக் கொண்டிருக்கும் ஒரு நிலையில் இந்தப் பிரித்தானியத் துருப்புக்-களின் பங்கு ஒரு முக்கிய இடத்-தைப் பிடிக்கக்கூடும் என்பதால்,

**இந்தத் துண்டுப்பிரசுரத்தை சினிமாத் தியேட்டர்களின் முன் நிற்கும் தெருவோரப் பையன்கள் சிலரைக் கூலிக்குப் பிடித்து வெள்ளை நிற இராணுவத்தினரிடம் அவர்கள் படம் முடிந்து வெளியேறும் போது கொடுக்கும்படி செய்தோம். ஆங்கிலம் படிக்க முடியாத அந்தப் பையன்கள், அதை ஒரு விளம்பரம் என்று நினைத்து ஒப்புக் கொண்டார்கள்.**

அவர்கள் மீது செல்வாக்குச் செலுத்தும் விதத்தில் பிரச்சாரம் செய்ய வேண்டுமென்று புரட்சிகரக் கமிட்டி வலியுறுத்தியது. அதன் முதற்கட்டமாக, துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்பது என்றும், அதன் நோக்கம் படையினருக்கு இந்த யுத்தத்தின் ஏகாதிபத்தியத் தன்மை குறித்துக் கல்வியூட்டுவதாகும் என்றும் முடிவு செய்யப்பட்டது. நானும் லோறன்சுமாக அந்தத் துண்டுப் பிரசுரத்தை எழுதினோம். ஆனால், அதில் இருந்த பல உணர்வூட்டும் சொற்தொடர்களை டொறிக் வேறொரு நோக்கத்திற்காக எழுதிய பிரசுரத்திலிருந்து நாம்




தலைமறைவு வாழ்க்கை

றெஜி சிறிவர்த்தன

எடுத்துப் பயன்படுத்தியது எனக்கு ஞாபகம் இருக்கிறது. "ஜப்பானின் எழு ஞாயிறுக்கும், பிரிட்டிஸின் விழு ஞாயிறுக்கும் எதிராக நாம் எமது புரட்சியின் இரத்தச் சிவப்-புப் பதாகையை உயர்த்துகிறோம்"

இந்தத் துண்டுப்பிரசுரம்' பிரித்தானியத் துருப்புக்கள், கப்பலோட்டிகள், மற்றும் விமானி-களுக்கு இலங்கையின் தொழிலா-ளர் விவசாயிகளிடமிருந்து' என்று தலைப்பிடப்பட்டது. (50 வருடங்-களுக்குப் பிறகு இந்தத் தலைப்பை 'எனது நினைவுச் சுவடுக-ளில்' என்ற தலைப்பிலான ஒரு துவ. ப்பிரசுரத்திற்குப் பயன்படுத்தினேன்)

இந்தத் துண்டுப்பிர-சுரத்தை சினிமாத் தியேட்-டர்களின் முன் நிற்கும் தெரு-வோரப் பையன்கள் சிலரைக் கூலிக்குப் பிடித்து வெள்ளை நிற இராணுவத்தினரிடம் அவர்கள் படம் முடிந்து வெளியேறும் போது கொடுக்கும்படி செய்தோம். ஆங்கிலம் படிக்க முடியாத அந்தப் பையன்கள், அதை ஒரு விளம்ப-ரம் என்று நினைத்து ஒப்புக் கொண்டார்கள். இதேவேளை டிக்கி ஆட்டிக்கல இவற்றில் சிலவற்றை வை.எம்.சி.ஏ வாசிக-சாலையில் இருந்த சஞ்சிகைகளுக்-குள் வைத்துவிட்டார். அடுத்த சில மாதங்களுள் டிக்கி இரண்டு பிரிட்டிஷ் இராணுவத்தினரை ட்ரொஸ்கியிசத்திற்கு மாற்றிக் கொண்டு விட்டதுடன், அவர்கள் மூலமாக வை.எம்.சி.ஏ.யில் நண்பர்களை உருவாக்கி கொஞ்சம் கொஞ்சமாக அரசியலை பிரச்சாரம் செய்யத் தொடங்கியிருந்தார்.

டார்லி றோட்டிலுள்ள எங்களது தொடர்மா-டிக்கு வந்த அவர்க-ளில் ஒருவரை நான் சந்தித்தேன். யுத்தத்-திற்கு முன்னர் அவர் பிரித் தானிய கம்யூ-னிஸ்ட் கட்சியின் உறுப்பினராக இருந்தார். ஆனாலும் டிக்கி அவரை வெற்றி கொண்டிருந்தார்.

அவர் எனக்காக ஒரு பாடலையும் பாடினார். அந்தப் பாடல் பிரித்தா-னியாவிலுள்ள ட்ரொஸ்கிஸ்டுக்கள் ஸ்ராலிஸ்டுக்களைப் பழித்துரைப்-பதாகக் கூறியது. இந்தப்பாடல் 'My Darling Camantine' என்ற பாடலின் மெட்டில் பாடப்பட்டது.

கிழட்டுத் தொழிலாளி...
கிழட்டுத் தொழிலாளி என்ன
துயர விதி தான் உனக்கு!
தோழர் ஸ்ரானின் உன்னை
விரும்பார்,
கட்சியின் வழியில் நீ நிற்பதால்!

(வரும்)

# முட்களின் கதைகள்

என் வெறுப்புகளை மிகைப்படுத்தும்
மனித மனம் தின்னும்
மேன் மக்களே
எனை வாழவிடுங்கள்
உங்கள்
உண்மைகளை விழுங்கும்
உணர்வுகளைச் சிதைக்கும்
சம்பிரதாயக் கயிற்றில் எனைத்
திரித்து வதை செய்ய வேண்டாம்
அதனுள் அழகிய மனிதனாய் வாழுதல்
அழிந்து அமிழ்ந்து போதல்
என்னால் இயலாது.

நான் நிஜங்களை நேசிக்கிறேன்
இன்னமும் தெளிவுற்றால்
உங்களைத் தவிர்த்தவற்றை
உங்கள் ஆறாம் அறிவினை மறக்கடிக்கும்
போலி மகிழ்வுகளை அல்ல.
சராசரி திருமணத்திலோ
உடல் உணர்தல்களிலோ
நான் திருப்தியுறுபவளல்ல.

என் திருப்தி என்பதும்
விடுதலை என்பதும்
உங்களுள் அடக்கப்பட முடியாதவை
உங்களுள் உணர்த்தப்பட முடியாதவை
நிச்சயமாய் அவை
உங்கள் பாதங்களின் கீழோ
அல்லது என் கழுத்தின் கீழோ
புதைக்கப்பட வேண்டியதென
ஒரு கற்பனையைத் தானும்
உருவாக்க வேண்டாம் நீங்கள்.

நான் வாழ்தலையும் மரணித்தலையும்
எனக்காய்ப் புரிய இசைகிறேன்
தீக்கிடங்கினுள் கிடந்து
நான் உயிர்வாழ்வதாய்க் கூச்சலிட
எத்தகைய பிடிப்புகளுமில்லை எனக்கு
இத்தகைய வாழ்ந்து அழிதலுடன் கூடிய
நடிப்புதிறன் எனக்கிருப்பதாய்
மார் தட்டிக்கொள்ள நான்
உங்களுள் ஒருத்தியும் அல்ல.

நான் எனை ஓர்
உன்னதப் பிறவியெனக் கருதிக் கொள்வேன்
ஒளிர்ந்து பின் தேய்தல்
உறுதியென விதியெழுதப்பட்டபின் கூட
பொன்னிலவு கரைந்து விடவில்லையே.
என் முயல்வுகளும் சிந்தனைகளும்
தோற்கடிக்கப்படலாமென உணர்ந்தும்
நான் போரிடுகிறேன்
உங்களுள் ஒருத்தியாய் அல்ல
ஓர் உன்னத பிறவியாய்

ஆதலால் உலகில் எங்களைப் பெற்றுத் தள்ளி
உணர்வுகளைத் தனியே உறிஞ்சி
பிணங்களாய் வாழவிடும்
ஒழுக்கமிகும் மேன் மக்களே
எனை வாழ விடுங்கள்
அல்லது என்னையும் அவர்கள் போல்
உணர்வுகளை உறிஞ்சி
பிணங்களாய்த் தான் வாழவைப்பீரெனின்
உடனேயே எனைக்
கொன்று விடுங்கள்
ஏனெனில்
வாழ்தலுடன் கூடிய நடிப்புத்திறன்
எனக்கிருப்பதாய் மார்தட்டிக்கொள்ள
நான் நிஜங்களைப் பொய்ப்பிப்பவளல்ல.

பெண்ணியா

நன்றி - நூலகத்திட்டம்



# அரை நூற்றாண்டுகால பிரதேச வாழ்நிலை மாற்றங்களைப் பிரதிபலிக்கும் ஒரு நூல்!

– வேலோன்

புனை கதைகளில் பிரதேச வாழ்நிலை வெளிப்பாடுகளின் ஆதிக்கம் அறுபதுகளில் தான் முனைப்புப் பெற்றிருந்தாலும், ஈழகேசரி காலத்திலேயே அதற்கான அடிவேரிடப்பட்டது என்பதற்கு இலங்கையர்கோன், சி. வைத்தியலிங்கம், சு.வே.,கே.வி. நடராசன், வ.அ.இராசரத்தினம் போன்றவர்களது படைப்புகள் உதாரணங்களாக விளங்குகின்றன. உன்னத படைப்புகளான இலங்கையர்கோனின் 'வெள்ளிப்பாத சரம்', சி.வைத்தியலிங்கத்தின் 'பாற்கஞ்சி' மற்றும் சு.வேயின் 'மண்வாசனை', கே.வி. நாடராசனின் 'யாழ்ப்பாணக் கதைகள் போன்றன யாழ் மண்ணின் தனித்துவக் கலாசாரப் போக்கினைக் காட்டுவனவாக அமைதல் போன்று, சருவதேசிய தரத்திற்கு நிகரான 'தோணி' என்ற வ.அ.இராசரத்தினத்தின் சிறுகதை திருமலை மண்ணின், குறிப்பாக மூதூர் பிரதேசத்தின் அக்கால வாழ்நிலையினை வெளிப் படுத்துவதாக விளங்குகின்றது.

வ.அ.இராசரத்தினத்தைத் தொடர்ந்து தருமுசிவராமு, தா.பி.சுப்பிரமணியம், அருள் சுப்பிரமணியம், ந.பாலேஸ்வரி, போன்ற பல படைப்பாளிகள் திருமலை மண்ணிலிருந்து தெரிந்து கொள்ளப்பட்டாலும், 'தோணி'யின் தரத்திற்கு ஒப்பான சிறுகதைகள் எதுவுமே அத்தளத்திலிருந்து இந்த நிமிடம் வரை எழுதப்படவில்லை என்று கூறுமளவிற்கு, அப்பிரதேச வாழ்நிலையை மிகவும் அற்புதமாகவே 'தோணி' கதையில் வ.அ.இராசரத்தினம் வெளிப்படுத்தியிருந்தார்.

புத்தனுபவத்திற்கு நம்மை இட்டுச் சென்ற, நம்மை விரிவுபடுத்திய, புதிய பரிமாணமாகக் கொள்ளத்தக்க பிராந்திய மண்ணின் உணர்வுகளை தோணி கதையின் தொடர்ச்சியாக பல கதைகளிலும் வ.அ.இராசரத்தினம் வெளிப்படுத்தியிருந்தாலும், வெளிவந்த நேரத்தில் தம்மை முழுமையாக வெளிப்படுத்திய வகையில், 'ஒரு ஆலமரத்தின் கதை', 'துணிச்சல்' போன்ற கதைகள் குறிப்பிடத்தக்கனவாக அமைந்திருந்தன. இவற்றுள் 1952இல் ஈழகேசரியில் பிரசுரமான 'அந்த விருந்து' கதையிலிருந்து 1997இல் சரிநிகரில் வெளியான 'துணிச்சல்' கதை உட்பட்ட 16 கதைகளைத் தொகுத்து 'கொட்டியாரக் கதைகள்' என்ற மகுடத்தில் மூதூர் கலை இலக்கிய ஒன்றியத்தினர் வெளிக் கொணர்ந்திருக்கும் இம் முயற்சியானது, கொட்டியாரகப் பற்று என்ற வழக்கிலிருந்து மூதூர் பிரதேசம், முன்னாளில் எப்படியிருந்தது என்ற எதிர் காலச்சந்தியினருக்கு கூறி நிற்கத்தக்க நல்லதொரு ஆவணமாக விளங்கும் என்பது விவாதமற்ற கூற்றாகவே அமையவுள்ளது.

1946இல் எழுத ஆரம்பித்து (மழையால் இழந்த காதல் - தினகரன்), நீண்டகால இலக்கிய வாழ்வு ஒன்றை வாழ்ந்து, இன்று பவளவிழா கண்டு நிற்கும் வ.அ. இராசரத்தினத்தினது 'தோணி'. 'ஒரு காவியம் நிறைவு பெறுகிறது' ஆகிய சிறுகதைத்தொகுதிகள் உட்பட்ட பதினொரு கவனிப்பிற்குரிய நூல்கள் ஏற்கெனவே வெளிவந்திருக்கின்றன. ஈழகேசரி மற்றும் மறுமலர்ச்சி காலக்கதைகள், முற்போக்கு, நற்போக்கு காலக் கதைகள், தேசிய இனப் பிரச்சினைக்குரிய காலக்கதைகள், போர்க் காலக் கதைகள் என சிறுகதைத் துறையில் கடந்த அரை நூற்றாண்டு காலங்களில் நிகழ்ந்த பாய்ச்சலை இனங்காட்டத்தக்க வகையில் இத்தொகுதிக் கதைகள் ஒழுங்கு படுத்தப்பட்டிருப்பதில் பன்னிரண்டவதான இந்நூலின் முக்கியத்துவமும், தவிர்க்க முடியாததொன்றாகின்றது.




நூல் :
கொட்டியாரக் கதைகள்
(சிறுகதைத் தொகுதி)

ஆசிரியர் :
வ.அ.இராசரத்தினம்

வெளியிட்டோர் :
கலை இலக்கிய
ஒன்றியம்
மூதூர்

விலை : 120

பிரான்ஸ் நோர்மண்டி மக்களின் வாழ்நிலையை மாப்பசான் சித்திரித்ததுபோல, புதுமைப்பித்தன் திருநெல்வேலி மக்களது வாழ்க்கையைப் படம்பிடித்தது போல, மூதூர் மக்களின் வாழ்க்கையை தான் வெற்றிகரமாகப் படைக்க உதவியது, உலக இலக்கியங்களின் பரிச்சயமே என அண்மையில் ஓரிடத்தில் கூறியிருக்கும் வ.அ. இராசரத்தினம் அறுபதுகளின் இலக்கியச் செல்நெறியிலிருந்து படிப்படியாக ஈழத்து எழுத்துக்கள் எவ்வாறு கூர்ப்படைந்து செல்கின்றன என்பதை தனது இச் சிறுகதைத் தொகுதிவாயிலாக காட்ட முனைந்துள்ளார்.

"ஊர் முழுக்க வெள்ளக்காடு! ஒரே அழிவு! அரசாங்கம் வேண்டுகோள் விடுத்ததினால் இந்தி!!யக் ஹெலிக்கொப்ரர்கள் உயரப் பறந்து வெள்ளப்பகுதியில் உணவுப் பொட்டலங்கைள வீசின," (நம்பிக்கை கதை - 1961)

பொதுவில் இத்தகைய நிகழ்வுகள், அழிவுகளையே அறுபதுகளில் படைப்புலகம் பதிவு செய்தது.

அகதிவாழ்வு, ஆயுதக் கலாசாரம், இயக்கவாத அணுகுமுறை ஆகியவற்றில் தொடரும் மரண வாழ்வின் மாறும் உணர்திறனை எமக்குச் சுட்டுவனவாக மண்ணின் பிரச்சினைகளும் காலப் போக்கில் மாற்றமடைகின்றன.

பஞ்சபூதங்களுடன் போட்டி போட்டுக்கொண்டு பூதாகரமாக போர் அழிவுகளும், மக்களைப் பீதியடையச் செய்கின்றது. வட கிழக்கு மாகாண மக்களின் வாழ் நிலையை மாற்றி அமைத்து விட்ட யுத்தத்தினாலான பெருந் துக்கங்களை, அழுத்தங்களை இலகுடனும், நுட்பத்துடனும் வ.அ.இராசரத்தினம் 'துணிச்சல்' கதையில் பின்வருமாறு பதிவு செய்கிறார்.

"கடலுக்குப் போகப்படாது என்று தடபோட்டதுக்குப் பொறகு கொஞ்சநாள் நிவாரணம் தந்தாங்க. எங்கவூட்ல நாங்க ஐஞ்சுபேர். ஒருமாசம் முன்னூாத்திச்சொச்ச ரூபாய்க்கு ரேசன் அரிசியும், சீனியும் பருப்பும் கிடைச்சிது. அது எந்த மூலைக்கு? ஆனால், கொஞ்ச நாளில அந்த நிவாரணத்தையும் நிப்பாட்டிற்றாங்க. இப்ப அந்தப் பிச்சையும் இல்லாமல அலக்கழியிறம். எம் பீற்றச் சொல்லிப் பாத்திற்றம். அம்மாவுக்கு எங்க மீன்பிடிச் சங்கம் தந்தியடிச்சுது. ஊர்வலமா ஏ.ஜி.ஏட்டப்போய்ப் பிட்டிசம் கொடுத்தம். எதுக்கும் ஒண்ணுமே நடக்கல. இப்ப மீன் பிடிக்கிற சனம் எல்லாம் பட்டினி கிடக்கு!" (துணிச்சல் - 1997)

இத்தகைய சமூக அசைவியக்கத்தினை வ.அ. இராசரத்தினம் தமது மண்ணினூடாக நோக்கும் முறைமையினையே இப்பதினாறு கதைகளும் சித்திரித்துள்ளன.

மற்றொரு வெட்டுமுகத்தில் மூதூர் பிரதேச மண்ணின் வனப்பும், வளமும், எவ்வாறாக யுத்தத்தினால் மாறிப்போகின்றது என்பதை யதார்த்த பூர்வமாகவும், கலைச்செறிவோடும் ஆசிரியர் விபரித்திருக்கின்றார்.

கொடிய தாக்குதல்கள் மூலமும், கோர யுத்தத்தின் மூலமும் கொட்டியாரப் பற்றுப் போன்ற கிராம மாறுதல்களூடாக ஈழத் தமிழ் எழுத்துக்களின் மாறுதல்களையும் எடுத்துரைக்க முற்பட்ட முன்னாள் ஆசிரியரான வ.அ. இராசரத்தினம் கதைகளை நகர்த்தும் முறைமையிலும் ஒரு மாற்றத்தினை நிகழ்த்திக் காட்டியிருப்பாரானால் நமக்கு மற்றுமொரு 'தோணி'யில் பயணிக்கும் வாய்ப்பிருந்திருக்கும்.

ஆனாலும், எஸ்.எல்.எம். ஹனிபாவின் 'மக்கத்துச்சால்வை' (ஓட்டமாவடி), புலோலியூர் க.சதாசிவம், எழுதிய 'ஒரு நாட் போர்' (மலையகம்) போன்ற இதுவரை வெளிவந்த பிரதேச சிறுகதைத் தொகுதிகள், ஒன்று அல்லது இரண்டு தசாப்த கால இடைவெளியில் நிகழ்ந்த பிரதேச மாறுதல்களையே பதிவு செய்திருந்தன. ஏறத்தாழ அரை நூற்றாண்டுகால இடைவெளியில் ஒரு பிரதேச வாழ்நிலை மாறுதல்களை பிரதேச மொழி துல்லங்க வெளிப்படுத்திய முதல் நூல் என்ற வகையில் வ.அ. இராசரத்தினத்தின் கொட்டியாரக் கதைகளுக்கு ஒரு முக்கிய இடமுண்டு.

## எல்லாம் மாறி என்னை மாற்ற நீ விடவில்லை...

கோடு கீறிக்கீறி
வட்டமாக்கியே
துண்டாக்கி - எடுக்காமல்
கீரி.....
கோட்டில்......
குருதி
நாடி தாளம் வெடித்து
தசைகளை பிய்த்துச்
சுவைக்க - வீநீரோடு
நா... தொங்க,
நடு ரோட்டில்.....
நீயும், உன் சகோதரனும்....

இரு தசாப்தத்துக்கு மேலாக
என் மலக்குழியில்
இயந்திரத் துப்பாக்கியை....
எடுக்காமல் இன்னும்....
கதறுதலுக்காகவல்ல,
என் நிர்வாணத்தை
சிதைத்து......
நீ....உம் - உன்...

உப்பும் வெடுக்கும்
முகம் பார்க்கும்,
கண்ணாடிக்குள்
கண்ணாடியாய்
என்னோடு இன்னும்

நீண்ட வெட்டவெளி.../

உன்னோடு
உண்மையாதல்
ஒரு தடவையல்ல,
வேண்டும் பல தடவை
நானும் நீயும்
புரிதலோடு
உண்மை உறவு.....
பலதடவையும்
நீ என்னையும், நான்
உன்னையும் பல தடவை
புரிதலோடு
வேண்டும் உறவு
உன்னோடு...

- விசா -

## தெருக்கள்

ஓர் புலம்பெயர்வின் மீள்திரும்புகையில்
மீண்டும் அந்தத் தெருக்களில்
என் பாத ஒத்தனங்கள்
முதிர்வடைந்த தோற்றத்தோடு
என்னை முனகி வரவேற்கிறது தெரு.
வெந்நீர் பாய்ச்சிய கொப்பளங்களாய்
பொங்கியுடைந்து தேங்கிக்கிடக்கும்
வெள்ள நீர்.
சேறு குழைத்து அப்பி, அசிங்கப்படுத்தி
எங்கள் தெருக்களின் அழகொழித்தவர்கள்
அந்த ஆக்கிரமிப்பாளர்கள்.
என் ஆத்திரம் அழுகைக்குள்ளிலிருந்து
எட்டிப்பார்க்கும் போதெல்லாம்
கொடிய அவர்களுக்குப் பிசாசு முகங்களை
மாட்டிப் பார்க்கிறேன்
எங்களுக்காய்ப் சோடித்துக்காத்திருந்த
தெருக்கள், அவர்களின் பிரவேசிப்பால்
பிழவுண்டு போனது.
ஆணைக்கால் பொருத்திய அரக்கர்கள்
குதித்துக்குதித்துக்குதறிக்கிழித்திருக்கும்
எங்கள் தெருக்கோலத்தைப் பாருங்கள்!
வளைந்து வளைந்து நீலம்பூசிய
எங்கள் நீண்ட தெருக்களை
அவர்களிடம் பறிகொடுத்துவிட்டு
நாங்கள் பெயர்க்கப்பட்டோம்
ஆசைதீர, அலுத்துக்கொண்ட பின்
மீள ஒப்படைத்தார்கள்
வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட எங்கள் தெருக்களை
சல்லடை போட்ட சடலமாக
விறைத்து வீங்கிக் கிடக்கின்றன
எங்கள் உறவுத்தெருக்கள்

பராங்கதன்,
யாழ்ப்பாணம்

நன்றி - நூலகத்திட்டம்



# நாய்கள் குரைக்கின்றன

நாய்கள் குரைக்கின்றன. பல சந்தர்ப்பங்களில் குரைக்கின்றன. பலவிதமாகக் குரைக்கின்றன. அவை பயமடைந்தால் குரைக்கின்றன. புணர்ச்சிக்கான நேரங்களில் தாம் வெற்றி பெறுவதற்காகக் குரைக்கின்றன. பெண் நாய்கள் தமக்குப் பிடிக்காத ஒரு கடுவன் தமது யோனிகளை மணப்பேற்றும் போது கோபமடைந்து பற்களைக்காட்டி கடுமையாகக் குரைக்கின்றன. பொதுவாக நாய்களின் குரைப்பு என்பது பல சந்தர்ப்பங்களில் நிகழலாம். "நாய்கள் நிறக்குருடுகள்" (Dogs are colour blind) பதின்ம வயதுகளில் பாடசாலைகளில் அறிவியல் பாடம் கற்பித்த கந்தையா மாஸ்ரர் திருப்பித் திருப்பி சொல்லிக் கொடுத்த வாசகம். இன்று எல்லாம் மறந்து போய் இந்த வாசகம் மட்டும் எச்சமாக நினைவில் ஒட்டிக் கொண்டிருக்கிறது. அவர் நாய்களைப் பற்றி எத்தனை பண்புகளைப் படிப்பித்தும் முதலில் ஞாபகம் வருவது "நாய்கள் நிறக்குருடுகள்" என்பது தான். அதற்கான காரணம் "வரது" என்கிற வரதீஸ்வரன். அவன் கெட்டிக்காரனாகவும், மொக்கனாகவும், திகழ்ந்தவன் என்பது. அப்போது எங்கள் வகுப்பில் நன்கறியப்பட்ட விடயம். அந்த விடயத்தை இப்போதும் கூட சரியா? தவறா என திடமாகக் கூற முடியாதவனாக நான் இருக்கிறேன். அப்போது என்னோடு படித்த பெண் பிள்ளைகள் அனேகரின் முகங்கள் எனக்கு மறந்து போய் விட்டது. ஆனால், அம்பாலிக்காவின் முகம் மட்டும் இன்னமும் மறந்து போகாமல் நினைவில் படிந்த நிழற்படமாக இருக்கிறது. காரணம்' எங்கள் வகுப்பில் நாங்கள் பலர் தவ்வல் (Child) களாகவே இருந்தோம். எங்கள் வயது அப்போது பன்னிரண்டாக இருக்கலாம். ஏனென்றால், ஆங்கிலம் படிப்பித்த ஆறு. கண. கந்தசாமி வாத்தியார் எங்களை அடிக்கடி கேட்கும் கேள்வியான "How old are you?" என்பதற்கு நான் உட்பட பலர் "I am twelve years old" என்று பாடமாக்கி பதிலளித்த ஞாபகம். நாங்கள் (ஆண், பெண் இருபாலாரும்) பொதுவாக வயதுக்கேற்ற வளர்ச்சியற்றவர்களாகவோ அல்லது வயதுக்கேற்ற வளர்ச்சியுடைவர்களாகவோ இருந்தோம். ஆனால், வயதுக்கு மீறிய வளர்ச்சியுடையவளாக அம்பாலிக்காக்கா இருந்தாள்.

நாங்கள் தவ்வல்களாக மட்டுமல்ல பேய்க் குஞ்சுகளாகவும் இருந்தோம். அம்பாலிக்காவின் அங்க மாற்றங்கள் தொடர்பாக நிறையச் சந்தேகம் கொண்டவர்களாக இருந்தோம். வரது எங்கள் சந்தேகங்களை தீர்த்து வைக்கக் கூடியவனாக இருந்தான். "அம்பாலிக்கா சாமத்தியப் பட்டுவிட்டாள். அதுதான் அவளுக்கு நெஞ்சு பெருத்திருக்குது" அவன் வார்த்தைகள் அவனுக்கு "விசயம் தெரிந்தவன்" என்ற அந்தஸ்த்தை எங்களால் கொடுக்கச் செய்தன.வரது அம்பாலிக்காவின் கவனத்தை தன்மீது திருப்பிவிட முயற்சி செய்வான். அவன் அவ்விதம் முயற்சி செய்த போதிலும் தோற்றத்தில் எங்களைப் போல் தவ்வலாகவே இருந்தான்.

எங்கள் வகுப்பறை அழுக்கு நிறைந்தது. தரையில் அங்கங்கே பாளம் பாளமாக வெடிப்புக்கள். சுவர்களில் காகங்களின் எச்சங்கள் காய்ந்தும், காயாமலும், இதைவிடக் கூரைத்தீராந்திகளிலும், கோப்பியங்களிலும் வெள்ளை வெள்ளையாய் வடிந்து போயிருக்கும் காக எச்சங்கள் அருவெருப்பினை ஊட்டத்தக்கன. நாங்கள் அநேகமாக வெறுங்காலுடனே பாடசாலைக்குப் போவோம். அம்பாலிக்கா மாத்திரம் வெள்ளைச் சப்பாத்துக்களுடன் வருவாள். வரது கறுத்தச் சப்பாத்துக்களுடன் வருவான்.

கந்தையா மாஸ்டரின் அறிவியல் வகுப்பு என்பது அந்தப்பாட வேளையின் ஒவ்வொரு கணமும் வயிற்றைக் கலக்கும் கணங்களாகவே கழியும். ஏனெனில், கந்தையா மாஸ்ரர் நாங்கள் அனைவரும் குதிரைகளாக இருக்க வேண்டும் என எதிர்பார்த்தார். குதிரைகளாக இருத்தல் என்றால் அவருடைய பாடவேளையில் பராக்குப் பார்த்தல் அறவே கூடாது என்பதாகும். அவருடைய பாடம் முடியும் வரைக்கும் சூழ்நிலையைக் கவனிக்காமல் பக்கத்தில் இருக்கும் சச்சியிடமோ, பிரதீபனிடமோ எதுவும் கதைக்காமல் அவரையும் கரும்பலகையையும் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருத்தல் வேண்டும். எங்களால் பெரும்பாலும் அவருடைய பாடவேளையில் குதிரைகளாக இருக்க முடிவதில்லை. குதிரைகளாக இருக்காத எவனும் அல்லது எவளும் அவருடைய கண்ணாடிபோட்ட கண்களுக்கு சிக்காமல் இருக்க முடிவதில்லை. இந்த அடிப்படையிலே நான், சச்சி, பிரபன், கோபன், வரது, என்று பலரும் அவரது மணிக்கூடு இல்லாத கையினாலோ, வறுத்தலைக்கம்புகளாலோ விளாசப்பட்டிருக்கிறோம். நாங்கள் ஒரு போதும் வகுப்பில் கந்தையா மாஸ்ரர் சிரித்ததைக் கண்டதில்லை. அவர் ஒரு அயோக்கியன் (Villain) பாத்திரமேற்று நடிக்கப் பொருத்தமானவராக இருந்தார். இதனால் 'வரது' அவருக்கு 'செந்தாமரை' என்று பட்டம் வைத்தான்.



கந்தையா மாஸ்ரர் ஒரு முறை நாய்களின் பண்புகளை விபரிக்கும்படி கேட்டுக் கொண்டார். அன்றைய தினம் அவருடைய பாடம் இருபாட வேளைகளைக் கொண்டிருந்தது. இதனால் நான் வேணு, பிரபன், சச்சி, கோபன் ஆகிய எல்லோரும் வசமாக மாட்டிக் கொண்டோம்.

"வரிசையாக எல்லோரும் வந்து கரும்பலகைக்கு முன்னால் நிண்டு நீங்கள் எழுதின நாய்களின் பண்புகளை விபரிச்சுப்

## சுதாரஞ்சன்

போட்டுப் போங்கோ" கந்தையா மாஸ்ரர் கருணையில்லாமல் இவ்விதம் சொன்னதாக அப்போது எங்களுக்குத் தோன்றிற்று. அவர் நாய்களின் பண்புகளைப் பற்றி முன்னரே படிப்பித்திருந்தார். ஆனால், விளக்கக் குறிப்புகள் எதனையும் தந்திருக்கவில்லை. அதனால் நாய்களைப் பற்றிச் சிந்தித்து புதிய புதிய பண்புகளையெல்லாம் புனையத் தொடங்கினோம்.

நாய்களின் பண்புகளை விபரிக்கும் முதலாவது பிரதிநிதியாக வரது எழுந்தான். நாங்கள் எல்லோரும் இன்னமும் பய உணர்வு நீங்காதவர்களாக அவன் விபரிப்பைக் கேட்கத் தயாரானோம். அவன் விபரிக்க ஆரம்பித்தான்.

"நாய்கள் பேய்கள், பிசாசுகள், இரத்தக் காட்டேரிகள், சுடலைமாடன்கள், எறிமாடன், பூதங்கள், இன்னபிற துர்தேவதைகளைக் கண்களால் பார்த்தறியக் கூடியவை. இவற்றைத் தம் கண்களால் பார்த்தறியும் போதெல்லாம் அவை மோசமாகப் பயமடைகின்றன. அதன் காரணமாக அவை மோசமாகக் குரைக்கின்றன." வரது வாசித்து முடிக்கு முன்பே கந்தையா மாஸ்டரின் கையில் இருந்த வறுத்தலைக்கம்பு அவனை விளாசத் தொடங்கியது. அவன் வேதனை தாங்காமல் நெளிந்தான். எங்களுக்கோ சிரிக்க முடியாத நிலை. நான் இத்தகையதொரு பண்பினை கொப்பியில் எழுதியிருக்கவில்லை.

"இதென்னடா அறிவிலி வகுப்போ? அறிவியல் வகுப்போ?" அவர் பலமாக உறுமினார். வரதுவுக்குப் பிறகு அவர் எவரையும் நாய்களின் பண்புகளை விபரிக்க கரும்பலகைக்கு முன்னால் வரும்படி பணிக்கவில்லை. மாறாக ஒவ்வொருத்தரினதும் கொப்பிகளை வாங்கிப் பார்க்க ஆரம்பித்தார். பெண் பாகுபாடின்றி கைகளிலும், முதுகுகளிலும் வறுத்தலை விளாசல் நடந்தது. விளாசல் முடிந்த பிறகு "நான் கரும்பலகையில் எழுதுற பண்புகள் எல்லாத்தையும் எல்லோரும் உங்கட கொப்பியில் பத்துத்தரம் திருப்பித் திருப்பி எழுதி எனக்கு நாளைக்குக் காட்டவேணும்." சரியான கோபத்தோடு குரலில் நடுக்கத்தைக் கலந்து கட்டளையிட்டார். அவர் முதலில் எழுதிய பண்பு "நாய்கள் நிறக்குருடுகள். அவை நிறங்களை வேறுபடுத்தி உணர முடியாதவை" அதன் பின்னர் எழுதிய பண்புகள் எல்லாம் மறந்து போய் விட்டன.

தூரத்தில் நாய்கள் குரைக்கும் சத்தம் தெளிவாகக் கேட்கிறது. நாய்கள் பல காரணங்களுக்காகக் குரைக்கக் கூடியவை. இருள் செறிந்து போயிருக்கும் இந்த நடு இரவு நேரத்தில் எதற்காகக் குரைக்கின்றன. ஒரு வேளை அடையாளங் காண்பதற்காக ஆட்களை அழைத்துச் செல்ல பூதங்கள், பிசாசுகள் இரத்தக் காட்டேரிகள், சுடலைமாடன், எறிமாடன்கள் என விதவிதமான துர்தேவதைகள் வீதியெங்கும் உலாவரத் தொங்கி விட்டனவோ...?

இவ்விதம் நிலக்கறையான்களில் கிரீச்... என்ற ஒலியும், சில்வாண்டுகளின் ரீங்... ரீங்காரமும் நிறைந்த இருள் கவிந்து கொண்டிருக்கும் இரவுகளில் நாய்கள் குரைக்கின்ற போதெல்லாம் பூதங்களோ, பிசாசுகளோ, இரத்தக் காட்டேரிகளோ, சுடலைமாடன், எறிமாடன், என்பனவோ உலா வந்திருக்கின்றன. அப்படியில்லை எனில், வ்ரது எங்கே போனான்? அம்பாலிக்கா என்ன ஆனாள்? கோபன், பிரபன், சச்சி, இவர்கள் எல்லாம் எங்கே? இந்த துர்தேவதைகள் வந்து அழைக்கும் போது வரமுடியாது என்று சொல்லும் துணிவு எவருக்குமில்லை. இந்த இரவில் என்னைக் கூட துர்தேவதைகள் வந்து அழைக்கலாம். வந்து அழைத்தால் நான் கைகட்டிப்பின் செல்லக் கடமைப்பட்டுள்ளேன். என்னை என்ன செய்வது என்பதை அவை தான் கலந்து தீர்மானிக்கும்.

அவை என் கழுத்தை நெரிக்கலாம். இரத்தம் குடிக்கலாம். என் கைகால்களை படபடவென முறிக்கலாம். அடையாளம் தெரியாமல் மடக்கிப் புதைக்கலாம். என்னை என்ன செய்வதென்பதை அவை தான் கலந்து தீர்மானிக்கும். அவை எது செய்தாலும் நான் வாய் திறக்காமல் இருக்க கடமைப்பட்டுள்ளவன். ஏனெனில், அவை எங்களின் ஆக்கிரமிப்பு சக்திகள். தவிரவும் இந்தத் துர்தேவதைகளை விரட்டியடிக்கக் கூடியவர்கள் இல்லாமல் போய்விட்டனர். அதனால், இரவுநேரமெல்லாம் அவை கண்டபடி அலைந்து திரிந்து என் போன்றவர்களை பேய்விரட்டிகள் எனச்சந்தேகப்பட்டு அழைத்துச் செல்கின்றன. இவ்விதமே முதலில் வரது அடுத்து அம்பாலிக்கா பிறகு முகம் மறந்து போன என்வகுப்புப் பெண்கள் (பெட்டைகள்) தொடர்ந்து கோபன், பிரபன், சச்சி, வேணு... என்று தொடர்ச்சியாய் இவர்களைப் 'பேய்விரட்டிகள்' எனச் சந்தேகப்பட்டு இந்தத் துர்தேவதைகள் அழைத்துச் சென்று அடையாளம் இல்லாமல் செய்து விட்டன.

இப்போது நானும் இன்னும் சிலரும் மிஞ்சிப்போய்... நாய்கள் குரைக்கின்றன. குரைப்பொலி மிக அண்மையில் கேட்கிறது. ஒரு வேளை அவை என்னையும் 'பேய் விரட்டி' என்று நினைத்து அழைத்துச்செல்ல வந்து விட்டனவோ, அல்லது மிஞ்சியுள்ளவர்களை...? யாரை அழைத்துச் செல்வதென்பதையும் அவையே தீர்மானிக்கின்றன. இந்த இறுதி வேளையிலும் பல நினைவுகள் சந்தேகங்களுடன், அழுக்கு நிறைந்த வகுப்பறை, பன்னிரண்டு வயதிலும் நானும், வரதுவும், கோபனும், பிரபனும், சச்சியும், வேணுவும் தவ்வல்களாகவே இருக்கிறோம். அம்பாலிக்கா மட்டும் அளவுக்கு மீறிய வளர்ச்சியுள்ளவர்களாக இருக்கிறாள். கரும்பலகைக்கு முன்னால் கந்தையா மாஸ்ரர். அவர் இடக்கையில் மணிக் கூடில்லை. வலக்கையில் வறுத்தலைக்கம்பு இருக்கிறது. அவர் நாய்களின் பண்புகளை கரும்பலைக்கு முன்னால் வந்து விபரித்துவிட்டுச் செல்லும்படி எங்களைப் பணிக்கிறார். வரது எழுந்து போய், நாய்களின் பண்புகளை விபரிக்க ஆரம்பிக்கிறான், "நாய்கள் குரைக்கின்றன. இவை துர்தேவதைகளைக் கண்ணுற்ற போதெல்லாம் மோசமாகக் குரைக்கின்றன.

கந்தையா மாஸ்ரர் அவனை வறுத்தலைக் கம்பினால் விளாசுகிறார்.

அவர் ஏன் அவனை விளாச வேண்டும்?

அவன் விபரித்த நாய்களின் பண்பில் என்ன தவறு இருக்கின்றது?

நாய்கள் நிறக்குருடுகளாயின் பச்சை, மஞ்சள், நரைமஞ்சள், மண்ணிறம் இன்னும் பல்வேறு பயம் தரும் வர்ணங்களில் உள்ள இத்தகைய துர்தேவதைகளையும், பூதங்களையும் எவ்விதம் இனங்கண்டு கொள்ள முடியும்?

என் கேள்விகளுக்கு பதில் தருவதற்கு கந்தையா மாஸ்ரும் உயிரோடு இல்லை. நாங்கள் குரைக்கின்றன. அதுவும் என் வீட்டுப் படலையடியில் மோசமாகக் குரைக்கின்றன. நான் எதையும் சிந்திக்க முடியாதவனாய் இருக்கிறேன். மீண்டும் என் நினைவுத் திரையில் நிழற்படமாக வரது, அம்பாலிக்கா, என் வகுப்புக்கார முகம் மறந்து போன பெட்டைகள், வேணு, பிரபன், சச்சி, கோபன்...!?

நன்றி - நூலகத்திட்டம்




-ஜெபா- (பிரான்ஸ்)

# "ஊடாக"
## பழங்குடி மக்களின் வாழ்வின் ஊடான ஒரு பதிவு

இதுவரை வந்திருக்கின்ற குறும் படங்களிற்குள் ஒரு தரமான பேசப்படக் கூடிய படமாக வெளிவந்திருக்கிறது சிவகாமியின் "ஊடாக" என்னும் குறும்படம். பார்வையாளர்களிற்கு கதை சொல்வதாக இருக்கும் முறைகளில் இருந்து வேறுபட்டு பார்வையாளர்களும் படத்தோடு சேர்ந்து கதையைத் தேடவைக்கின்ற உத்தியுடன் நகர்கிறது இவ்விவரணப்படம்.

27 நிமிடங்கள் கொண்ட இப்படம் ஏறத்தாழ முழு நகர்வும் காட்சிப்படுத்தலாக அதாவது உரையாடல் இல்லாது (மிகக் குறைவாக) இருக்கின்றது. படத்தினை பாச்சலூார் பழங்குடி மக்களிற்கு சமர்ப்பணம் ஆக்கியிருக்கும் சிவகாமி பழங்குடி மக்களின் வாழ்க்கை முறையை, அவர்கள் இயற்கையோடு ஒன்றி வாழ்வதை அழகாகப் படமாக்கியிருக்கிறார். விஞ்ஞான வளர்ச்சியினால் அதிவேகமான பாய்ச்சலுடன் வாழும் மக்களின் இயந்திரத் தன்மையான உலகிற்கும், பழங்குடி மக்களின் வாழ் நிலைக்கும் இடையில் இருக்கின்ற இடைவெளியைத் தான் படம் அதிகமாகப் பேசுகின்றது.

பறவைகள், காட்டுப் பெரு மரங்கள், பூக்கள் போன்றவற்றின் அசைவுகளை ரசனையுடையதாகக் காட்சிப் படுத்திவிட்டு, மலைக் காடுகள் சுற்றிவர உள்ள பழங்குடி மக்களின் வசிப்பிடத்திற்குள் நாசர் நாகரீகமான ஆடைகளுடன் (ஜீன்ஸ், சேர்ட் தோளில் பயணப் பை) நடந்து வருவதுடன்



தங்கர் பச்சான்

படம் ஆரம்பிக்கின்றது. நாசரின் நடை, உடை ஆகியவை அந்தப்பழங்குடி மக்களிற்கு முற்றிலும் அந்நியப்பட்டதாக காட்டப்படுவது தெரிகிறது.

நாசர் நடந்து வந்து ஒரு மரத்திற்கு கீழே நிற்க அந்த மரத்தில் உள்ள இலையின் நுனியில் இருந்து ஒரு நீர்த்துளி அவரது கையில் விழுகிறது. துளி பட்ட இடம் நனைந்த ஸ்பரிசத்தால் நிமிர்ந்து மேலே பார்க்கிறார். எல்லாமே பச்சைப் பசேலாகக் காட்சியளிக்கிறது. உயர வளர்ந்த மரங்கள், விட்டுவிட்டுப் பறக்கும், பறவைகள், மணற்குவியல்கள், பறவைகளின் இனிமையான ஒலிகள் ஆகியவற்றை ரசித்துக் கொண்டு வருகிறார். பின் நவீன ஓவியங்கள் விற்கும் கடையிற்குள் நுழைந்து அங்குள்ள ஓவியங்களைப் பார்வையிட்டு அதில் ஒன்றை விலைபேசி வாங்கிக் கொண்டு வரும் போது சைக்கிளில் போகும் ஒருவன் அவ்வோவியத்தை எதேச்சையாகத் தட்டி விட்டுப்போக, அது நிலத்தில் விழுந்து நிறங்கள் மறைந்து வெறும் வெள்ளைக் காகிதமாகிறது. நாசர் அதைப் பார்த்து விட்டு நிமிர்ந்து பார்க்க மேலே பறவைகள் அழகாகப் பறக்கின்றன.

விழுந்த் ஓவியத்தை ஏன் வெள்ளை நிறமாக அழிந்து போகும்படி காட்டுகிறார் சிவகாமி? அதேநேரம் நாசரும் நிமிர்ந்து மேலே பார்ப்பது போன்றவற்றைக் கவனித்தால் செய்கையானவை எவையும் நிலையில்லாதவை, எந்த நேரமும் அழிந்து போகக் கூடியவை என்பதை அதாவது உண்மையில்லாத பொய்த் தன்மையை உணர்த்துவதாக அமைகிறது. இயற்கையின் உண்மைத் தன்மை தெளிவாகக் காட்டப்படுகிறது அங்கே.

அதனைத் தொடர்ந்து அந்தக் காட்டிற்குள் வாழும் மக்களின் வாழ்நிலையை அவதானித்துக் கொண்டு வருவதாக காட்டி அவர்களின் ஒவ்வொரு அசைவுகளையும் காட்சிப்படுத்துகிறார் சிவகாமி. தோளில் குரங்குடன் ஒருவன் நடந்து வருதல், மரமேறுபவன், நிலக் குழியில் நெல்லு குற்றும் பெண், குடிசைகள், சுற்றியிருக்கும் மலைகள், பறவைகள், தோட்டத்தில் வேலை செய்யும் பெண்கள், வெற்றுத் தரையில் படுத்திருக்கும் குழந்தை, அந்தக் குழந்தை துாங்குவதற்கு தாலாட்டுப் பாடும் தாய், நிலத்தில் கொட்டப்பட்ட சோற்றினைத் தின்னும் நாய், சுருட்டுப் புகைத்துக் கொண்டிருக்கும் வயோதிபர், சிரித்த முகத்துடன் இருக்கும் ஒரு பெண் குழந்தை, காட்டிற்குள் பெரும் இரைச்சலுடன் முறிந்து விழும் மரங்கள், உடுக்கு அடிக்கும் பெண் குழந்தை என்று எல்லாவற்றையும் காட்சிப் படுத்தி விட்ட முடிவில் அந்த இனிய ரசனைகளுடன் நாசர் ஒரு சிறிய தேநீர் கடையில் வந்து அமர்ந்து கொண்டு, தேனீர் கடைக்காரனுடன் உரையாடுகிறார்.

*கடைக்காரன்(கடைக்கு அருகில் போகும் ஒருவனைக் காட்டி):*

*"இதில போறானே*
*கந்து வட்டி...,*
*பஞ்சாயத்து பண்றன்*
*என்று விட்டு*
*ரெட்டைக்குழல்*
*துப்பாக்கியை மடியில*
*கட்டிக்கிட்டு சினிமா*
*ஓட்டிக் காட்டுவான்".*

*நாசர்: "இவன் கிட்ட யார் கடன் வாங்குவாங்க?"*

*கடைக்காரன்: "வேற யாரு. சோத்துக்கு வழியில்லாத ஆதிவாசிங்க தான். நுாத்துக்கு முப்பது வட்டி. வட்டி குடுக்காட்டி கச அடி. அசல வாங்காம மனுசன சாகவிட மாட்டான்".*

தேநீரைக் குடித்து விட்டு நாசர் வெளியில் வர கந்துவட்டிக்காரன் ஒருவனுக்கு சாட்டையால் அடித்துக் கொண்டிருக்கிறான். இந்த நிகழ்வை ஒரு சாமியார் தனக்குத்தானே சவுக்கால் அடிப்பதை முன்னிறுத்திப் பார்க்கிறார் நாசர். அவரால் சவுக்கடி என்பதை இவ்வாறு தான் கற்பனையாக நினைக்க முடிகிறது. பக்கத்தில் அடிவாங்குபவனின் மகள் தகப்பனை பரிதாபத்துடன் பார்த்தபடி நிற்கிறாள். கந்துவட்டிக்காரன் அடித்துவிட்டுப் போக அடிவாங்கியவனின் மகள் தனது இயலாமையை ஒரு காட்டுக் குருவி கத்தும் சத்தத்தோடு சேர்ந்து அந்தக் குருவியின் ஓசைக்கு ஏற்றாற்போல கத்தி வெளிப்படுத்துகிறாள்...

*....கந்துவட்டி....*
*...இரு...*
*...தர்ரேன்...*
*...பொறு...*

அந்தக் குருவியே கந்துவட்டிக்காரனுக்கு பதில் சொல்வது போல் அமைந்திருக்கிறது. அவற்றைப் பார்த்துக் கொண்டிருந்த நாசரும், பின்பு அந்தக் குருவியோடு சேர்ந்து தன்னுடைய கோபம் தணிய அதேபோல் கத்திவிட்டு செல்கிறார்.

ஒரு பெரிய நீர் தேங்கியிருக்கும் குட்டையில் பூச்சிகள் ரீங்காரத்துடன் மொய்க்கும் அழகைப் பார்த்துக் கொண்டு வந்து ஒரு மரக்கொட்டில் இருந்து வழியும் நீரை ஏந்திப் பருகிவிட்டு மலையின் உயரமான பகுதிக்கு ஏறுகிறார். அங்குள்ள மரத்தில் இருந்து பூக்கொத்தைப் பிடுங்கி எடுத்து உலுப்ப அப்பூக்கள் நாலா பக்கமும் சிதறி காற்றில் பஞ்சாகப் பறக்கிறது. பின் கீழே இறங்கி நடந்து வரும் போது காலில் தட்டுப்பட்ட ஒரு பிளாஸ்டிக் தட்டை எடுத்து முன்னும் பின்னும் பிரட்டிப் பார்த்து கோபத்துடன் எறிந்து, கையில் இருந்த தடியால் குத்தி உடைத்து நிலத்தினுள் புதைத்து காணாமல் செய்து விடுகிறார்.

இந்தக் காட்சிப்படுத்தலானது நவீன பொருட்களின் அத்துமீறிய நுழைவை அந்தப் பழங்குடி மக்களின் எல்லைக்குள் மறுப்பதாகவும், முன்னர் நவீன ஓவியம் அழிந்து போகும் காட்சியுடன் ஒன்றாக்கிப் பார்க்க அம்மக்களின் வாழ்நிலையின் அர்த்தப்படுத்தலையும், அதற்கு இடையூறானவற்றை நிராகரிப்பதுமே படத்தின் முக்கிய கருப்பொருளாகவும் காண முடிகிறது.

| |
|---|
| படம்: ஊடாக |
| கதை: சந்துரு |
| தயாரிப்பு: கனவு |
| கமரா: தங்கர் பச்சான் |
| இசை: இளையராஜா |
| எடிட்டிங்: பி.லெனின், வி.டி.விஜயன் |
| திரைக்கதை, இயக்கம்: சிவகாமி |

அதற்கு ஊடாகவே பழங்குடி மக்களின் வாழ்முறையை படமாக்கியிருக்கிறார் சிவகாமி.

இரவு கந்துவட்டிக்காரன் முன்னிலையில் அங்குள்ள மக்கள் கூடியிருந்து அவனுக்கு நடன விருந்து அளிக்கிறார்கள். பெரு மரக்குற்றிகளை வைத்து தீ மூட்டி அது கொழுந்து விட்டெரியும் வெளிச்சத்தில் நடனம் நடை பெறுகிறது. எல்லோரும் இசைக்கேற்ப ஆடுகிறார்கள். கந்துவட்டிக்காரன் முகத்தில் மட்டும் பூரிப்பு. மற்றவர்கள் முகங்கள் இறுகிப் போய் இருக்கின்றன. நாசரும் அந்தக் கூட்டத்தில் அமர்ந்து நடப்பவற்றை அவதானிக்கிறார். பெண்கள் சோடி சேர்ந்து ஆடுகிறார்கள். ஆடும் இசைக்கேற்ப நாய் ஒன்று தனது வாலை ஆட்டுகிறது. பூமரங்கள் அசைந்து காட்டுகிறது. சிறுவர்களும் பெரியவர்களும் விறைத்த முகத்துடன் அசையாமல் அந்நிகழ்வைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆட்டம் அதி உச்ச நிலைக்கு வேகப் படுத்தப்பட்டு முடிவடைகிறது. கந்துவட்டிக்காரன் சிரித்தபடி இருக்கிறான்.


இவர்கள் கந்துவட்டிக்காரனுக்கு அடிமையாகி அவனை எதிர்த்து எதுவுமே செய்ய இயலாததை, 'ஒருவன் நடனமாடிக் கொண்டே தனக்குத்தானே சாவுக்கால் அடித்து, விழுந்த அடிகளால் வெடித்துக் கிளம்பிய தசைத் துண்டுகளைப் பிய்த்தெடுத்து கந்துவட்டியின் முகத்தில் எறிவது போலும், அவை அவனது முகத்தில் பட்டுத் தெறித்து நெருப்பிற்குள் விழுந்து கருகுவது' போலும் நினைக்கின்றார் நாசர்.

அதாவது அவர்களது உடல்தானே உனக்கு வேணும். மாமிசப் பட்சியே எடுத்துக் கொள் என்பது போல் அமைகிறது இந்தக் கட்டம்.

கொடுமையிலும் கொடுமையான நடன நிகழ்வையும் பார்த்த முடிவில் அந்தக் கிராமத்தை விட்டு வெளியே போகும் நாசர் திரும்பவும் நின்று ஒரு முறை அந்த அழகான கிராமத்தைப் பார்ப்பதோடு படம் முடிவடைகிறது.

நாசரை பழங்குடி மக்களின் எல்லைக்கு ஊடாக நகர்த்தி அவர்களின் அன்றாட வாழ்வின் ஒவ்வொரு அசைவுகளையும், பார்வையிட வைப்பதன் மூலம் பார்வையாளர்களிற்கு காட்சிப்படுத்தி இருக்கிறார் சிவகாமி. ஒரு மனிதனின் மனநிலையை அந்த மக்களின் வாழ்வின் ஊடாக கொண்டு சென்று அவர்களின் மீதான அக்கறையை ஏற்படுத்தி இந்த உலகில் அவர்களது இருப்பின் அர்த்தப்படுத்தலை நிகழ்த்தியிருக்கிறார். அவர்களின் வாழ்வியல் தத்துரூபமாக அன்றாட வாழ்வியலின் சம்பவங்களுடன் உணர்வு பூர்வமாக படமாக்கப்பட்டிருகின்றது. பழங்குடி மக்களின் வாழ்க்கையை அர்த்தபூர்வமாக புரிந்து கொள்ளாமல் 'ஊடாக' படத்தை புரிந்துகொள்வது என்பது கடினமானது. புரிந்து கொள்ள முடியாது என்றே நினைக்கின்றேன்.

அடுத்து இளையராஜாவின் இசை படத்தின் இயற்கை ஒலிகளுக்கு ஏற்றாற்போல் இருப்பதால் படத்துடன் மிகவும்



இளையராஜா

நெருங்கிப் போகவைக்கிறது. இதில் தாலாட்டுப் பாடல் ஒன்றை சிவகாமியே பாடியிருக்கிறார். இதைவிட சந்துரு, தங்கர்பச்சன், லெனின், நாசர் என மிகப்பெரிய பிரபலயங்களுடன் படம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரபலங்கள் எதற்காக என்று சிவகாமியிடம் கேட்ட போது எல்லோரும் பணம் வாங்காது உதவி செய்ததாகவும், நாசரை நடிக்க வைத்தது கால விரயம் இல்லாது முடிக்கலாம் என்று நினைத்ததாலுமே என்று கூறினார். இன்றைக்கு கோடி கோடியாய் பணத்தைக் கொட்டி மசாலாப் படம் பண்ணிக் கொண்டிருக்கும் கோடம்பாக்கம் தவிர்த்து, மேலே குறிப்பிட்ட பிரபலங்கள் ஏதாவது சாதித்துக் கொண்டுதானிருக்கிறார்கள். அந்த வகையில் 'ஊடாக' படத்தின் முக்கியத்துவம் அறிந்து சிவகாமிக்கு உதவி செய்தது பாராட்டப்பட வேண்டிய விடயம். எல்லாவற்றையும் விட பழங்குடி மக்கள் பற்றிய ஒரு கரிசனையை பார்வையாளர்களிற்கு படமாக்கியிருக்கும் சிவகாமிக்கு பாராட்டுக்கள்.

நாசர் நடந்து வந்து ஒரு மரத்திற்கு கீழே நிற்க அந்த மரத்தில் உள்ள இலையின் நுனியில் இருந்து ஒரு நீர்த்துளி அவரது கையில் விழுகிறது. துளி பட்ட இடம் நனைந்த ஸ்பரிசத்தால் நிமிர்ந்து மேலே பார்க்கிறார். எல்லாமே பச்சைப் பசேலாகக் காட்சியளிக்கிறது. உயர வளர்ந்த மரங்கள், விட்டுவிட்டுப் பறக்கும், பறவைகள், மணற்குவியல்கள், பறவைகளின் இனிமையான ஒலிகள் ஆகியவற்றை ரசித்துக் கொண்டு வருகிறார். பின் நவீன ஓவியங்கள் விற்கும் கடையிற்குள் நுழைந்து அங்குள்ள ஓவியங்களைப் பார்வையிட்டு அதில் ஒன்றை விலைபேசி வாங்கிக் கொண்டு வரும் போது சைக்கிளில் போகும் ஒருவன் அவ்வோவியத்தை எதேச்சையாகத் தட்டி விட்டுப்போக, அது நிலத்தில் விழுந்து நிறங்கள் மறைந்து வெறும் வெள்ளைக் காகிதமாகிறது. நாசர் அதைப் பார்த்து விட்டு நிமிர்ந்து பார்க்க மேலே பறவைகள் அழகாகப் பறக்கின்றன.

நன்றி - நூலகத்திட்டம்



## சியாம் செல்வத்துரையின் Funny Boy 'விசித்திரமான பையன்'



# பன்றிகளுக்குப் பறக்க முடியாது (10)

நான் ஜானகியின் அறையில் சுற்று முற்றும் பார்த்தேன். தொக்கையம்மா அதை அங்கு தான் எங்காவது ஒழித்து வைத்திருக்க வேண்டும். வேறு எங்கேயும் வைக்க இடமில்லை. ஜானகியின் கட்டில் மெத்தையையும் உயர்த்திப் பார்த்தேன். அதன்கீழ் எதுவும் இருக்கவில்லை. ஒன்றிரண்டு சிங்கள 'கொமிக்' புத்தகங்கள் மட்டும் இருந்தன. பிறகு, ஜானகியின் சூட்கேசைத் திறந்து அதில் அவள் அழகழகாக மடித்து அடுக்கியிருந்த அவளது உடைகளை ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்தேன். ஒரு நிழல்போல அமைதியாக தொக்கையம்மா அறைக்குள் நுழைந்தாள். அவள் வந்ததைப் புரிந்து கொண்டு நான் திரும்பினேன். ஆனால், நான் பிந்திவிட்டேன். அவள் சேலையை ஒழித்து வைத்திருந்த தட்டிலிருந்து அதை எடுத்துக் கொண்டு கதவுப் பக்கமாக ஓடினாள். சூட்கேசை அப்படியே திறந்தபடி விட்டு விட்டு நான் அவளைக் கலைத்துக் கொண்டு ஓடினேன். அவள் சேலையைத் தனது நெஞ்சுடன் சேர்த்துப் பிடித்தபடி குசினிக் கதவை நோக்கி ஓடினாள். அதிர்ஷ்டவசமாக சோனாலியும் லக்ஷ்சுமியும் அவளைப் போகவிடாமல் மறித்தனர். நான் தனக்குக்கிட்ட வருவதைக் கண்ட அவள் தலைவாசலிலிருந்து கீழே குதித்து வீட்டின் முன்பக்கமாக ஓடத் தொடங்கினாள். நானும் தலை வாசலிலிருந்து குதித்து அவளைப் பின்னால் துரத்தினேன். அவள் முன்னுக்குப் போய் விட்டால், நேரடியாக அம்மாச்சியின் அறைக்குள் நுழைந்து விடுவாள்.

அவள் முன் வீட்டுக்கான பாதையை அண்மித்ததும் அண்மிக்காததுமாக எட்டி அவளது கையில் பிடித்துக் கொண்டேன். அவளால் ஒன்றும் செய்ய முடியாமற் போகவே திரும்பி என்னைத் தாக்கினாள். அவளை கீழே தள்ளி சேலையின் ஒரு பகுதியைப் பிடித்துக் கொண்டேன். அவள் அதை என்னிடமிருந்து பிடுங்குவதற்காக இழுத்தாள். ஆனால், நான் பலமாகப் பிடித்திருந்தேன். கத்திக் கொண்டு அவள் தனது உடம்புப்பாரம் முழுவதையும் கொடுத்து என்னிடமிருந்து அது பிடுங்கப்பட்டுவரும், என்ற நம்பிகையுடன் சுண்டி இழுத்தாள். நான் பிடியை விடவில்லை. ஆனால், 'டர்...' என்ற சத்தத்துடன் சேலை கிழியத் தொடங்கியது.

நான் இழுப்பதை நிறுத்துமாறு அவளை ஏசினேன். ஆனால், அவள் உன்னி உன்னி இழுத்தாள். சேலை முழுதாகக் கிழிந்து இரண்டு துண்டானது. ஒருகணம் பெரும் அமைதி நிலவியது. எனது கையிலிருந்து கிழிந்த சேலைத் துண்டை நான் பார்த்தேன், அதன் நீண்ட கிழயல் ஓரத்திலிருந்து அதிலிருந்து வெளியே தொங்கிக் கொண்டிருந்தன. பிறகு, கடும் கவலையுடன் அவளை நெருங்கி அவளது தலைமுடியைப் பற்றி இழுத்தேன். அவள் பயந்துக் கத்தினாலும் அவளால் என்னை வெல்ல முடியவில்லை. அவளது தலையை ஒரு புறமாக தோளை முட்டுமளவுக்கு நன்றாக இழுத்தேன. அவள் இன்னும் பலமாகக் கத்தியபடி என்னை எதிர்த்துத் தாக்கினாள். எனது வயிற்றை அவளது விரல்கள் இறுக்கிக் கிள்ளின.

**தமிழில்:**
**எஸ்.கே.விக்னேஸ்வரன்**

இதனால் எனது பிடியை ஓரளவுக்கு தளர்த்திக் கொள்வதில் அவள் வெற்றி பெற்றாள்.

அவள் தலைவாசலை நோக்கி அம்மாச்சியையும், ஜானகியையும் அழைத்துக் கூச்சல் போட்டபடி ஓடத் தொடங்கினாள். நான் அவளைத் துரத்திச் சென்று அவள் தலைவாசலை அடையுமுன்பாக அவளது சட்டையின் கையைப் பிடித்தேன். அவள் என்னிடமிருந்து விடுவித்துக் கொள்ள இழுத்தாள். சட்டைக் கை கிழிந்து பிரிந்து ஒரு முறிந்த கை போலத் தொங்கியது. திரும்பவும் அவள் தப்பிவிட்டாள். படிகளில் தாவி ஏறி குசினிக் கதவுப் பக்கமாக தன்னால் முடிந்தளவு உயர்த்திக் கத்தியபடி ஓடினாள்.

ஜானகி குசினியில் இருந்து வெளியே வந்தாள், அவள் தனது கையை உயர்த்தியபடி யார் முதலில் அகப்படுகிறார் என்று தேடிக் கொண்டு வந்தாள். அவளது கண்ணில் முதலில் பட்டது தொக்கையம்மா தான். ஆனால், அவளது உயர்ந்த தொக்கையம்மாவை அடிக்கவில்லை. அது தாழ்ந்தது. அவள் அந்தக் கையை தனது கன்னத்தில் வைத்து, தொக்கையம்மாவின் கிழிந்த உடுப்பைப் பார்த்துத் திசைத்தவளாய் 'புது அம்மோ!' என்று கத்தினாள்.

இப்போது தொக்கையம்மா அம்மாச்சியைக் கூப்பிடக் கத்தினாள்.

ஜானகி அவசர அவசரமாக அவளருகே போய் 'ஷ்...ஷ்...' என்று அடக்கினாள். ஆனால், தொக்கையம்மா தனது குரலை உயர்த்தித் தொடர்ந்தும் கத்தினாள்.

'என்ன நடந்தது. என்ன நடந்தது' - ஜானகி அமைதியற்றவளாய் அவளிடம் கேட்டாள்.

தொக்கையம்மா என்னைச் சுட்டிக் காட்டினாள்.

"பார் ஜானகி. அந்தப் பெடியன் எனக்கு என்ன செய்திருக்கிறான் என்று" - சொன்னாள் அவள்.

"நான் ஒன்றும் செய்யேல்லை". நான் பதிலுக்கு ஏசினேன். அவள் பிழையை என்னுடைய தலையில் போட முயல்வதால் ஆத்திரமடைந்து.

நான் திரும்பி கிழிந்த சேலை போடப்பட்ட இடத்திற்குப் போய் அதை எடுத்து- வந்து ஜானகிக்குக் காட்டினேன்.

'ஓம்.. இதைக் கிழித்தவள் இவள் தான். ஆனால், இப்ப அவனைப் பிழை பிடிக்கிறாள்' என்று எனக்காகப் பேசினாள் சோனாலி.

"ஓம்... அது அவளின்ரை பிழை தான்" - லக்ஷ்சுமியும் எனக்காகப் பேசினாள்.

இப்போது எல்லாப் பெண்களது குரலும் எனக்கு ஆதரவாக உயர்ந்தன. தொக்கையம்மாவை அவர்களும் குற்றம் சாட்டினர்.

ஜானகி ஏதோ சொல்ல முயன்றாள். ஆனால், யாரும் அவள் சொன்னதைக் கேட்கவில்லை. நாம் எல்லோரும் அவளைச் சூழ்ந்து கொண்டோம். நடந்த சம்பவம் பற்றிய எமது பக்க நியாயங்களைச் சொல்வதற்கு முயல்கையில் தான் சற்று முன்பாகவே குசினி வாசலில் அம்மாச்சி வந்து நின்று கொண்டிருப்பதைக் கண்டோம். திடீரென எதிரியின் துப்பாக்கிச் சத்தம் கேட்டதும் அமைதியடையும் நகரம் போல நாம் எல்லோரும் மௌனமானோம். தொக்கையம்மா கூட மௌனமாகி விட்டாள்.

அம்மாச்சி எங்கள் எல்லோரையும் ஒவ்வொருவராகப் பார்த்தாள். கடைசியாக அவளது பார்வை ஜானகியில் வந்து நின்றது.

"எத்தனை தடவை உனக்குச் சொல்லியிருக்கிறேன் இதுகளைச் சத்தம் போடாமல் பார்க்கச் சொல்லி" அவளது குரல் மிகவும் கடுமையாக இருந்தது.

ஜானகி, எப்போதும் கோபமாக இருப்பாள். இப்போது தண்டனையை எதிர்பார்க்கும் ஒரு குழந்தையைப் போல தனது கைகளைப் பிசைந்தபடி நின்று கொண்டிருந்தாள்.

"நான் சொன்னனான்" - அவள் ஏதோ சொல்ல வாயெடுத்தாள். ஆனால், அம்மாச்சி கையை உயர்த்தி அவளை அடக்கினாள். தொக்கையம்மா திரும்பவும் அழத் தொடங்கினாள். இப்போது அவள் அழுதது வேறெதையும் விடப் பயத்தால் என்று தோன்றியது. அம்மாச்சி அவளைப் பார்த்தாள். அவளது பார்வையைத் திருப்புவதற்காக தொக்கையம்மா கிழிந்த கையை உயர்த்திப் பிடித்தாள்.

"யார் இப்பிடிச் செய்தது" - ஒரு கணத்தின் பின் அம்மாச்சி கேட்டாள். தொக்கையம்மா என்னைச் சுட்டிக்காட்டினாள். அவளது அழுகை சற்றுப் பலத்தது.

அம்மாச்சி என்னை உற்றுப் பார்த்தாள். பின் தமது சுட்டு விரலை என்னை நோக்கி நீட்டி தன் பக்கமாக வரும்படி காட்டினாள்.

"பாருங்கோ" நான் கூறியபடி கிழிந்த சேலையை உயர்த்திக் காட்டிச் சொன்னேன்: "பாருங்கோ அவன் என்ன செய்திருக்கிறான் என்று"

ஆனால், அம்மாச்சி இதற்கு அசைந்து கொடுத்ததாகத் தெரியவில்லை. அவள் தொடர்ந்தும் என்னை வரச் சொல்லி அழைத்தாள்.

நான் அவளைப் பார்த்தேன். அவளது பிரம்பு காற்றில் அசையும் போது எழும் சங்கீதம் எனது காதில் விழுந்தது. அந்தச் சங்கீதத்தைத் தொடர்ந்து விழும் அடி... அதன் பிய்த்து விடுகிற நோவு... எல்லாம் எனக்கும் தெரிந்தது. கூரைமீது ஏறியதற்காக ஒரு முறை தோண்டிக்கு விழுந்த அடிகளும், அவன் இரக்கம் காட்டுமாறு கதறியதும், துன்பத்தால் அவன் சத்தமிட்டதும், பலத்து விம்மியதும் என் கண்முன் தெரிந்தது.

நான் சொல்வதை அவள் நிறுத்த முன்பாக, அம்மாச்சியைப் பார்த்து கோபத்துடன் கத்தினேன். "இது நியாயமில்லை. எதற்காக நான் தண்டிக்கப்பட வேண்டும்?"

"இங்கே வா" - அம்மாச்சி கூப்பிட்டாள்.

"இல்லை. நான் வரமாட்டேன்"

அம்மாச்சி தலைவாசலின் ஓரத்தை நோக்கி நடந்து வந்தாள். நான் பின்னுக்குப் போகவில்லை. அப்படியே நின்றேன்.

"இஞ்சை வாடா.. வம்பன்" அவள் கோபமாகச் சொன்னாள்.

"இல்லை..." நான் பதிலுக்குக் கத்தினேன்.

"நான் உன்னை வெறுக்கிறேன். கிழட்டுக் குண்டு"

மற்றப் பெண்களும், ஜானகியும் எனது துணிச்சலைக் கண்டு திகைத்துப்போய் என்னைப் பார்த்தார்கள். அம்மாச்சி படியில் இறங்கி வரத் தொடங்கினாள். நான் எனது இடத்தில் சில நிமிடங்கள் நின்றேன். ஆனால், பிறகு எனது துணிவு ஆடிவிட்டது. நான் திரும்பி சேலையைக் கையில் பிடித்தபடி பறந்தேன். பின்புறத் தோட்டத்திலிருந்து முன் கேற்றினூடாக வெளியே ஓடினேன். பாதையின் குறுக்காக இருந்த வயலில் பெடியங்கள் இன்னமும் கிறிக்கெற் விளையாடிக் கொண்டிருந்தார்கள். நான் வீதியில் தொடர்ந்து கடலை நோக்கி ஓடினேன். றெயில்வே தண்டவாளங்கள் வந்ததும் சற்று மூச்சு விட்டேன். அவற்றுக்கு குறுக்காக நடந்து, கடற் கரையிலிருந்த பாதைகளின் மேலாகத்தாவி நடந்து, அங்கே ஒரு பாறை மீது உட்கார்ந்தேன். சேலையை எனக்கருகாகக் கீழே போட்டேன்.

"நான் வெறுக்கிறேன். அவர்கள் எல்லோரையும் வெறுக்கிறேன்."

"நான் செத்துப்போனால் நல்லது" என்று எனது மனம் முணு முணுத்தது.

நான் எனது தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டேன். கண்களிலிருந்து விழுந்த முதலாவது கண்ணீர்த் துளி எனது முழந்தாள்களை நனைப்பதை உணர்ந்தேன்.

0 0 0

சிறிது நேரத்திற்குப் பின் நான் அப்படியே வெறித்துப்போய் உட்கார்ந்தேன். கடல் அலைகளின் ஓசை, அவைகள் வந்துவிழும் தாளம் என்பன எனது மனதைச் சாந்தப் படுத்துவதாக இருந்தன. நான் பின்புறமாக இருந்த ஒரு பாறையில் சாய்ந்து கொண்டு அலைகள் வருவதையும் போவதையும் பார்த்துக் கொண்டிருந்தேன். விரைவிலேயே பாறைகளின் சூடு தாங்க முடியாமல் போக செருப்புக்களை கழற்றி விட்டு இறங்கிக் கடற் கரைப்பக்கமாக நடந்து காலில் தண்ணீர் படும் இடத்திற்கு வந்தேன்.

கடலை இந்த நிறத்தில் இதற்கு முன் நான் பார்த்ததில்லை. வழமையாக நாங்கள் கடற்கரைக்கு மாலை நேரங்களில் தான் வருவோம். அப்போதெல்லாம் கடல் நீல நிறமாகவே இருக்கும். ஆனால், இப்போதோ இந்த மதியநேர வெயிலில் அது வெள்ளி நிறமாக மின்னியது. அதன் பிரகாசம் என் கண்களை உறுத்தியது.

மணல் காலை எரித்தது. கடல் அலைகளுக்கு நெருக்கமாக நடந்து அவற்றைக்



⇨

குளிர்வித்தேன். வெளிச்சப் போய்க் கிடந்த கரையைப் பார்த்தேன். வெண்மணல் கிட்டத் தட்ட கடலின் நிறத்திலே இருந்தது. நீண்ட தூரத்தில் தெரிந்த கட்டிடங்கள் கானல் நீர்போல் மின்னி மறைவதாய்த் தெரிந்தன. இந்த நேரத்துக் கடற்கரை, மாலை நேரத்துக் கடற்கரையுடன் பார்க்கை-யில் அந்நியமாகத் தெரிந்தது. மாலை நேரமென்றாலோ இது ஓடுபவர்கள், குதிப்பவர்கள், வியாபாரிகள் என்று பெரும் கூட்டங்களால் நிறைந்திருக்கும். இப்போது கடலும் கரையும் - ஒரு நேரத்தில் மிகவும் பரிச்சயமாக இருந்தவை - ஏதோ ஒரு அந்நிய, எதுவென்று தெரியாத ஒரு தேசத்தில் நான் தற்செயலாக நடந்து கொண்டிருப்பதான உணர்வை ஏற்படுத்தின.

எனக்குத் தெரிந்தது. ஏதோ மாற்றம் நடந்து விட்டது. ஆனால், எப்படி? என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

பேரலைகள், எனது துயரம் பற்றிய அக்கறையற்றவையாய் தம்மை கரையை நோக்கி எறிந்தன. அவற்றின் நுரைகள் முன்னே வந்து ஒலியெழுப்பின. விரைவில் நான் திரும்பி அப்பாச்சி வீட்டுக்குப் போக வேண்டும் என்று நினைக்கும் போதே அம்மாச்சியின் கையில் மெல்லிய பிரம்பு நினைவுக்கு வந்தது. அந்த அடிகள் சிலவேளைகளில் ஜென்ரியன் வைலட் கிறீம் தடவிச் சுகப்படுத்த வேண்டிய அளவுக்கு ஆழமான தழும்புகளை எமது துடைகளின் பின்புறத்தில் ஏற்படுத்திவிடும். அந்தப் பிரம்பு காற்றுக்கு குறுக்காக ஒரு நுளம்பு போல ஹம் பண்ணிக் கொண்டு வருவது பற்றிய நினைவு இப்போதும் அதையிட்டு ஒரு அச்சத்தையே ஏற்படுத்தியது.

பாறையருகில் நான் எறிந்த சேலை விழுந்து கிடந்ததைப் பார்த்தேன். எனக்குத் தெரியும், இனி நான் பெண்களின் உலகத்-துள் நுழைய முடியாது. ஜானகியின் கண்ணாடியின் முன்னால் நின்றபடி என்னில் ஏற்படுத்தப்படும் மாற்றங்களைக் காணமுடி-யாது. இனிமேல் நான் அந்த அறையிலி-ருந்து வந்து தலைவாசல் படிகளில் ஒரு அழகான, உலகிலுள்ள எல்லாச் சௌந்தர்ய-ங்களும் ஒருங்கிணையப் பெற்ற அழகுடன் நடந்துவர முடியாது. இனிவரப் போகும் 'நாட்களைக் கழிக்கும்' ஞாயிற்றுக் கிழமை-கள் சந்தோசம் தரப்போவதில்லை. இனிமேல் அவை முன்பே எதிர்பார்த்துக் காத்திருக்கும் ஆவலுக்குரியவை அல்ல. நான் பெண்களுடைய அணிக்கும், ஆண்களின் அணிக்கும் இடைப்பட்ட ஒன்றாக இருவரது அணியையும் சாராத, இருவராலும் வேண்டப்படாத ஒருவனாக இருப்பேன்...

என்னைக் கவலைப்படுத்தும் விடயங்-களைப் பற்றி நானே சிந்திக்க வேண்டும். சாப்பாடு, தேநீர் வேளைகளில் மற்றப் பெண்கள் தாம் செய்தது பற்றியும், செய்யப் போவது பற்றியும் ஒருவரோடொருவர் பேசிக் கொண்டிருக்கையில், நான் சாப்பாட்டையும், தேநீரையும் அருந்த வழி கண்டுபிடிக்க வேண்டியிருக்கும்.

பரிசுத்த பாத்திமா தேவாலய மணி அடித்தது. அந்த ஒலி என்னைக் கூப்பிடுவது போல இருந்தது. இப்போது அப்பாச்சி வீட்டுக்குப் போகிற நேரம். சாப்பாட்டு மேசையில் நான் இல்லை என்பது இன்-னொரு பிரச்சினையாக மாறும். என்னைத் தேடிவர ஜானகி வெளியே அனுப்பப்ப-டுவாள். பிறகு கிடைக்கப் போகும் தண்டனை இதை விடவும் மோசமானதாக இருக்கும்.

கனத்த இதயத்துடன் நான் கரைக்குத் திரும்பி நடந்தேன். கால் பாதங்களை மணல் சுட்டெரித்தது எனக்குப் பெரிதாகப் பட-வில்லை. செருப்புக்களைப் போட்டுக் கொண்டேன். சேலையை எடுத்துக் கொண்டு பாறையில் ஏறினேன். கடலைக் கடைசியாக ஒரு தடவை நின்று பார்த்தேன். பின்பு தண்டவாளங்களைக் கடந்து ராம-நாயகம் வீதியில் என்னை எதிர்பார்த்தி-ருக்கும் எதிர்காலத்தை நோக்கி நடந்தேன்.

பன்றிகளுக்குப் பறக்க முடியாது

முற்றும்

# ஒரு ஆபிரிக்க பாடசாலை மாணவியின் துயரக் கதை

பாடசாலைகளில் மாணவிகள் ஆசிரியர்களால் பாலியல் தொந்தரவுகட்கும், வல்லுறவுகட்கும் உள்ளாக்கப்படுவது பற்றி இப்போதெல்லாம் அடிக்கடி செய்திகள் வருகின்றன. மாணவர்களை, தமது அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து பாழாக்கும் ஆசிரியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று பெற்றோர்களும் மனித உரிமையாளர்களும் கோரிக்கை விட்ட போதும், இத்தகைய சம்பவங்கள் நடந்து கொண்டே இருக்கின்றன. இங்குள்ள அனுபவம் ஒரு ஆபிரிக்க மாணவியின் அனுபவம். இன்டெக்ஸ் ஒன் சென்சர்ஷிப் (INDEX ON CENSORSHIP) இதழிலிருந்து நன்றியுடன் இதை தமிழில் வாசகர்களுக்காக தருகிறோம். ஒரு சர்வதேசக் கொடுமையாக இன்று இருக்கின்றது என்பதற்கு இது ஒரு சின்ன உதாரணம் மட்டுமே.

"கணக்குப் பாடத்தின் காரணமாக நீ 'பெயில்' பண்ணி விட்டாய்"

"என்ன...? பகிடி விடுகிறாயா நீ?"

"இல்லை.. 'மாக்ஸ் சீற்றைப்' பாரன்"

"இருக்கேலாது. நான் சோதினையில் நன்றாகவே எழுதினேன்."

எனது விடைகளை எனது சினேகிதிக்குக் காட்டினேன்.

"ஆசிரியர் சிலவேளை பிழைவிட்டிருக்-கலாம்... இவ்வளவு பேரின் விடைத் தாள்களையும் திருத்துவதென்றால்...'

ஆனால், அவரால் இப்படிப் பிழைகளை விட முடியாது. நான் இதை அவரிடம் அவருடைய வகுப்பின் போது கட்டாயம் கேட்க வேண்டும்.

அடுத்த முறை எமது கணக்கு வகுப்பில் நான் ஆசிரியரிடம் இது பற்றிக் கேட்டேன். அவர் மிகவும் இலேசாக, எனது 'பெயில் மாக்ஸ்' சரிதான் என்று சொன்னார். அவருக்கு என்மீது கோபமாக இருப்பதாகத் தோன்றியது. என்ன காரணமாக இருக்கலாம் என்று யோசித்தேன். எதுவும் பிடிபடி-வில்லை.

ஆசிரியர் எனக்குத் தராவிட்டாலும் நான் கஷ்டப்பட்டுப் படித்து எழுதி உண்மையாகப் பெற்ற புள்ளிகளை சரிபார்த்துக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்தேன். நான் ஆசிரியரிடம் மன்றாட விரும்பவில்லை. ஒரு பெண், என்பதால், ஆசிரியரிடம் 'கதைத்துப்பேசிப் புள்ளிகளைப் பெற்றுக் கொள்பவள் என்று மற்றவர்கள் கதைக்கும் ஒரு நிலை உருவா-வதை நான் விரும்பவில்லை. திரும்பி எனது இருக்கைக்குச் சென்றேன்.

எனது விடைத் தாள்களை என்னைவிட நன்றாகச் செய்த மற்றையவர்களுடைய விடைத் தாள்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தேன். அவர்களது விடைகளும் என்னுடையவையைப் போன்றே அதே விடைகளாக இருந்தன. ஏன் இந்த ஆசிரியர் எனக்குரிய சரியான புள்ளிகளைத் தர மறுக்கிறார் என்று எனக்குப் புரியவில்லை.

இடைவேளை நேரம் இதைப்பற்றி எனது சகோதரியிடம் பேசினேன். அவள் எனது சந்தேகத்தைத் தீர்த்து வைத்தாள். இந்தக் கணிதபாட ஆசிரியர் என்னைத் தான் விரும்புவதாகக் கூறி என்னுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளச் சில நாட்களுக்கு முன் முயன்றிருந்தார். அதற்கு நான் ஒப்பவில்லை.

'ஓ... அப்ப அதுதான் எனக்கு இப்பிடி அநியாயம் செய்கிறாரோ? அதையும் பார்ப்போம். என்ன நடந்தாலும் சரிதான். நான் எனது சரியான 'மாக்ஸ்'சைப் பெற்றுத்தான் ஆவேன்.'

எனது விடைத்தாளை எடுத்துக் கொண்டு தலைமை ஆசிரியரிடம் போனேன். அவரது அலுவலகத்துக்கு நான் போனதும் அவர் சொன்னார்.

"என்ன அழகான பிள்ளை நீ! எனக்கு ஏன்இந்த அதிர்ஷ்டம். கிட்டியிருக்கிறது, மடமொசிலி?"

இந்த அருவருப்பான 'சுழட்டல்' வரவேற்பு எனக்கு எரிச்சலைத் தந்தது. ஆயினும் ஒரு பாதிக்கப்பட்டவள் என்ற-படியால் நான் அதை எதிர்க்கவில்லை.

"இதுதான் நடந்தது சேர். தயவு செய்து மன்னிக்க வேணும். ஆனால், நான் நேரடியாகப் பேசப்போகிறேன். எனது கணித பாட ஆசிரியர் என்மீது விருப்பம் என்று கூறி என்னுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள முயன்றார். நான் அதை மறுத்து விட்டேன். இதனால் அவர் எனது கணித பாடப் புள்ளிகளைத்தர மறுக்கிறார். இந்தப் பிரச்சினையை நீங்கள் தீர்த்து வைப்பீர்கள் என்ற நம்பிக்கையில் உங்களிடம் வந்தேன்.

அவர் தலையை ஆட்டியபடி நான் சொல்வதை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.

நான் சொல்லி முடிந்ததும் அவர் சொன்னார். 'இன்று பின்னேரம் 3 மணிபோல என்னை எனது வீட்டில் வந்து சந்தியுங்கோ, மடமொசிலி. நான் உங்கள் ஆசிரியருடன் இதுபற்றிப் பேசித் தீர்க்கிறேன். இப்ப உடனடியாக அவரைக் கூப்பிட்டுக் கதைக்க என்னால் முடியாது. எனக்கு நிறைய வேலைகள் இப்போது இருக்கின்றன."

அன்று பிற்பகல் நான் தலைமை ஆசிரி-யரின் வீட்டுக்குப் போனேன். அவர் பாடசாலைக்கு அருகிலேயே வசித்து வந்ததால் எங்கள் எல்லோருக்கும் அவரது வீடு தெரிந்திருந்தது.

எனக்கு ஒரு வசதியான கதிரையை சுட்டிக்காட்டி உட்காரச் சொன்னார். எனக்கு குடிப்பதற்கு ஏதாவது தரவா என்று கேட்டார். நான் அதை அமைதியாக மறுத்தேன். நான் அங்கு எதையும் குடிப்பதற்காகப் போகவில்லை.

கணித பாட ஆசிரியர் வரவில்லையா? கேட்டேன் நான்.

"அவர் விரைவில் வந்து விடுவார்.

எனக்கு அவர் சிலவேளை வரமாட்டாரோ என்று தோன்றியது.

தலைமை ஆசிரியர் சற்று அந்தரப்படு-வதாக எனக்குத் தோன்றியது. ஏனாக இருக்கும் என்று என்னுள்ளேயே கேட்டுக் கொண்டேன். எப்பிடி இருந்தால் என்ன, அதுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம் என்று என்னைச் சுதாகரித்துக் கொண்டேன்.

சிறிது நேரத்தின் பின் அவர் அறையி-லிருந்து வெளியேறி இன்னொன்றுள் நுழைந்தார். அது அவரது படுக்கை அறை-யாக இருக்கலாம் என எனக்குத் தோன்றி-யது. அங்கிருந்தபடி என்னை அங்கு வருமாறு அழைத்தார். "வந்து பார் நான் எங்கள் வாசிகசாலைக்கு என்ன வாங்கியிருக்கிறேன் என்று"

எனக்கு வாசிப்பதில் உள்ள ஆர்வம் காரணமாக, என்னுள் எழுந்து கொண்டி-ருந்த மெல்லிய அச்சத்தையும், அவரது அறையில் நிலவிய அமைதி காரணமாக என்னுள் எழுந்த சந்தேகத்தையும் ஒதுக்கி-விட்டு அவரது அறையை நோக்கிப் போனேன். 'நான் இப்பிடிச் சந்தேகப்படுவது சரியில்லை... சிலவேளை அது அவரது புத்தக அறையாகவும் இருக்கலாம்' என்று எனது மனம் தேற்றியது.

நான் அவரது அறைக்குள் கதவைக் கடந்து போகும் வரை அவர் பொறுத்தி-ருக்கவில்லை. என்னைப் பிடித்து தனது கட்டிலை நோக்கி இழுத்துக் கொண்டு போனார். என்னால் முடிந்தளவுக்கு நான் இதைப் பலமாக எதிர்த்தேன். ஆனால், வெறிகொண்ட ஒரு மனிதன் ஒரு காயப்-பட்ட மிருகம் போலப் பயங்கரமானவன் ஆகிவிடுவான் என்பதை நான் மறந்து விட்டேன்.

எப்படியோ அவரது பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டு பலத்துக் கத்தினேன். 'அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் இதைப்-பற்றி அறியாமல் இருக்க வேண்டுமென்றால் என்னை உடனடியாக விடவேண்டும்' என்று அவரிடம் கூறினேன். 'அப்போது தான் என்னுடைய பிரச்சினையை அவருடன் பேசலாம்' என்று சொன்னேன்.

"நீ என்னுடன் வர ஒப்புக் கொள்வா-யானால் உன்ரை பிரச்சினையை நான் தீர்த்து வைப்பேன்" என்றார் அவர். அதற்குப் பிறகு 'நீ உனது பரீட்சையில் நல்ல புள்ளிகளைப் பெற்று சித்தியடைவதைக் காண்பாய்.'

"நீ என்னவென்று நினைத்தாய்? ஒரு விபச்சாரி என்றா? நான் அப்படிப்பட்ட ஒருத்தி அல்ல!"

திடீரென அவர் சொன்னார்; 'நீ பாடசா-லையிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளாய்!'

"ஓ.. வெளியேற்றப்பட்டு விட்டேனா...? நல்லது. இது நான் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைத் தீர்மானிக்க எனக்கு அனுமதியளிக்கிறது...'

நான் சொன்னேன். இன்னும் அவரை



அவமதிக்கிற மாதிரிச் சொல்ல ஏதாவது இருக்கிறதா என்று யோசித்தேன். எதுவும் பிடிபடவில்லை. அவ் வீட்டை விட்டு வெளியேறினேன். வெளியே வந்தபோது எனக்கு அடக்க முடியாமல் அழுகை பொங்கிக் கொண்டு வந்தது.

மறுநாள் நான் வகுப்பிலிருந்து வெளியே அனுப்பப்பட்டேன். பாடசாலையில் இருந்தும் வெளியேற்றப்பட்டேன். காரணம்: பிடிவாதம், ஆசிரியர்களை மதிக்காமை! அதன் பின் நான் பாடசாலையில் அனுமதிக்கப்படவில்லை.

அந்தக் கணம் நான் நினைத்தேன். நாங்கள் எல்லா மட்டங்களிலும் தாக்கப்படு-கின்றோம். ஆனால், இதுதான் நிலைமை-யாக இருந்தாலுங் கூட எங்களால் இந்த நெருப்பு வளையத்தை உடைக்க முடியும். நாம் விழிப்புடன் இருக்க வேண்டும். நாம் உரத்துப் பேச வேண்டும்.

நன்றி - நூலகத்திட்டம்



– எஸ். கிருஷ்ணன்

# கன்னட மொழியில் ஈழத்துத் தமிழ்க் கவிதைகள்

ஈழத்துக் கவிதைகளின் கன்னட மொழி பெயர்ப்பு நூல் ஒன்று ஜனவரி மாதம் 28ம் திகதியன்று பெங்களூரில் வெளியிடப்பட்டது. அரசியல் மற்றும் இலக்கிய முக்கியத்துவம் வாய்ந்த இந்த வெளியீட்டு அரங்கு கன்னட - தமிழ் எழுத்தாளர்கள் ஒன்று கூடிய ஒரு நிகழ்வாகவும் அமைந்தது. 'சிறிலங்காட தமிழு கவிதைகளு' என்ற தலைப்பில் வெளியாகியுள்ள இந்த நூலில் கி.பி.அரவிந்தன், அருந்ததி, ஆத்மா, ஆழியாள், இளவாலை விஜயேந்திரன், கருணாகரன், சேரன், சோலைக்கிளி, வ.ஐ.ச. ஜெயபாலன், நட்சத்திரன் செவ்விந்தியன், எம்.ஏ.நுஃமான், மு.புஷ்பராஜன், சி.சிவசேகரம், சண்முகம் சிவலிங்கம், நா.சபேசன், எஸ்.போஸ், சு.வில்வரத்தினம், ஹம்சத்வனி ஆகியோரின் கவிதைகள் இடம்பெற்றுள்ளன. நூலிலுள்ள நூறு கவிதைகளையும் மொழி பெயர்திருப்பவர்கள் கன்னட இளங் கவிஞர்களான நரசிம்ம மூர்த்தி, வெங்கடேஷ் நெல்லுகுண்டே மற்றும் சென்னைப் பல்கலைக்கழகக் கன்னடத்துறை விரிவுரையாளர் தமிழ்ச் செல்வி ஆகியோர். தமிழவனுடைய அயராத முயற்சியால் சாத்தியமாகியுள்ள இந்த நூலுக்கான கவிதைகளை தேர்ந்தெடுத்ததோடு ஈழத்துக் கவிதைகள், அவை பேசும் அரசியல் பற்றிய ஒரு விரிவான முன்னுரையையும் அவரே எழுதியிருக்கிறார்.

காலை பத்து மணியிலிருந்து பிற்பகல் இரண்டு மணி வரையும் நடைபெற்ற வெளியீட்டு அரங்குக்கு கன்னட மொழியின் மூத்த கவிஞரும், பல்கலைக்கழகப் பேராசிரியருமான ஜி.எஸ். சிவருத்ரப்பா தலைமை வகித்தார். தமிழவனின் வரவேற்புரையைத் தொடர்ந்து நூலை வெளியிட்டு வைத்தார் சேரன். அவரிடமிருந்து சிறப்புப் பிரதியைப் பெற்றுக் கொண்டவர் கன்னட அறிஞர் பி.எஸ் மணி அவர்கள்.


முதலாவது திறனாய்வு உரையை வழங்கியவர் கன்னட இலக்கிய விமர்சகரும் பேராசிரியருமான பஸவராஜ கல்குடி அவர்கள். "இலங்கைத் தமிழர்கள் பற்றியும் அவர்களது போராட்டங்கள் பற்றியும் தவறானதும் விவரமற்றதுமான தகவல்களையே இந்திய ஊடகங்கள் எமக்கு வழங்கி வந்துள்ளன. இன்று இந்தக் கவிதைத் தொகுதியை வாசிக்கிற போது எமக்கு உண்மை உயிரோட்டமுடன் கிடைக்கிறது. இப்போது தான் எமக்கு ஈழத்தவரின் உண்மையான முகங்கள் தெரிய ஆரம்பிக்கின்றன. அகதி வாழ்வு தருகிற அவலம், ஒரு தேசிய இனத்தின் தேடல், அன்பு, நேசம் என்பவற்றின் முக்கியத்துவம் போன்ற விஷயங்களைப் புதிய மொழியிலும், புதிய படிமங்களிலும் இக் கவிதைகள் பேசுகின்றன. எம்மை ஓயாமல் அலைக்கழிக்கச் செய்யும் புதிய கேள்விகளை இந்தக் கவிஞர்கள் தொடர்ந்தும் எழுப்புகிறார்கள்" என்று குறிப்பிட்ட பஸவராஜ கல்குடி, "சிறுபான்மையினர் என்ற பதமே பொருத்தமற்றது. ஆதிக்கத்தின் வெளிப்பாடாகவே அது அமைகிறது. எனவே அந்தச் சொல்லை நாம் பயன்படுத்தவே கூடாது" என்றும், வலியுறுத்தினார்.

இரண்டாவது உரையை வழங்கியவர் கன்னடக் கவிஞர் சுமதீந்திர நாடிக். "இந்தக் கவிதைகளை வாசித்த பிற்பாடு எனக்குள் ஆழமான வலி எழுந்தது. எவ்வளவு பயங்கரமான சோகத்தையும் அவலத்தையும் இந்த மக்கள் அனுபவிக்கிறார்கள் என்பது தெரிய வர அவர்களுடைய துயரில் நானும் பங்கு கொள்ள வேண்டும் என்கிற உணர்வு மேல் எழுகிறது. இந்த மக்களுக்கு அவர்களுடைய இளம் பருவத்தைப் பற்றி நினைத்துப் பார்ப்பதற்கான கால அவகாசமோ, மனநிலையோ இருக்குமோ என்பதே எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. யுத்தத்தைத் தீவிரமாக முன்னெடுத்துச் செல்கிற அரசியல்வாதிகளின் தலைக்குள் யார் தான் நியாயத்தைத் திணித்துவிட முடியும்.?" என்ற கேள்வியையும் சுமதீந்திர நாடிக் எழுப்பினார்.

அடுத்த உரையை நிகழ்த்தியவர் கன்னட விமர்சகரும், பேராசிரியருமான எச்.எஸ். ராகவேந்திர ராவ். கன்னட இலக்கியச் சூழலில் முற்போக்கு இலக்கியம் (பண்டாய இலக்கியம்) தலித் இலக்கியம் ஆகிய இரண்டு போக்குகளுமே சாதிக்க முடியாதவற்றை ஈழக் கவிதைகள் சாதித்துள்ளன எனவும் இன்றைய கன்னட இலக்கியம் எதிர்நோக்கியிருக்கின்ற நெருக்கடிகளை நீக்குவதற்கு ஈழக்கவிதைகள் உதவ முடியும் எனவும் முக்கியமான சில கருத்துக்களை எச்.எஸ். ராகவேந்திர ராவ் முன்வைத்தார்.

அவர் தொடர்ந்தும் பேசுகையில், "ஆயுதப் போராட்டத்துக்கான நியாயத்தைப் பேசுகிற இக் கவிதைகள் முஸ்லிம் மக்களின் வெளியேற்றம், குறித்த விமர்சனங்களையும், சீற்றத்துடன் எழுப்புகின்றன. வன்முறை பற்றிய ஆழ்ந்த விசாரணையும் விவாதமும் கூட இக்கவிதைகளில் இடம்பெறுகின்றன. பல்வேறு குரல்களும் பல்வேறு கருத்து நிலைகளும் வெளிப்படுவது ஈழக் கவிதைகளின் ஆரோக்கியமான அம்சமாகும். திராவிட இயக்கங்கள் தமிழுக்குத் தந்த கவிதைகளை விட முற்றிலும் வேறான ஆனால், பலமான ஒரு பாரம்பரியத்தை நாம் இந்தக் கவிதைகளில் பார்க்கிறோம்" என்று குறிப்பிட்டார்.

கவிஞரும் இலக்கிய விமர்சகருமான எச்.எஸ். வெங்கடேஷ் மூர்த்தி அடுத்து உரையாற்றினார். கவி மனது எப்படிப் பல சந்தர்ப்பங்களில் ஒன்று போலச் செயல்படுகிறது என்பதற்குப் பழைய கன்னடக் கவிதைகளில் இருந்தும், சேரன், சோலைக்கிளி, நட்சத்திரன் செவ்விந்தியன் ஆகியோர் கவிதைகளிலிருந்தும் உதாரணங்களை எடுத்துக் காட்டினார் அவர். சமூக இயக்கங்களுடன் இணைந்து கிளம்பிய கவிதை கன்னடத்தில் தோற்றுப் போய் விட்டது. ஆனால், ஈழக்கவிதைகளுக்கு வெற்றி சாத்தியமாகி இருக்கிறது என்று தெரிவித்த எச்.எஸ் வெங்கடேஷ் மூர்த்தி, சில ஈழக் கவிதைகளை கன்னடத்தில் வாசித்துக்



காட்டினார்.

மூத்த கவிஞரான ஜி.எஸ். சிவருத்ரப்பா தனது தொகுப்புரையில், காலனித்துவத்துக்கு முன்பாக கன்னட - தமிழ் இலக்கிய உறவுகள் மிகவும் செழுமையான நிலையில் இருந்தன என்பதைச் சுட்டிக் காட்டி, இந்த உறவுகள் அறுந்து போனமைக்கு முக்கியமான காரணமாக காலனியாதிக்கத்தைக் குறிப்பிட்டார். ஆழ்வார்களுடைய காலத்தில் இருந்த கன்னட - தமிழ் இலக்கிய உறவு - குறிப்பாகக் கவிதை உறவு - பற்றிக் குறிப்பிட்ட சிவருத்ரப்பா, இப்போது ஈழக் கவிதைகளின் ஊடாகவே இத்தகைய உறவு சாத்தியம் என்ற கருத்தையும் தெரிவித்தார்.

புலம்பெயர்ந்தோர் / புகலிடத் தமிழ் எழுத்துக்கள் பற்றிய சிறு கருத்துரை ஒன்றை எழுத்தாளர் நா.கண்ணன் அவர்கள் வழங்கினார். பின்னர் உரையாற்றிய சேரனைத் தொடர்ந்து நூலின் வெளியீட்டாளரான எஸ். வித்யா சங்கர் (பிரியதர்ஷனி பதிப்பகம்) நன்றியுரை வழங்கினார். அடுத்த அமர்வாகக் கன்னடக் கவிஞர்களும் தமிழ்க் கவிஞர்களும் தங்களுடைய கவிதைகளை வாசித்தமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கன்னடக் கவிஞர்களான எச்.எல். புஷ்பா, வெங்கடேஷ் மூர்த்தி, சிவருத்ரப்பா, பிரேமா ஆகியோரும் தமிழ்க் கவிஞர்கள் ஞானக்கூத்தன், சிபிச்செல்வன், பாவண்ணன், ஆதவன், சேரன் ஆகியோரும் பங்குபற்றினர். தமிழ்க் கவிதைகளுக்குக் கன்னட மொழிபெயர்ப்பும், கன்னடக் கவிதைகளுக்குத் தமிழ் மொழி பெயர்ப்பும் வழங்கப்பட்டன.

கன்னடத்தில் ஆற்றப்பட்ட உரைகளை அழகுறத் தமிழில் மொழிபெயர்த்தவர்கள் பாவண்ணனும், பி. கிருஷ்ணசாமியும்.

கவிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விமர்சகர்கள், மொழி அறிஞர்கள், பத்திரிகையாளர்கள் என நூறு பேர் வரை கலந்து கொண்ட இந்த அரங்கு, நவீன தமிழ் இலக்கியத்துக்கும், நவீன கன்னட இலக்கியத்துக்கும் முக்கியமான ஒரு நிகழ்வு எனக் கருத்துத் தெரிவித்தனர் கலந்து கொண்ட இலக்கிய விமர்சகர்கள். ஈழக் கவிதைகளை மலையாளத்திலும், வங்காளத்திலும் தொகுத்து வெளியிடுவதற்கான ஏற்பாடுகளையும் தமிழவன் செய்து வருகிறார். ◈

---

– றியாஸ்

## முதலாளித்துவச் சூழலியல் - 02

# முதலாளித்துவ சூழலியற் சிக்கல்

நாம் எதிர்கொள்ளுகின்ற சூழலியற் சிக்கலானது நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற முதலாளித்துவ பொருளாதார உலகத்தின் நேரடி விளைவு என முன்னர் பார்த்தோம். உலகில் இதற்கு முன்னர் வரலாற்று ரீதியாக நிலவிய புராதன பொதுவுடமை சமூக பொருளாதார முறை, ஆண்டான்-அடிமைப் பொருளாதார முறை, மானிய பொருளாதார முறை போன்றன சூழலைச் சிதைத்து இயற்கைச் சமநிலையைக் குழப்பிவிட்டு உயிரிகளின் நீடித்த நிலைத்த நிலவுகைக்குச் சவாலாக இருந்தது மிகக் குறைவு. ஆனால் வரலாற்றில் முதலாளித்துவம் ஒன்றுதான் நினைத்துப் பார்க்க முடியாத வேகத்தில் உலகைப் பரவி, மனிதர்களுக்கும் அவர்களின் பயன்பாட்டுக்குரிய உயிர்களுக்குமான நிலவுகைக்கு அபாயத்தை ஏற்படுத்தியது எனலாம்.

சுற்றுச் சூழல் மாசுபடுத்தப்பட்டு சேதமாக்கப்படுவதன் தீவிரத்தன்மையை உணரும் திறன் ஆளுக்கு ஆள் வேறுபடுகின்றது. சூழலிற்கு ஏற்படுத்தப்படும் சேதத்தின் தன்மையை உயிரியல், பௌதிக, இரசாயன, சமூக, கலாசார பண்பாட்டு, மானிடவியல் ரீதியாக பலமுறைகளில் பகுப்பாயலாம். ஆனால் உண்மையில் சூழலியற் பிரச்சினைகள் இயற்கை விஞ்ஞானப் பகுப்பாய்வுகளோடு, தற்போதைய உலகின் அரசியற் பொருளாதார கொள்கைகளோடு பகுத்தாய்வது தான் பொருத்தமாக இருக்கும்.

எங்களுக்கு பல சகாப்தங்களுக்கு முன் வாழ்ந்த எழுத்தறிவில்லாத, கல்வியறிவில்லாத மனிதர்களோடு ஒப்பிடுகையில் நாங்கள் அறிவில் கூடுதலானவர்களாக இருக்கிறோம். முன்பு வாழ்ந்து இறந்தவர்களை விட, எங்களுக்கு தீங்கு தரும் நுண்ணுயிர்கள் பற்றியும், சுகாதாரப் பிரச்சினைகள் பற்றியும், சுற்றுச் சூழலில் கலக்கின்ற நஞ்சுகள் பற்றியும், அதனைத் தடுப்பது பற்றியும் அறிவு அதிகம் எனலாம். அந்த அறிவினால் நம்மைப் பாதுகாத்தும் வந்திருக்கின்றோம். பாதுகாத்தும் வருகின்றோம். இந்த அறிவினை பல்வேறு வழிகளில் பெற்றிருக்கின்றோம். தனியொரு நபரை எடுத்துக் கொண்டால், முன்பிருந்த சூழலியலின் அரசியல் பிரச்சினை விடயங்கள் பற்றிய அறிவைவிட இப்போது அதிகம். இந்தப் பிரச்சினை விடயங்களை ஒரு ஆரோக்கிய வழியில் முன்னெடுத்து செல்கிறோமா என்பது கேள்விக் குறியே. நிறைய நேரங்களில் நாம் இந்த முன்னெடுத்துச் செல்கையை நிராகரித்து விடுகிறோம். எனவே இதனைப் பற்றி விவாதிப்பதற்குரிய நேரத்தை நாம் அடைந்துவிட்டோம். ஏனெனில் எம்மைச் சுற்றி அபாயம் அதிகரித்து விட்டது. சுற்றுச் சூழலின் கூறுகளின் அம்சங்களில் - ஓசோனில் ஓட்டை என்றும், பச்சை வீட்டு தாக்கம் என்றும், அணு உலைக் கசிவுகள் என்றும் அபாயம் அதிகரித்து விட்டதாக தரவுகளோடும், ஆய்வுகளோடும் நியாயித்து நிறுவப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

உண்மையில், 'அபாயம் அதிகரித்து விட்டது, அதற்கு ஒவ்வொருவரும் எதிர்வினை காட்டத் தான் வேண்டும்' என்பதை நாம் ஒரு கருதுகோளாக வைத்துக் கொள்வோம். இந்த அதிகரித்து வரும் அபாயத்திற்கு எதிர்வினை செய்வதற்கு முன், அதன் முன்னே இரு கேள்விகள் உதயமாகின்றன.

1) யாருக்கு அபாயம் காத்துக்கொண்டிருக்கிறது?

இந்தக் கேள்வி மேலும் இரு கூறுகளையுடையது,

1) மனித குலத்திற்கு மத்தியில் யாருக்கு அபாயம் காத்துக்கொண்டிருக்கிறது?

11) உயிர்வாழ் அங்கிகளுக்கு மத்தியில் யாருக்கு அபாயம் காத்துக் கொண்டிருக்கிறது?

2) அதிகரித்த அபாயம் என்ன கூறுகிறது? யாருக்கு அபாயம் காத்துக் கொண்டிருப்பதாக கூறுகிறது?

இதில் முதலாவது கேள்வி, முதலாளி-தொழிலாளி, சுரண்டுவோர்-சுரண்டப்படுபவர் வகையான கேள்வியும். இரண்டாவது கேள்வி ஆழமான சூழலியல் சம்பந்தப்பட்ட கேள்வியுமாகும்.

இப்போது விடயத்திற்கு வருவோம். இந்த இரு கேள்விகளும் உதயமானது, முதலாளித்துவ மையவாத நாகரிக வளர்ச்சியின் அடிப்படை, இயற்கைப் பண்புகள், முதலாளித்துவ பொருளாதார உலகின் தொழிற்பாடுகள் போன்றவைகளே இந்த வினாக்களுக்கான மூல காரணங்களாகும். இந்த இரண்டையும் வைத்துக் கொண்டு 'யாருக்கு' என்று முன்பெழுந்த வினாக்களைப் பகுப்பாய்வோம். முதலாளித்துவத்திற்கு இரண்டு அடிப்படைப் பண்புகள் இருக்கின்றன. முதலாவது பண்பு, முதலாளித்துவமானது தனது ஏகாதிபத்திய தேவைகளின் நிமித்தம் அல்லது அதனை விருத்தி செய்வதற்காக மொத்த

⇨19

நன்றி - நூலகத்திட்டம்



## படையினர் - தமிழ்க் கட்சிகள் - வர்த்தக சங்கம்
# பதில் யாரிடம்?

பெப். 06 ஆம் திகதி பிற்பகல் மூன்று மணி தொடக்கம் நான்கு முப்பது மணிவரை வவுனியா படைத்தலைமையகத்தில் வன்னி படைத்தலைமை கட்டளையிடும் அதிகாரியின் தலைமையில் முக்கிய கூட்டமொன்று நடைபெற்றுள்ளது. வவுனியா வர்த்தக சங்கத்தலைவர் அப்துல்லா, செயலாளர் செந்தில்நாதன், வவுனியா பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத் தலைவர் சேனாதிராசா, முகாமையாளர் பாரதி ஆனந்தம், வவுனியாவில் உள்ள தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் என யாவரையும் அழைத்து. வவுனியாவில் வர்த்தகர்களிற்கு என்ன பிரச்சினையுள்ளது? என்ற கேள்வி தான் பிரதானமாக படையினரால் கேட்கப்பட்டதாம். இந்தக் கேள்வியை தமிழ்க் கட்சிகளையும் வைத்துக் கொண்டு கேட்டால் வர்த்தக சங்கத்தினரால் எப்படிப் பதில் சொல்ல முடியும் என்கிறார் கூட்டத்தில் கலந்து கொண்ட வர்த்தகர் ஒருவர்.

இந்தக் கூட்டத்தில் இன்னுமொரு முக்கிய விடயமாக மீன் வியாபாரம் பற்றிப் பேசப்பட்டது இந்த மீன் வியாபாரத்தில் பல விடயங்கள் உள்ளடங்கியுள்ளன. நகர சபையிடம் மீன் குத்தகையினை புளொட் இயக்கத்தினர் பெற்று கடந்த சில ஆண்டுகளாக நடத்தி வருகின்றனர். இந்தக் காலப் பகுதியில் மீனின் விலை அதிகமாக இருந்தது. இதற்கு காரணம் மீனிற்கு புளொட் வரி அறவிடுகின்றது என வியாபாரிகளாலும் மக்களாலும் கூறப்பட்டு வந்தது இந்த மீன்குத்தகையினால் புளொட்டிற்கு பணம் வந்து கொண்டு தானிருந்தது. ஆனால் தற்பொழுது மீன் மொத்த வியாபாரத்தையும் புளொட் தனதாக்கிக் கொண்டுள்ளது. ஏற்கனவே மொத்த வியாபாரம் செய்தவர்கள் புளொட் மீனின் மொத்த வியாபாரத்தை தாமே எடுத்து விலையை அதிகரிக்கப் போகின்றது எனக் கூறினர். இந்தக் கதை பூதாகரமாகப் பேசப்பட்டு புளொட் இயக்கத்தினரால் துண்டுப்பிரசுரம் மூலம் விளக்கமும் கொடுக்கப்பட்டு விலை குறைவாக விற்கப் போகின்றோம் என்ற வாக்குறுதியும் வழங்கப்பட்டது.

கூட்டத்தில் மீன் பிரச்சினை எழுந்ததும் புளொட் இயக்கம் சார்பாக கலந்து கொண்ட வை.பாலச்சந்திரன் மீன் விலை குறைந்துள்ளது பற்றி விளக்கமளித்துள்ளார். அதுமட்டுமல்லாமல் இன்னும் மீன் விலை குறையும் என்றும் வாக்குறுதி கொடுத்துள்ளார். இதை அங்கு கலந்து கொண்ட சகலரும் வரவேற்றனர்.

புளொட் இயக்கம் மீன் வியாபாரத்தில் தேர்ச்சியற்றவர்கள். மொத்தமாக எடுத்து தமக்கான வருமானத்தினைப் பெற்று விற்று விட்டால் இவர்களது அலுவல் முடிந்து விடும். சில்லறை வியாபாரிகள் பல நடைமுறைச் சிக்கல்களை எதிர் நோக்க வேண்டி வரும் என்று குற்றம் சாட்டுகிறார்கள் சில்லறை வியாபாரிகள்.

உதாரணத்திற்கு சில்லறை வியாபாரிகள் மொத்த வியாபாரிகளிடமிருந்து கொள்வனவு செய்த மீனை கெடாமல் பாதுகாத்து வைத்து விற்பனை செய்வதற்கு அதற்கான குளிரூட்டி வசதிகளில்லை. இதனால் பாதிப்படைவது சில்லறை வியாபாரிகளே. ஆகவே சில்லறை வியாபாரிகளுக்கு இதுபோன்றுள்ள பிரச்சினைகளையும் கருத்தில் கொண்டாக வேண்டிய பொறுப்புணர்ச்சியுடன் செயற்பட வேண்டியது மொத்த வியாபாரத்தை தமதாக்கியுள்ள புளொட்டின் பொறுப்பாகும் என்கிறார் சில்லறை வியாபாரியொருவர்.

மீன் விடயத்திற்கு அடுத்தபடியாக தேங்காய் மொத்த வியாபாரம் தொடர்பாக படையதிகாரிகளால் கேள்வி எழுப்பப்பட்டது. இந்த தேங்காய் மொத்த வியாபாரத்தை ரெலோ இயக்கமே நடத்தி வருகின்றது. வவுனியா கண்டி வீதியில் சிங்களவர்களின் கடைகளில் மலிவாக தேங்காயினைப் பெற்றுக் கொள்ளக் கூடிய நிலைமையிருக்க, அங்கு போய் தேங்காயினை மொத்தமாகப் பெற்று வருவதற்கு ரெலோ தடையாகவுள்ளது. தேங்காய் மொத்த வியாபாரம் ரெலோவிடம் இருப்பதால் அதற்கான விலையினை ரெலோவினரே தீர்மானித்து விடுகின்றனர். இதனால் அவர்களுக்கு நாளாந்தம் பெரும் வருமானம் ஒன்று கிடைக்கும். ஆனால் இதை யார் செய்கின்றார்கள் என்றால் வன்னித் தேர்தல் தொகுதியில் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு மூன்று உறுப்பினர் பதவிகளை பெற்றுக் கொண்ட ரெலோ செய்து வருகின்றது. கடந்த தேர்தலின் போது செல்லுபடியற்ற வாக்களித்த ஒருவர் தனது வாக்காளர் அட்டையில் இனியென்றாலும் தேங்காய் வியாபாரத்தை விட்டு விடுங்கள் என்று எழுதியிருந்தாராம். இப்படியெல்லாம் கேட்ட பின்னரும் மேலும் பணவசூலிப்பு வேலைகள் அதிகரித்துள்ளதே தவிர நிறுத்தப்படவில்லை. இப்படியான பல பிரச்சினைகளிற்கு மத்தியில் வர்த்தக சங்கத்திடம் உங்களுக்கு என்ன பிரச்சினை இருக்கிறதென்று படையதிகாரிகள் சகல தமிழ்க் கட்சிகளிற்கும் மத்தியில் வைத்துக் கேட்டால் வர்த்தக சங்கம் எப்படி வாய் திறக்கும் என்று வர்த்தக சங்கப்பிரமுகர் ஒருவர் கேட்டதற்கு என்ன பதில்? எது எப்படியான போதும் படையதிகாரிகள் தேங்காய் விலையைக் குறையுங்கள் என்று கேட்டார்களாம். தமிழ்க்கட்சித் தலைவர்கள் தலையசைத்தார்களாம். தேங்காய் விலை குறைந்துள்ளதா? குறையுமா பாவனையாளர்களிடம் கேட்டுப் பாருங்கள்.

வன்னிக்குக் கொண்டு செல்லப்படும் பொருட்களின் நிறையினை ஐம்பது கிலோவாக அதிகரிக்கலாமே என வர்த்தக சங்கத் தலைவர் கூட்டத்தில் படையதிகாரியிடம் கேட்டார். படையதிகாரிக்கோ இவர்கள் அடிவயிற்றிலேயே கை வைத்து விட்டார்கள் என்று முகம் சிவந்தது. அவருடைய பதில் இப்படி இருந்தது. 'கட்டுப்பாட்டில் அல்லாத பகுதி பற்றி உங்களுக்கு என்ன கவலை. நீங்கள் வர்த்தகர்கள் உங்களிற்கு ஏன் அந்தப் பிரச்சினை என்றாராம்.

அதற்கு ஏதாவது பதில் சொல்ல வேண்டிய கடமை ஏற்பட்டதால் வன்னிக்கு எடுத்துச் செல்லப்படும் பொருட்களின் அளவு அதிகரித்தால் வர்த்தகர்களிற்கு வியாபாரம் நடக்கும் என்றாராம் வர்த்தக சங்கத்தலைவர். எரிபொருள் பிரச்சினை, வதிவிட அனுமதிப் பிரச்சினை பற்றியும் அவர் பேசியிருக்கிறார். அதற்கெல்லாம் படையதிகாரிகள் ஆலோசித்து பதில் தருவதாகக் கூறியுள்ளார்.

அவர் ஆலோசிப்பாரா, பதில் தருவாரா?

## பிந்துனு வெவவும் சிங்கள.....

4. லக்பிம- வரையறையை மீறிய எதிர்ப்பு தெரிவிப்பு
5. தினமின- சந்தேக நபர்கள் முகாம் அதிகாரிகளை பொல்லுகள், கற்கள், தடிகள் கொண்டு தாக்கினர்.
6. லங்காதீப- சம்பவத்தின் பின்னணியில் புலிகள் இயக்கம்.
7. லங்காதீப- சம்பவத்தின் பின்னணியல் புலப்படாத சக்தியொன்று.
8. லங்காதீப- வெளிச் சக்திகளின் கோபவாவேசத்தின் காரணமாக.
9. லங்காதீப- கற்களாலும், பொல்லுகளாலும் பாதுகாப்பு அதிகாரிகளை தாக்கியமை.
10. லங்காதீப- சந்தேகநபர்கள் பொலிஸ் காவலரணைத் தாக்கினர்.

பிந்துனுவெவ சம்பவம் இடம்பெற்று 5 நாட்களின் பின்னர் சிங்களப் பத்திரிகைகள் யாவும் இப்படுகொலைகளுக்கு காரண கர்த்தாக்கள் புலிகள் என்ற கருத்து தொனிக்கும் வகையில் தலைப்புச் செய்திகளை வெளியிட்டிருந்தன.

இவ்வாறு பிந்துனுவெவ சம்பவத்தை சிங்களப் பத்திரிகைகள் அறிக்கையிட்டுள்ள விதத்தைக் கொண்டு நாம் எப்படி ஒரு சம்பவத்தை பின்னணியாகக் கொண்டு ஊடகங்கள் தவறான பிரச்சாரத்தை, தமக்கு சாதகமான கருத்தியல்களை வன்மையாக பிரச்சாரப்படுத்துகின்றன என்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

எனினும், இங்கு 2000 நவம்பர் 5ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ராவய இதழ் முற்றிலும் மாறுபட்ட பிந்துனுவெவ குறித்தான விவரணக்கட்டுரையை வெளியிட்டிருந்தமை பற்றி சிறிது கூறவேண்டியுள்ளது. "பிந்துனுவெவ படுகொலைகளின் பின்னணியில் பொலிசார்" என்ற தலைப்பில், சம்பவம் குறித்தான யதார்த்தபூர்வமான அறிக்கையிடல் இடம்பெற்றிருந்தது. அதாவது இப்படுகொலைகளில் இராணுவத்தினரினதும், பொலிசாரினதும் பங்கு குறித்து கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

குறிப்பாக ஏனைய பத்திரிகைகளின் போக்கு கிராமவாசிகள் அப்பாவிகள் என்ற உணர்ச்சிபூர்வமான நியாயத்தன்மையை வெளிப்படுத்தலாகும். கிராமவாசிகள் அப்பாவிகளா இல்லையா என்பது ஒரு உணர்வுபூர்வமான தேடல் மட்டுமே. இச்சம்பவம் பற்றிய நியாயமானதும், யதார்த்தபூர்வமானதும் அறிக்கையிடல்களை மேற்கொள்ள முகாம் பொறுப்பாளரினதும், அவரது உதவி பாதுகாப்பு அதிகாரிகளினதும் விரிவான கலந்துரையாடல்கள் அத்தியாவசியமானது.

அடுத்ததாக முகாமிலிருந்து தப்பியோடியவர்களும், அல்லது சம்பவத்தில் தப்பியவர்களும் இவ்விடயத்தில் முக்கியமான பாத்திரங்களாகும். இவர்களை தேடிச் சென்று தகவல்களைப் பெறாது தம்மை தேடி வந்தவர்களை கொண்டு சிங்களப் பத்திரிகைகள் பிந்துனுவெவ கதையைச் சோடித்துள்ளன. பக்கச்சார்பான கதையை கட்டியெழுப்பியுள்ளன.

ஏனெனில் அவற்றின் தேவை இனவாதத்தை பரப்புதலும், சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்கள் குறித்து தவறான உணர்வை உள்வாங்க வைப்பதுமே.

இந்த கீழ்த்தரமான நோக்கங்களுக்காக அவை எந்தவிதமான தவறான செய்திகளையும் மெய்ப்பித்து வெளியிடத் தயாராக உள்ளன எனக் கூறுவதில் தவறில்லை.

தகவல்: விபவி விவரண மடல்

## முதலாளித்துவ சூழலியற்......

உற்பத்தியை கூட்டுதல் என்ற பெயரில் தங்களது முக்கியமான நோக்கத்தை அடைவதற்காக புவியியல் பரப்புக்கள் தாண்டி முடிவற்ற மூலதனங்களைக் குவித்து வைத்தல். இரண்டாவது பண்பு, வரையறை இல்லாத மூலதனங்களாகும். முதலாளித்துவவாதிகள், (குறிப்பாக பெரும் முதலாளித்துவவாதிகள்) தங்களது கணக்கு வழக்குகளைக் காட்டுவதில்லை. இது முதலாளித்துவத்தின் 'ஊத்தை இரகசியம்' எனப்படும்.

இவ்வாறான வரையறையற்ற மூலதனத்தை குவித்து, உலக முதலாளித்துவத்தை முதலாளித்துவவாதிகள் விரித்துச் செல்வதற்கான உழைப்பிற்கு, நிலம் தேவைப்படுகின்றது. இங்கே அவர்கள் (சூழலைக் கருதாது) 'இயற்கையை வெல்', 'எல்லாம் மனிதருக்காக' என்ற தாரக மந்திரங்களை உருவாக்கி நிலத்தை சுரண்டோ சுரண்டென்று சுரண்டி தங்களது பரந்த ஏகாதிபத்தியத்தின் தேவைகளுக்கான உற்பத்தியைக் கூட்டுகிறார்கள். மேலே கூறிய தாரக மந்திரங்கள் 16ம் நூற்றாண்டில் ஆரம்பித்த முதலாளித்துவ உலக பொருளாதாரத்திற்கு பின்னர் உருவானவைகள் தான். அன்று இதற்கெதிராக கிளம்பிய சமூக எதிர்ப்புக்களையும், கிளர்ச்சிகளையும் அன்றிருந்தே முதலாளித்துவவாதிகள், அடக்கியும், மழுங்கடித்தும் வந்திருக்கின்றார்கள்.

முதலாளித்துவவாதிகளுக்கான வரையறையற்ற மூலதனங்களைக் குவிக்கும், முதலாளித்துவவாதிகளின் நலன்களுக்கே முன்னுரிமை கொடுக்கும், இந்த வரலாற்று முதலாளித்துவத்தின், சுற்றுச்சூழற் பிரச்சினை பதினேழாம் நூற்றாண்டில் ஏற்படத் தொடங்கியது. அன்று அயர்லாந்தின் மரங்களை முற்று முழுதாக வெட்டிச் சாய்த்துவிட்டு, இன்று லத்தீன் அமரிக்க நாடுகளின் அமேசன் காடுகளை பாதுகாக்க வேண்டும் என்று முதலாளித்துவம் கூறுகிறது. முதலாளித்துவத்திற்கு புகார் (smog) என்பது 50 வருடங்களுக்கு முன்பு ஒரு புதுச்சொல்லாக லொஸ்ஏன்ஜல்சில் இருந்தது. இன்று பாரிஸ், ஏதென்ஸ் எல்லாம் தாண்டி, முதலாளித்துவத்தின் வேகமான வளர்ச்சியுடன், பல எல்லைகளையும் தாண்டி புகாரானது (smog) எங்கும் பரந்து விரவி, கிழக்கு, தென்கிழக்கு ஆசியா வரை வந்து விட்டது.

ஜனநாயமாதலும் அல்லது அதிக ஜனநாயகம் கூட சுற்றுச் சூழல் சிதைவுக்கு ஒரு காரணமாக இன்று கருதப்படுகின்றது. மக்களின் ஆடம்பர, சொகுசு, உல்லாசத் தேவைகள் அதிகரிக்க, அதற்காக அவர்கள் குரல் எழுப்புவார்கள். உடனே அவர்களின் தேவையை நிவர்த்தி செய்ய அதிகமான பொருட்கள் உற்பத்தி செய்யப்படும். இதனால் காற்று, நீர், நிலம், போன்றவை மாசடையும். அத்தோடு இந்த அதிகரித்த உல்லாச, சுகபோகப் பொருட்களின் உற்பத்திக்குப் பின்னால் பெருந்தொகையான பாதுகாக்கப்பட வேண்டிய உள்நாட்டுக்குரிய மரங்களும், விலங்குகளும் (உ-ம்: காண்டாமிருகம், யானை- கொம்புகளுக்காக, பாம்புகள்,புலி போன்ற பூனையினங்கள் - தோல்களுக்காக), அவைகள் சார்ந்து வாழும் சுற்றாடலும் சிதைக்கப்படுதல் (உ-ம்: மரங்கள் இல்லாவிட்டால் மழை கிடைக்காது. அத்துடன் மண்ணரிமானமும் ஏற்படும். ஒரு விலங்கின் எண்ணிக்கை திடீரெனக் குறைதல் இயற்கைச் சமனிலையைக் குழப்பி இறுதியில் எல்லாவிலங்கின் அழிவுக்கும் காரணமாகும்) என்பது மிகப் பெரிய சோகமாகும்.

முதலாளித்துவவாதிகளின் நோக்கில் அதிகரித்த உற்பத்தி என்பது இலாபத்தை அதிகரிப்பதற்காக. இலாபம் என்பது விற்பனை விலைக்கும், மொத்த உற்பத்திக்கும், செலவுக்கும் இடையே தனியே இயங்கிக் கொண்டிருக்கிறது. முதலாளித்துவ உலக பொருளாதாரத்தின் வரலாற்றின் தொழிற்படையினருக்கான பேரம் பேசும் சக்தி அதிகரித்துக் கொண்டே வந்திருக்கின்றது. அதிகரித்த உற்பத்தி தேவை காரணமாகவும், இலாப நோக்கம் கருதியும், குறைந்த விலையில் ஊழியர்கள் தேவைப்பட்டனர். இதனால் முதலாளித்துவம் பசப்பு வார்த்தை காட்டி கிராமப் புறங்களிலிருந்த, கிராமிய உணவுற்பத்தி சார்ந்த விவசாய முயற்சிகளில் வெற்றிகரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்த, பல நூற்றுக் கணக்கான தொழிலாளர் படைகளை குறைந்த ஊதியத்திற்கு நகரங்களை நோக்கி நகரச் செய்தன. இதன் காரணமாக கிராமியப் பிறழ்வு ஏற்பட்டது. நகரத்து வாழ்க்கை பற்றிய கனவுகளுடன் சென்றவர்களுக்கு முதலாளித்துவம் குறைந்த ஊதியம் கொடுத்தது. அத் தொழிலாளர் படைகளை நட்டாற்றில் கைவிட்டது. பின்னர் அவர்களை சேரிப்புறங்களில் தள்ளி விட்டது. அதிகரித்த சேரிச் சனத்தொகையினரே இன்றைய பெரும் நகரங்களில் சுற்றுச்சூழல் மாசடைதலுக்கு பிரதான காரணிகளுள் ஒன்றாக இருக்கிறது. இந்த சேரிப்புறங்களால் நீர், நிலம், வளி, சத்தம் போன்ற மாசுகள் ஏற்பட்டது முதலாளித்துவத்தின் கைவரிசை தான் என்றால் அது மிகையாகாது.

இன்று சூழலியல் ஒரு தீவிரமான அரசியல் போக்காக உலகின் பலபாகங்களில் மாறிக்கொண்டிருக்கின்றது. சூழலைப் பாதுகாப்போம் என்ற மையவாதக் கருத்தைச் சுற்றி பல அரசியல் இயக்கங்கள் சூழல் அழிவைத்தடுப்பதற்கும், நல்ல சூழலைக் கட்டியெழுப்புவதற்கும் களத்தில் கச்சை கட்டிக் கொண்டு நிற்கின்றன. இன்று எமது நாட்டில் அல்லது எமது பிரதேசங்களில் இவ்வாறான இயக்கங்களை முன்னெடுத்துச் செல்வதில் அல்லது இவ்வாறான சூழலியல்-அரசியல் போக்கை முன்னெடுத்துச் செல்வதில் எமது பங்கு என்ன என்று ஒவ்வொருவரும் தங்களைப் பார்த்துக் கேட்டுக் கொள்வதும், அதற்கான நடவடிக்கையில் காலம் தாழ்த்தாது இறங்குவதும் மிகவும் முக்கியமானதும், அவசியமானதுமான ஒன்றாக இருக்கிறது.

நன்றி - நூலகத்திட்டம்

Registered as a Newspaper in Sri Lanka

# சரிநிகர்

வாரஇதழ்

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே" - பாரதி

இல.: 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.

தொலைபேசி, தொலைமடல்: 074-400045

மின்னஞ்சல்: sarini@sltnet.lk

இணையம் : sarinihar.com

## ஜனாதிபதியின் சுதந்திர தினக் குண்டு

"இன்று நாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு இறுதியும் அறுதியுமான ஒரு தீர்வு, யுத்தத்தினை முடிவுக்கு கொண்டு வந்து தேசியப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பது தான் என்று நாம் ஒரு போதும் மறந்துவிடக் கூடாது"

-இதைச் சொன்னவர் வேறு யாருமல்ல, எமது மேன்மை தங்கிய ஜனாதிபதி சாட்சாத் சந்திரிகா குமாரணதுங்க பண்டாரநாயக்கா அவர்கள் தான்.

இலங்கையின் 53வது சுதந்திர தினவிழாக்கொண்டாட்டம் பாராளுமன்றத்திடலில் நடைபெற்ற போது அவர் 'சககுடிமகன்களை' (Fellow Countrymen) விழித்து நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் இப்படித் தெரிவித்திருந்தார்

'நாக்கில் நறுந்தேறும் நெஞ்சில் நீக்கரிய நஞ்சும்' கொண்டவர்களாக மனிதர்களால் அவ்வளவு இலகுவாக எந்தவிதமான தயக்கமும் இன்றி இயல்பாகப் பேசமுடிகிறது என்பதைப் புரிய வைப்பதாக அவரது அன்றைய பேச்சு அமைந்திருந்தது.

"சமாதானம் நிலவுகின்ற யுத்தமோ, சச்சரவோ இல்லாத சகலருக்கும் சுதந்திர சமத்துவமும், ஜனநாயகத்தை அனுபவிக்கும் சூழலும் கிடைக்கின்றன ஒரு சமூகத்தில் தான் எங்களால் உண்மையான சுதந்திரத்தை அனுபவிக்க முடியும்" என்று அவர் தனது உரை முடியும் தறுவாயில் கூறும்போது உங்கள் காதுகளையே நீங்கள் நம்பமுடியாமல் திகைத்திருப்பீர்கள்.

ஆனால், அதில் ஆச்சரியம் இல்லை என்பதை கடந்த வார சரிநிகர் இதழில் சுட்டிக் காட்டிருந்தார் நமது பத்தியாளர் ஒருவர். ஆம், நவீன சர்வாதிகாரிகள் நாவினிக்கப் பேசுவதில் வல்லவர்கள். அவர்களின் இயல்பே அது தான் என்று அவர் குறிப்பிடப்பட்டிருந்தார். அந்த விடயத்தை வலியுறுத்துவது போல அமைந்திருந்தது நமது அரசுத் தலைவரின் சுதந்திர தின விழாப் பேச்சு.

ஆனால், அவரது பேச்சை கூர்ந்து கவனித்தவர்கள் அவரது உள்ளக் கிடக்கையை தெளிவாக அறிந்து கொண்டிருப்பர்.

'அர்த்தமற்ற யுத்த நிறுத்தத்துக்கு நாம் தயாரில்லை. சமாதானத் தீர்வுக்கான பேச்சுவார்த்தையை தொடங்கி அது திருப்தி தரும் விதத்தில் தொடருமானால் நாம் யுத்த நிறுத்தத்தைப் பற்றிப் பேசலாம்" என்று தனது அரசின் கொள்கையை வெளிப்படுத்திய அவர் முடிவில் 'யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வராமல் சமாதானம் சாத்தியமில்லை என்று அறிவித்த போது உங்களுக்குக் கொஞ்சம் குழப்பமாகத் தான் இருந்திருக்கும். ஆனால், 'திருப்தி' வரும் போது யுத்த நிறுத்தம் பற்றிப்பேசும் ஒருவர் உண்மையில், பேசுவது அதுபற்றி அல்ல, அந்தத் 'திருப்தி' வரும்வரை செய்யப்படும் யுத்தம் பற்றியே என்பது வெளிப்படை.

தவிரவும், சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் ஒரு அணி தனது 'திருப்தி' என்று எதை எடுத்துக் கொள்கிறது என்பது முக்கியமானது. இரு தரப்பும் இரண்டு அந்தங்களில் நின்றபடி பேச இறங்கும்போது, விட்டுக் கொடுப்புக்கள் நிச்சயம் அவசியமானவை. அந்த விதத்தில் புலிகள் கேட்கும் சுயநிர்ணய உரிமை, தாயகக் கோட்பாடு என்பவற்றின் அடிப்படையில் பேசுவதற்காக இறங்கிவர அரசு தயாராக இருக்கப் போவதில்லை. அல்லது அதற்கு தயார் என இதுவரை கூறவில்லை என்பதால் அரசு திருப்தியை எப்படிக் காணப் போகிறது?

அப்படியானால், பிறகு யுத்த நிறுத்தம் எப்படிச் சாத்தியமாகப் போகிறது?

ஆக, அவரது யுத்த நிறுத்தம் பற்றிய வார்த்தைகள் யுத்தத்தினைத் தொடர்வதற்கான வியாக்கியானங்களாகவே தோன்றுகின்றன.

அவருடைய சமாதான உரை சமாதான முயற்சிக்கான கதிர் தென்படுகிறது என்ற அவரது நம்பிக்கையை வெளிப்படுத்திய போதும், அவர் அதற்கான முழு மனோ நிலையில் இல்லையென்பதை 'வீரம் செறிந்த' படைவீரர்களின் நாட்டின் ஒருமையைக் காப்பதற்காக ஆற்றிய தியாகம் பற்றிக் குறிப்பிடும் போது தெளிவாகத் தெரிந்து விடுகிறது. உண்மையில், அவர் சமாதானத்தில் அக்கறைப்படுகின்றாரா அல்லது மேலும் மேலும் பிரதேசங்களைக் கைப்பற்றுவதில் ஆர்வம் காட்டுகிறாரா என்ற கேள்வி எழுகிறது.

ஆக, அவரது இந்தப் பேச்சும் யுத்தத்திற்கான - அதைத் தொடர்வதற்கான ஒரு அறிவிப்பாகவே அமைந்துள்ளது.

உண்மையில், சமாதான முயற்சிகள் மூட்டம் கட்டியுள்ள ஒரு சூழலில், ஒரு அரசுத் தலைவரின் உரையின் ஆரம்பமே அது பற்றியதாக இருந்திருக்க வேண்டும். சமாதான முயற்சிகளுக்கான தயாரிப்புக்களையும் தமது தயார் நிலையையும் வெளிப்படுத்துவதாக அது இருந்திருக்க வேண்டும். 'எமது படைகளால் இன்று வழிக்கு கொண்டு வரப்பட்டிருப்பதால் தான் அவர்கள் பேச்சுவார்த்தைக்கான எமது பகிரங்க அழைப்புக்கு செவிசாய்த்திருக்கிறார்கள் என்று தொடங்குபவரை சமாதானத்துக்கான ஆர்வத்தைக் கொண்டிருக்கும் ஒருவராகக் கொள்வது எப்படி?

ஆக, ஜனாதிபதிக்குத் தேவை சமாதானம் அல்ல.

அவரது யுத்தமற்ற சமாதானம் புலிகளின் தோல்வியின் பின்னான சமாதானம்.

அவரது சமத்துவம் என்பது இனங்களுக்கிடையிலான சமத்துவமல்ல.

அவருக்குத் தேவை யுத்தம் - தொடரும் யுத்தம்.

அதற்காக அவர் போட்ட மிகப்பெரிய குண்டுதான், அவரது சுதந்திர தினவிழாப் பேச்சு என்கிற குண்டு!

# பத்து வருடமாகத் தொடரும் தடை சட்டத்தில் இல்லை!

– கே.ஆர்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பகுதிக்கான போக்குவரத்தில் பல பிரச்சினைகள் தீர்க்கப்படாமலே உள்ளது வெளிப்படையான விடயம்.

இதில் இன்னுமொரு மோசமான விடயத்தையும் நாம் கவனிக் கவேண்டும். பார ஊர்திகளில் வன்னிக்குக் கொண்டு செல்லப்படும் சுமைகளின் அளவு காலத்திற்குக் காலம் மட்டுப்படுத்தப்பட்டு வருகின்றது. வன்னிக்கு பொருட்களை அனுப்புவதற் கென்று குறிப்பிட்டளவு தொகைக்கு அனுமதி வழங்கப்படுகின்றது. ஆனால் அந்தத் தொகை முழுவதும் மாதாமாதம் அனுப்பப்படுவதில்லை.

கடந்த ஜனவரி மாதம் வன்னிக்கு 542 பாரஊர்திச் சுமைகள் அனுப்பப்பட்டிருக்க வேண்டும். அனுப்பியதோ 278 ஆகும் இந்தத் தடை ஏன்? கடந்த ஆண்டும் வன்னிக்கு அனுப்பப்பட வேண்டிய பாரஊர்த்திச் சுமைகளில் 2709 பாரஊர்த்திச் சுமைகள் அனுப்பப்படவில்லை. இதனால் வன்னியில் பல பொருட்கள் தட்டுப்பாடாகவும் விலைஅதிகமாகவும் உள்ளது. மருந்துப் பொருட்கள் மட்டுப்படுத்தப்படுவதால் வைத்தியசாலைகள் தமது பணியினை சரிவரச் செய்ய முடியாதுள்ளதாக பல தடவை தெரிவித்துள்ளன. இந்தப் பாரஊர்திகள் மட்டுப்படுத்தப்பட்டு வருவது தொடர்பாக வடபிராந்திய பாரஊர்தி சங்கப்பிரதிநிதிகள் தமது கவலையினைத் தெரிவித்துள்ளனர்.

இவை இப்படியிருக்க வன்னியிலிருந்து படையினரின் கட்டுப்பாட்டிற்குள் வரும் மக்கள் மீண்டும் திரும்பும் போது தமது வாழ்க்கையினைக் கொண்டு செலுத்த வியாபார நோக்கத்துடன் பொருட்களை எடுத்துச் செல்கின்றனர். இவர்கள் கொண்டு செல்லும் பொருட்களுக்கு தடையுள்ளது. இதில் வெடிமருந்துத் தடை நியாயமான தடை. ஆனால் தடையாக உள்ளதோ வாகன உதிரிப்பாகங்கள், மிதிவண்டி உதிரிப்பாகங்கள், மின்கலங்கள், எரிபொருள், மருத்துவப் பொருள், ஆகியவற்றுடன் பல்வேறு உணவுப் பொருட்களுக்கும் தடை உள்ளது. கடந்த காலங்களில் பல்வேறுபட்ட பாதைகளினூடாக வன்னிக்கான போக்குவரத்து நடைபெற்று வந்துள்ளது. இதில் தாண்டிக்குளமூடான போக்குவரத்தின் போது மக்கள் பட்ட அவலமோ பெரும் துன்பம் தான். சீனி, புளி, மா, அரிசி, உருளைக்கிழங்கு, என பல பொருட் கள் ஒவ்வொன்றும் ஐந்து கிலோ அளவு மட்டுமே கொண்டு செல்லலாம். மண்ணெண்ணை, தேங்காயெண்ணை ஐந்து லீட்டருக்கு மேல் கொண்டு செல்ல முடியாது. இப்படி அடுக்கிக் கொண்டு போகக் கூடியளவு பெரும் பிரச்சினையான விடயமிது. இதை மீறிப் பொருட்கள் கொண்டு செல்லப்பட்டால் எந்தவிதமான கதையுமில்லை. திருப்பி அனுப்பி விடுவார்கள். இதில் மக்கள் அங்குமிங்கும் ஓடித்திரிவார்கள்.

சிலர் கெஞ்சிக் கேட்டும் பயனில்லாது தமது பயணத்தினை தடைப்படாமல் தொடர்வதற்காக பொருட்களை திரும்பி வரும் போது பெறும் வகையில் யாரிடமாவது ஒணப்படைத்துச் செல்ல நினைப்பர். இதனால் திருப்பி அனுப்பப்படும் பொருட்களைப் பாதுகாப்பாக வைத்துத் தரவென பல கடைகள் முளைத்தன. ஒரு தொகைப் பணத்தை பெற்றுக் கொண்டு பொருட்களை பாதுகாத்துத் தருவதாகக் கூறி பணவசூலிப்பு அமோகமாக நடக்கும். பலதடவை பொருட்கள் மீளவும் கொடுக்கப்படாமலும் இருந்துள்ளது வேறு கதை. தாண்டிக்குளத்தில் இருக்கும் போது தான் இந்த நிலை. நொச்சிமோட்டை, பேயாடி-கூழாங்குளம், மூன்றுமுறிப்பு, உயிலங்குளம், மாங்குளம் போன்ற இடங்களில் சோதனைச்சாவடிகள் அமைக்கப்பட்டிருந்த வேளைகளில் தடை செய்யப்பட்ட பொருட்கள் எனக்கூறி தமக்குத் தேவையான பொருட்களை படையினர் எடுத்து விடுவர். பலபெறுமதியான பொருட்களைக் கொண்டு செல்லும் பொதுமக்கள் செய்வதறியாது நிற்க குறித்த பொருட்கள் கொண்டு செல்லத் தடையெனக் கூறி அவற்றைப் படையினரே தமதாக்கிக் கொண்ட பல சம்பவங்கள் அந்தக் காலப்பகுதியில் நடைபெற்றிருக்கின்றன.

தடையெனக் கூறி எடுக்கப்படும் பொருட்களின் பட்டியலை எழுதப் போனால் புகைப்படச்சுருள், அலுமினியப் பாத்திரங்கள், கடுமையான நிறமுடைய உடுபிடவைகள் என அடுக்கிக் கொண்டே போகலாம். எவை தடை செய்யப்பட்டவை என்பது படையினனின் தேவையையும் மனநிலையையும் ஒட்டியது என்பது தான் உண்மை.

இப்பொழுது வன்னிக்கான போக்குவரத்து பிராமணாலங்குளம் ஊடாக நடைபெறுகின்றது. இந்தப்பாதையூடான போக்குவரத்தில் மக்களுக்கு பல எழுதப்படாத சட்டங்களை படையினர் விதித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக எதுவித நடவ்டிக்கையும் எத்தரப்பினராலும் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் அண்மையில் வவுனியா நீதிமன்றத்தில் நடந்த சம்பவமொன்றோ பல உண்மைகளைப் பறைசாற்றியுள்ளது. கடந்த [illegible] திகதி பிராமணாலங்குளம் ஊடாகக் கொண்டுசென்ற பொருட்கள் தடைசெய்யப்பட்டவை எனக் காரணம் காட்டி படையினரால் பறித்தெடுக்கப்பட்டவற்றினை பிராமணாலங்குளம் பொலிஸ் பொறுப்பதிகாரி வவுனியா நீதிமன்றத்திற்கு கொண்டுவந்து இந்தப் பொருட்கள் கைவிடப்பட்ட பொருட்கள் எனக் கூறி ஒப்படைத்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தின் போது தடைசெய்யப்பட்ட பொருட்கள் எனக் கூறி படையினரோ, பொலிசாரே பொருட்களை கைப்பற்றவோ, பறிமுதல் செய்யவோ முடியாதென வவுனியா மாவட்ட நீதிவான் எம். இளஞ்செழியன் கூறியுள்ளார். மக்களிடமிருந்து பொருட்களை பறிப்பதோ அல்லது அவர்களின் சம்மதத்துடனோ பெறுவதென்பது சட்டத்திற்கு முரனானது தடைசெய்யப்பட்ட பொருட்களைக் கொண்டு செல்பவரை பொருட்களுடன் கைது செய்து நீதிமன்றத்தின் முன் நிறுத்த வேண்டுமெனவும் அவர் உத்தரவிட்டுள்ளார். அப்படியானால் பத்துவருடமாகப் படையினர் பறித்தெடுத்தது சட்டத்தின்படி குற்றமாகும். எந்தச் சட்டம் இந்தத் தவறை இழைத்தவர்களைத் தண்டிக்கப் போகின்றது?

மாதிரிப் பாராளுமன்ற விவாதம் பற்றிய அபிப்பிராயங்கள்

பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதி மாலை 7.30 மணிக்கு ரி.என்.எல் தொலைக்காட்சியில் விழிப்பு நிகழ்ச்சியைப் பாருங்கள்




செவ்வாய் தோறும் இரவு 7.25 மணிக்கு ரி.என்.எல் தொலைக்காட்சியில்

எரியும் இனப்பிரச்சினை ! மக்களின் அவலங்கள் போதும் !!

இன நல்லிணக்கம் மூலமான சமாதானத்திற்கு இளையவர்களின் பணி !!!

சமஉரிமை, சகவாழ்வு, சமாதானம்

இலங்கையின் வரலாற்றில் இனப்பிரச்சினை தொடர்பான முதலாவது தமிழ் தொலைக்காட்சி சஞ்சிகை நிகழ்ச்சி இது

ஆசிரியர் : பா.வசந்தன், வெளியீட்டாசிரியர் : எஸ்.கே.விக்னேஸ்வரன், 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட. அச்சுப்பதிவு : நவமக, 66/04, தர்மாராம வீதி, இரத்மலானை. 07.02.2001